# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMA... 1 2 APR 196... MADRAS



[கள்ளழகர்] திருக்கோலம்—அழகர்கோயில்

மாலை 8] விசுவாவசு பங்குனி—ஏப்ரல் 1966 [மணி 7

சென்னை அரசாங்க அறநிலையப்



திருமயிலைக் கபாலீச்சுரத்தில் சிவராத்திரிப் புனித நாளில், தருமபுர ஆதீனத்தின் சார்பில், சமயப் பிரசாரத்தைக் காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள் தொடங்கி வைத்தருளியபோது நமது அறநிலைய ஆணையர் அவர்கள் உரை நிகழ்த்துதல் (18—2—1966.)

## பொருள் அடக்கம்


1. திரு அம்பர்ப் புராணம்
2. விடை தெரியுமா?
3. விடை விளக்கம்
4. திருநாவுக்கரசரின் ஒரு திருத்தாண்டகம்
5. சமயமும் விஞ்ஞானமும்
6. இறைவழிபாடு
7. சங்கற்ப நிராகரணம்
8. மதுரகவியும் மணிமொழியும்
9. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
10. திருப்பாவையில் ஆழ்வார்களின் திருப்பள்ளியெழுச்சி
11. முட்டம் நாகேச்சுவரம்
12. மதச்சார்பற்ற நிலை



**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

**ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.**

**சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.**

—ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 8] விசுவாவசு பங்குனி-ஏப்ரல் [மணி 7

# திரு அம்பர்ப் புராணம்

**முன்னுரை :**

தமிழ் நூல்களுள் மிகப் பெரும்பாலானவை சமய நூல்களாகவே திகழ்கின்றன. சமயச் சார்பு அமையாத நூல் எதுவுமே தமிழில் இல்லை எனலாம். சமய நூல்கள் தோத்திரம் சாத்திரம் புராணம் எனப் பலவகைப்படும். சமயத் துறையிற் புராணங்களுக்குச் சிறப்பிடம் உண்டு.

**புராணங்கள் :**

புராணங்கள் மனித வாழ்வியல் உண்மைகளையும் அனுபவங்களையும், சுவை மிக்க அழகிய கவிதைகளின் வாயிலாக அறிவுறுத்துகின்றன. நம் முன்னோர்கள் அறிந்தும் ஆராய்ந்தும் அநுபவித்தும் உணர்ந்த செய்திகளை, நமக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வைத்துப் போந்த அறிவுக் கருவூலங்களே புராணங்கள் எனலாம். மிக நுண்மைத் தன்மை வாய்ந்த சூக்குமமான கருத்துக்களை, யாவரும் எளிதின் உணர்ந்து பயன் கொள்ளும்படி பருமை மிக்க தூல வடிவில் வைத்துப் புராணங்கள் விளக்குகின்றன. மக்கள் அனைவரும் அறிந்துகொண்டு கடைப்பிடித்து ஒழுகுவதற்குரிய உயர்ந்த நீதிகளையும் செய்திகளையும், புராணங்கள் அழகுறப் போதிக்கின்றன.

உற்றபிணியைத்தீர்த்து உடலுக்கு நலம் விளைக்கும் கசப்பான மருந்தை யுண்ண மறுக்கும் ஒருசில குழந்தைகளுக்கு, அவை விரும்பி யுண்ணும் பொருட்டு மருந்தின் மீது தேனும் சருக்கரையும் தீற்றித் தருதல் (குளஜிஹ்வாநியாயம்) போல, சுவைபயவாத பொருள்களையும் சுவை பெருகுமாறு நன்கினிது சொல்லவல்லன புராணங்கள் என்பது பொருந்தும். அருவமும் கடினமுமான தத்துவக் கருத்துக்களை அனைவரும் உணரும் வண்ணம், அவற்றிற்கு ஓர் உருவம் கொடுத்தும் வடிவம் அமைத்தும், எளிய இனிய கதைகளாகச் செய்து புலப்படுத்தும் கலைத்திறனில் புராணங்கள் சிறந்து பொலிகின்றன.

**புராணங்களின் சிறப்பு :**

இச் சிறப்பியல்பில் இந்தியப் புராணங்கள் மிகவும் தலை சிறந்து விளங்குகின்றன. அவைகள் செழித்தோங்கிப் பரந்து விரிந்து, சிறந்த அழகுடனும், நிறைந்த பொருள் வளத்துடனும் மிளிர்கின்றன. அவைகளை நாம் உணர உணர அவற்றின்

ஒளிமிக்க கனவுகளும், உயரிய இனிய கற்பனைகளும் நம்மனோர்க்கு வியப்பும் விம்மிதமும் விளைவித்து, அவற்றிற்கு அழகிய உருவம் கொடுத்த நம் முன்னோர்களின் நுண்மாண் நுழைபுலத்தினை வெளிப்படுத்துகின்றன. (1)

**தலபுராணங்கள் :**

இத்தகைய புராணங்கள் பொதுவாகப் பதினெட்டு எனப்படும். ஆனால் இவற்றின் வேறாகத் தமிழில் தலபுராணங்கள் எனப் பலநூல்கள் உள்ளன. சமயாசிரியர்களின் பாடல்பெற்ற தலங்கள் பலவற்றிற்கும் புராணங்கள் உண்டு. அவைகளே தலபுராணங்கள் என்று வழங்கப் படுகின்றன. இவற்றால் அவற்றின் பழமையும் பெருமையும் ஆகியவற்றை நாம் உணர்தல் கூடும். மேலும் அவைகள் இலக்கியச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் கூடப் பெற்று விளங்குகின்றன,

**மகாவித்துவான்**
**மீனாட்சி சுந்தரம் பிள்ளை :**

அண்மைக் காலத்தில் வாழ்ந்து, மிகுதியான தலபுராணங்களைத் தமிழில் அழகிய கவிதை வடிவிற் பாடியருளியவர், திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களே ஆவர். சென்ற நூற்றாண்டில் விளங்கிய அக்கவிஞர் பெருமான் (கி.பி.1815-1876), தாம் இயற்றிய பல்வேறு வகையான நூல்களில், தலபுராணங்களின் வரிசையில் மட்டும் ஏறத்தாழ 22 புராணங்களைப் பாடியிருக்கின்றார்கள். இத்தகைய தொரு செயல், இறையருள் பெற்ற வித்தகர்கட்கே யல்லாமல், மற்றையோர்கட்கு இயல்வதன்று!

**கருத்தும் கவிதையும் :**

உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராக மதித்துப் புகழப் பெறுபவர் ஆகிய **வில்லியம் வோர்ட்ஸ் வொர்த்** என்பவர் (கி.பி. *1770–1850*) **"குயிலுக்கு"** (To the Cuckoo) என்னும் தலைப்பில் தாம் எழுதுவதற்கு முற்பட்ட கவிதையில், அக் குயிலின் குரல் பற்றிக் கொடுக்கத் தக்க பொருத்தமான அடைமொழி (Epithet) ஒன்றனைக் கண்டுபிடித்து அமைக்க முடியாமல், எத்தனையோ பல சொற்களை மாற்றி மாற்றித் திருத்தி அமைத்து முயன்று பார்த்தும், அவைகளுள் ஒன்றேனும் செவ்வியதாகவும் பொருத்தமாகவும் அமையாமையால், மனநிறைவு எய்தாமற் பல ஆண்டுகள் வருந்தி முயன்று வந்தனர். கடைசியாக 43 ஆண்டுகள் கழித்துத் திடீர் என்று ஒருநாள் 'அலைந்து திரியும் குரல்' ('Wandering Voice') என்னும் அடைமொழித் தொடர், அவர்தம் உள்ளத்தில் உதிப்பதாயிற்று. அதனையே அக் கவிதையில் அவர் அமைத்துப் பின்னர்த் திருத்திப் பதிப்பித்தார். இச்செய்தியினை அவர் தம் சகோதரியார் ஆகிய **'டொரத்தி வோர்ட்ஸ் வொர்த்'** அவர்கள் குறிப்பிட்டுள்ளார் **(2)**. கருத்து உதித்தலும், கவிதை அமைத்தலும் மிகவும் கடினமான வேலை என்பதற்கு இது சான்று!

இன்னோரன்ன மேலை நாட்டுப் பெருங் கவிஞர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் அனுபவங்களையும் பற்றி, நாம் நன்கறிந்து உணர்ந்து கொண்டு

---

(1) *"Indian mytholgy is richer, vaster, very beautiful, and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these brightest dreams and lovely fancies, and out of what gold mine of thought and imagination they dug them."

—*Shri Jawaharlal Nehru*,

The Discovery of India, P. 66.

(2) " Dorothy Wordsworth records in her 'Journal' that her brother William had tried to seek an epithet for the Cuckoo, and only after 43 years found himself able to express the sound of the Cuckoo's 'Wandering Voice'."

*I. L. Lowes*,

Convention and Revolt in Poetry, P. 6

கருதுவோமாயின், மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் அருமை பெருமைகள் நமக்குப் புலனுகும்.

**அம்பர்ப் புராணம்:**

அம்பர் என்பது சோழநாட்டில் உள்ள பழமை வாய்ந்த தலம். புறநானூறு (385), நற்றிணை (141) முதலிய நூல்களில் இதன் பெயர் குறிப்பிடப் பெற்றிருப்பதனுல், சங்க காலத்திலேயே இவ்வூர் மிகச் சிறப்புடையதாகத் திகழ்ந்தமை அறியலாம். 'அம்பர்கிழான் அருவந்தை', 'அம்பர்கிழவோன் சேந்தன்' என்பவர்கள் இவ்வூரில் பழங்காலத்தில் வாழ்ந்த பெருமக்களாக அறியப் பெறுகின்றனர். திருஞானசம்பந்தர் பாடியருளிய பதிகம் ஒன்று இதற்கு அமைந்திருத்தலின், இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகட்கு முன்னரே, இது புகழ்பெற்ற தலமாக விளங்கியமை புலனுகின்றது. மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இதற்குத் தலபுராணம் இயற்றியுள்ளார். அத்தலபுராணத்தின் பாடல்கள் அனைத்தும் சுவை வாய்ந்தனவாக இருப்பினும், தாலிபுலாக நியாயம் பற்றி ஒரு சில பாடல்களின் பொருளை மட்டும் இங்குக் காண்போம்.

**பிரமபுரேசர்:**

திரு அம்பர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குப் பிரமபுரேசர் என்பது பெயர். பிரமன் பெருமானை வழிபட்டு அருள் பெற்றதனுல், அப்பெயர் ஏற்பட்டது. அவரைத் தேவர்களும் தேவேந்திரனும் பிரமனும் திருமாலும் சோமாசி மாறர் கோச்செங்கட் சோழர் முதலிய மற்றவர்களும் வழிபட்டார்கள். பிரமபுரேசர் அவர்களின் பணிகளை ஏற்றருளி, அவர்கள் விரும்பிய வரங்களையெல்லாம் அளித்தார். அவரைத் தியானித்து வாழ்வோமாக என்பது துதி. இதன்கண் வரும் சொற்ருெடையமைப் பின் சிறப்பு இன்புறுதற்குரியது.

பூமேவு கற்பகநாட் டிமையவரும்
அமையவரும் புகழ்சால் வேந்தும்,
பாமேவும் மறையானும் முறையானுந்
திக்கண் அவற் படைத்து ளானும்,
மாமேவும் மற்றையரும் உற்றயரும்
பணியேற்று வரங்கள் நல்கிக்
காமேவு திருஅம்பர் அமர்பிரம
புரேசர்பதம் கருதி வாழ்வாம்.

**பூங்குழல் நாயகி:**

திரு அம்பர்க் கோயிலிலுள்ள அம்பிகையின் பெயர் வம்புவனப் பூங்குழல் நாயகி என்பது. இதனைச் சுகந்த குந்தளாம்பிகை என வடமொழியிற் கூறுவர். கலைமகள் திருமகள் கொற்றவை என்னும் மூவருமே ஒருருவாகத் திகழ்தல் போலப் பூங்குழல் நாயகி விளங்குகின்ருள். தன் அடியவர்களுக்கு அவள் கல்வி செல்வம் வெற்றி ஆகியவைகளையெல்லாம் அளிக்கின்ருள். கல்வியை விரும்புவோர்க்குக் கலைமகள் வாழும் **வெண்தாமரை** போலவும், செல்வத்தை விழைவோர்க்குத் திருமகள் தங்கும் **செந்தாமரை** போலவும், வெற்றியைப் பெற விரும்புவோர்க்குக் கொற்றவை வீற்றிருக்கும் **பசுந்தாமரை** போலவும், பூங்குழல் நாயகியின் அழகிய திருமுகம் பொலிந்து தோன்றுகின்றது. வேண்டுவோர் வேண்டும் வரங்களையெல்லாம், அவரவர்கள் விரும்பி வழிபடும் வடிவங்களின் நின்று, அவரவர்க்கு ஏற்றபடி அம்பிகை அருள் புரியும் மாண்பினை, இங்ஙனம் மகாவித்துவான் அவர்கள் பின்வரும் துதிப் பாடலிற் குறிப்பிடுகின்ருர்.

கலைபொருள்நச் சுநர்விளர்த்த சிவந்த
அரவிந்தம்எனக் கருதற் கேற்ப
அலைவரும்பொன் வாணிஅமர் அங்கிறத்
தாமரையேயாய், அமரார் அஞ்சும்
நிலைவிழைநர் பசுங்கமலம் எனக்குறித்தற்
கேற்புற அங் நிகழ்ச்சி யேயாய்,
மலைவகலப் பொலியும்முக வம்புவனப்
பூங்குழல்பொன் மலர்த்தாள் போற்றி.

**நால்வர் முதலினோர் துதி:**

(1) இறைவனை வழிபடும் நெறிகள் சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு வகைப்படும். இவற்றைத் தமிழில் சீலம் நோன்பு செறிவு அறிவு என மணிவாசகர் குறிப்பிடுகின்றார். இந் நான்கு நெறிகளிலும் வழிபடுவோர், சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியம் என்னும் நான்கு வகையான பேறுகளுள் ஒவ்வொன்றை முறையே அடைவர் என்று நூல்கள் கூறுகின்றன. ஆனால் இதற்கு மாருகத் திருஞானசம்பந்தர், தம்முடைய திருமணம் காண்பதற்காக ஆச்சாபுரம் என்னும் திருநல்லூர்ப் பெருமணத்திற்குப் போந்த பலதிறப்பட்ட மக்கள் அத்தனை பேரையும், சாயுச்சியம் என்னும் முடிந்த முடிபான வீடு பேற்று நிலையை அடையும்படி செய்துவிட்டார். அத்தகைய பேராற்றற் பெருஞ் சிறப்பு மிக்க **திருஞானசம்பந்தர்** திருவடிகளைப் பணிந்து தொழுவோம்,

அளிகிளர் சரியை யாதி
ஆற்றுநர் அடையும் பேறு
தெளிகிளர் ஈதிது என்று
தெரிக்கும் நூல் இறைக்கு மாருச்
களிகிளர் திரும ணத்திற்
கலந்தநாற் றிறத்தெல் லோரும்
ஒளிகிளர் சோதி சேர
உறுத்தினர்க்கு அடிமை செய்வாம் !

(2) திருவீழிமிழலையில் நாடோறும் 1008 தாமரை மலர்கள் கொண்டு பூசித்து ஒருநாள் அவற்றுள் ஒன்று குறைந்ததனால் தாமரை போன்ற தம்முடைய கண்ணையே அதற்கு ஈடாகப் பறித்து அருச்சனை புரிந்து, திருமால் அரிய முறையில், சிவபெருமான்பால், சக்கராயுதம் பெற்ருர். அங்ஙனம் இன்றி ஒரு திருப்பதிகம் பாடியே திருத்தூங்கானை மாடம் என்னும் தலத்தில் சிவபெருமான்பால் மிகவும் எளிய முறையில் சூலாயுதம் (சூலக்குறி) பெற்ற சிறப்புடைய **திருநாவுக்கரசர்** பாதங்களைப் பணிவோம்.

ஆலம்பெற் றிருண்ட கண்டத்து
அண்ணல்பால் நேமி கொள்ளக்
காலம்பெற்று அலர்ஒன் றற்காக்
கண் இடும் மால் போலாது,
சீலம்பெற்று அருமை யாம்ஓர்
செந்தமிழ்ப் பதிகம் பாடிச்
சூலம் பெற் றுயர்ந்த ஐயர்
துணையடி முடிமேல் வைப்பாம்.

(3) கூற்றுவனைக் கண்டு, தாம் நிலவுலகில் தங்க வேண்டிய காலம் முடிவுற்றது என்று அறிந்து கொண்டு, சரயு நதியில் மூழ்கி மறைந்து, தன்னுடைய மூல வடிவம் கொண்டு இராமபிரான் வைகுந்தம் சார்ந்தார் என இராமாயணத்தின் உத்தரகாண்டம் கூறுகின்றது. அங்ஙனம் இல்லாமல், "இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம் வந்து எதிர் கொள்ள" வெள்ளை யானையின் மீது ஏறி அமர்ந்து, **சுந்தரர்** திருக்கயிலாயம் சேர்ந்தார். அத்தகைய மாட்சி மிக்க சுந்தரரின் திருவடிகளை நாம் நம் தலைமேற் சூடிப் போற்றுவோம்.

அதிர்சினக் கூற்றுக் கண்டு, ஓர்
ஆற்றினுள் முழுகி மேனி
பிதிர்தர வேறு தாங்கிப்
பிறங்கு வைகுந்தம் சார்ந்த
கதிர்மணி வண்ணன் நாணக்,
காமர்வெண் களிற்றின் மேற்கொண்டு
எதிரில்தண் கயிலை சார்ந்தார்
இணையடி முடிமேல் வைப்பாம்.

(4) திரிபுர அசுரர்களைக் கொல்லுவித்தற்பொருட்டுத் திருமால் புத்தர் அவதாரம் எடுத்து, தம் சூழ்ச்சியினால் அவர்களுக்குப் பாசண்ட மதத்தைப் போதித்து, அவர்களின் சிவபக்தியை மாற்றிக் கெடுத்து அழியும்படி செய்தார் என்பது திருவதிகைப் புராணத் தலவரலாறு. மாணிக்கவாசகர் புத்தர்களை வாதில் வெற்றி கொண்டு, சைவ சமயத்தை நிலை நாட்டியவர். ஆதலின் புத்தர் அவதாரம்

எடுத்த திருமால், ஒருவகையில் அச்சமும் நாணமும் கொள்ளும்படி மாணிக்கவாசகர் விளங்குகின்றார். அவரை நாம் வணங்கி உய்வோமாக.

புத்தனைப் நூல்ஒன்று ஓதிப்
புன்மையே புரிந்தோம் இந்த
அத்தன் ஆய்தரின் என்ஆகும்?
என்றுமால் அச்சம் கொள்ளச்
சுத்தனைய் அவன்நூல் ஏற்றார்
தொகையெலாம் செக்கில் இட்ட
முத்தனைய் மணிநேர் வார்த்தை
முதல்வன்தாள் முடிமேற் கொள்வாம்.

(5) வலன் என்னும் அசுரனை யாகப் பசுவாகப் பெற்று அந்த ஒரு பசுவைக் காப்பதற்கே இந்திரன் எவ்வளவோ துன்பங்களைப் பட நேர்ந்தது. அதனை அறிந்தும் அஞ்சாமல், சேய்ஞலூரில் எத்தனையோ பல பசுக்களை ஓர் இடையூறும் இன்றிக் காத்துப் புரந்தருளிய **சண்டீசர்** திருவடிகளைத் தொழுவோம்.

வலன்உயிர் குடித்த தோன்றல்
ஒருபசுப் புரக்கும் மாண்பில்
கலகம்எண் ணில்ல மேவல்
கண்டும், மற்று அதற்கு அஞ்சாது
நலன்அமை சேய்ஞ லூரில்
நாளும் ஓர் இடையூறு இன்றிப்
பலபசுப் புரந்த ஐயன்
பாத தாமரை உட்கொள்வாம்.

(6) அறுபத்து மூன்று நாயன்மார்களின் **பாத + கமலங்களே** (திருவடித் தாமரைகளே), நம்முடைய **பாதக + மலங்களை** (மிகக் கொடிய தீவினைகளை) யெல்லாம் சிதைக்கும்.

(7) சைவ சமயத்தின் உயர்ந்த பரிபாஷை (குறியீடு)களையும், பக்தியின் மேன்மையினையும், பக்தி செய்யும் முறைமைகளையும், அதனாற் பெறக்கூடிய பேறுகளையும் எல்லாம் திறம்படத் தெளிவாக விளக்கி யருளிய **சேக்கிழார்** பெருமானின் அழகிய திருவடிகளைத் துதிப்பாம்.

ஓங்கு சைவத்து உயர்பரி பாடையும்
வீங்கு பேரொளிப் பத்திசெய் மேன்மையும்
தேங்கு பேறும் தெரித்தருள் சேக்கிழான்
பாங்கு சேர்மலர்ப் பாதம் பரசுவாம்

**அவையடக்கம்:**

(1) பிரமதேவர் வழிபட்ட திருவம்பர்ப் பிரமபுரேசரின் புராணம் பாடுவதற்கு உனக்குத் தகுதியில்லை என்று சிலர் கூறக்கூடும், ஒரு காலத்தில் திருமால் முதலிய தேவர்களும் கூடத் தன்னை அசைக்க முடியாதபடி நிலைபெற்று நின்று, ஒரு **துரும்பும்**கூட வெற்றி பெற்றதுஎன்னும் வரலாற்றைக் கேனோபநிடதம் கூறுகின்றது. ஆதலின் இறையருள் பெற்றால், அதனைத் துணையாகப் பற்றினால், எளியவன் ஆகிய யானும் அதனைப் பாடுதல் இயலும்.

(2) தமிழில் உயிர் எழுத்துக்கள் குறில் நெடில் என இருவகைப்படும். குறுகிய ஓசையையுடைய குற்றெழுத்துக்கள் இருத்தல் பற்றியே, நீண்ட ஓசையையுடையன என்னும் பொருளில் மற்றைய எழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் எனப் பெயர் பெற்றன. ஆனால் நெட்டெழுத்துக்களுள் ஆ ஈ ஊ ஏ ஓ என்னும் ஐந்திற்கு மட்டுமே, அ இ உ எ ஒ என்று இணையான குற்றெழுத்துக்கள் உள்ளன. ஐ ஔ என்னும் இரண்டுக்கும் இணையான குற்றெழுத்துக்கள் இல்லை.

"ஐஔ இஉச் செறிய முதல்எழுத்து
இவ்விரண்டு ஓர்இன மாய்வரல் முறையே"

என்பது நன்னூல். ஆயினும் இரண்டு மாத்திரை யளவு ஒலித்தல் ஆகிய காரணம் பற்றி ஒரு வகையில் ஐ ஔ என்னும் இரண்டும் கூட நெட்டெழுத்துக்களே யாகும் என்று இலக்கண நூலார் கொள்வர். அம்முறைப்படி அறிவிலாத என்னுடைய இழிந்த கவிகளையும்கூட, இறைவனுடைய புகழ் பற்றியனவாக இருக்கும் காரணம் பற்றி, அறிவுடையோர்களின் சிறந்த பாடல்களோடு சேர்த்துப் பெரியோர்கள் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளுவார்கள்.

"செறிகுறில் உடைஐந் தோடு
குறில்இலா இரண்டும் சேர்த்து
மறிவில்நெட் டுயிர்ஏழ் என்று
மாத்திரை நோக்கிக் கொள்வார்;
அறியிய லுடைய பாவோடு
இயலிலா அடியேன் பாவும்
குறியிலான் சரிதம் நோக்கிக்
குறிகொள்பா என்றே கொள்வார்"

(3) நல்ல சிறந்த சொற்களையே கொண்டு இறைவனைத் துதிப்பதுதான் முறை, அங்ஙனம் இயலாமல் முட்டுப்பாடு நேர்ந்தால், புல்லிய இழிந்த சொற்களையேனும் கொண்டு போற்ற முற்படுதல் கடமையே யாகும். **மூர்த்தி நாயனார்** சிறந்த நல்ல சந்தனக் குறடுகள் கொண்டு சாந்து அரைத்து இறைவனுக்குச் சாத்தி வழிபட்டு வந்தாராயினும், அவை கிடைக்கப் பெருமல் முட்டுப்பாடு நேர்ந்த வழி தம்முடைய முழங்கையையே தேய்த்தார் அன்றே?

(4) **விராட்** (உலகமே உருவமாகக் கொண்டவன்), **சாம்ராட்** (பெருந்தலைவன்) என்னும் பெயர்களோடு, **சுராட்** (தனி முதற் பெருந்தலைவன்) என்னும் சிறப்புப் பெயரையும்கொண்ட 'மன்ற**மராட்டவன்'** (மன்று + அமர் + ஆட்டவன் — அம்பலத்தில் நடனம் புரிபவன்) ஆகிய சிவபெருமான், விரும்பத்தக்க சந்திரனோடு வெறுக்கத்தக்க பாம்பினையும் கூடச் சடையில் அணிந்து கொண்டிருக்கிறுன். அஃது எதற்குத் தெரியுமா? 'ஒன்றோடு **இராட்டையின்'** (இரு ஆட்டையின்; அஃதாவது ஒன்றோடு இரண்டு சேர்ந்த மூன்றும் ஆண்டில்) எழுந்த திருஞானசம்பந்தரின் சிறந்த பாடல்களோடு, என்னுடைய இழிந்த பாடல்களையும் விருப்பு வெறுப்பு இல்லாமல், உயர்வு தாழ்வு நோக்காமல், ஏற்றுக்கொண்டு அருள்புரிதலை யுணர்த்துவதற்கே யாகும்.

விராட்டொடு சாம்ராட் என்னும்
நாமத்தும் விசேட மாகச்
சுராட்டெனும் நாமம் பூண்ட
சுயம்பிர காசன் மன்ற
மராட்டவன் மதியொ டும்பாம்பு
அணிந்தமை மதிக்கின், ஒன்றோடு
இராட்டையின் எழன்முற் பாவோடு
என்னதும் ஏற்றற்கு அன்றோ?

(5) சிறந்த பெரிய கவிஞர்களைப்போல ஒன்றுக்கும் பற்ருத எளியவன் ஆகிய யானும் திரு அம்பர்ப் பிரமபுரீசர் மீது புராணம் பாடத் தலைப்பட்ட தன்மையினை ஆராய்ந்தால், திருமாலைப்போல யானும் உலகம் முழுவதையும் உண்பேன் என்று ஒரு **சிற்றெறும்பு** எழுந்ததனையும்; மலர்களிலுள்ள சிறிய தேனைத் தேடியுண்ணும் **தேனீ**யானது, அகத்திய முனிவரைப் போலக் கடல் முழுவதையும் யான் பருகுவேன் என்று கூறிப் புறப்படுதலையுமே போலும்.

(6) தனித்தனியே கருதிய வழி அஃறிணையாகக் குறிப்பிடப் பெறும் உயிரும் உடலும், தம்முள் ஒன்று சேர்ந்து அறிவு நலனும் எய்தப் பெற்ருல், **அஃறிணை** என்னும் குறைபாடு ஒழிந்து, **உயர்திணை** என்னும் சிறப்புப் பெறும். இதனை,

"காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் தீஎன வரூஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணை மேன"

"உயர்திணை என்மனுர் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனுர் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே"

எனவரும் தொல்காப்பியச் சூத்திரங்கள் உணர்த்தும். இங்ஙனம் அஃறிணை எனப்படும் உயிரும் உடலும் அறிவுடன் ஒன்று கூடுதலால் உயர்திணையாகிச் சிறப்புறுதல் போன்று, இழிதகவு மிக்க என்னுடைய சொற்பொருள்களும் கூட, இறைவனின் சரிதத்தோடு முழுவதும் சேர்தலினுல் சிறப்பை அடையும் என்பதற்கு, ஐயம் உண்டோ?

இழிதிணை உயிரும் மெய்யும்
இலங்கு அறிவொடும் இயைந்தே
இழிபு ஒழிந்து உயர்பு உற்ருற்போல்,
இறையவன் சரிதத் தோடும்
இழிதக வுடையேன் சொல்லும்
பொருளும் முற்றுற இயைந்தே
இழிபு ஒழித்து உயர்வு பூணும்
என்பதற்கு ஐயம் என்னே?

(தொடரும்) —ஆசிரியர்

# விடை தெரியுமா?

1. சிவபெருமானுக்குரிய பவன் உருத்திரன் மிருடன் ஈசானன் தாணு சம்பு சருவன் உக்கிரன் பர்க்கன் பரமேசுரன் என்னும் சிறப்புப் பெயர்களின் பொருளை விளக்குக.

2. திருவிசைப்பா என்பது யாது? அதனை இயற்றிய ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. 'இராவுத்தன்' என்னும் பெயரிட்டு எந்தக் கடவுளை, எந்த அடியார், எந்த நூலில் பாடியிருக்கின்றார்?

4. துறைகாட்டும் வள்ளல், வாக்குக் காட்டும் வள்ளல், வழிகாட்டும் வள்ளல், கைகாட்டும் வள்ளல் என்னும் மூர்த்திகளின் பெயர்க் காரணங்களையும், அம்மூர்த்திகள் முறையே எழுந்தருளியுள்ள தலங்களின் பெயர்களையும் குறிப்பிடுக.

5. 'காடுகிழாள்' என்பது யாருக்குப் பெயர்? அத்தெய்வத்திற்குரிய வேறு பெயர்களையும் சுட்டுக,

6. சமயத்துறையில் நம்மனோர் பெறுதற்குரிய சிறந்த பதினாறு பேறுகள் எவை யெவை?

7. போக மண்டபம், புஷ்ப மண்டபம், தியாக மண்டபம் என்னும் பெயர்கள், வைஷ்ணவ பரிபாஷையில் முறையே எவ்வெத் தலங்களைக் குறிக்கும்.

8. ஸ்ரீ கண்ணபிரானின் பட்டத்துத் தேவிமார்கள் யார் யார்? அவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

9. 'ஸ்வயம் வியக்தம்' (தாமே வெளிப்பட்டவை) எனப் புகழ்ந்து போற்றப் பெறும் வைஷ்ணவ க்ஷேத்திரங்களைக் குறிப்பிடுக.

10. ஸ்ரீ மகாவிஷ்ணுவின் எந்தெந்த அம்சங்களாக ஆழ்வார்கள் தோன்றியருளினர்கள் என்பதனைச் சுட்டுக.

[விடை : மறுபக்கம் காண்க.]

# விடை விளக்கம்

(1) சிவபெருமானுக்குப் பவன் உருத்திரன் மிருடன் ஈசானன் தாணுசம்பு சருவன் உக்கிரன் பர்க்கன் பரமேசுவரன் என்னும் சிறப்புப் பெயர்கள் உண்டு. அப்பெயர்களின் பொருள்கள் முறையே வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1. | பவன் | — | எல்லாவற்றையும் தன்னிடம் இருந்து தோற்றுவிப்பவன். |
| 2. | உருத்திரன் | — | உயிர்களின் பிறப்பு இறப்பு ஆகிய நோய்களை நீக்கிக் குற்றங்களை எல்லாம் ஒருங்கே போக்குபவன். |
| 3. | மிருடன் | — | எல்லோரையும் சுகம் அடையும்படி செய்து, உரிய இடத்திற் சேரும்படி வைப்பவன். |
| 4. | ஈசானன் | — | தனக்கு மேற்பட்டோர் ஒருவரும் இல்லாதவன். |
| 5. | தாணு | — | சிறிதும் அசைவு இன்றி நிலை பெற்றிருப்பவன். |
| 6. | சம்பு | — | உயிர்களுக்கெல்லாம் வீடு பேற்றின்பத்தினைக் கொடுத்தருள்பவன். |
| 7. | சருவன் | — | கொடியவர்களைத் தண்டித்துக் கொல்லுபவன். |
| 8. | உக்கிரன் | — | சூரியன் சந்திரன் முதலிய கோள்களின் தோற்றம் மறைவு, கடல்கள் எல்லை கடத்தல் அடங்கி நிற்றல், நிலம் தீ நீர் வளி விசும்பு என்னும் ஐம்பூதங்களின் தோற்ற ஒடுக்கங்கள், ஆகியவற்றிற் கெல்லாம் காரணமாக நின்று, முறைப்படி நடத்துபவன். |
| 9. | பர்க்கன் | — | சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய மூன்றிற்கும் ஒளி கொடுப்பவன்; காயத்திரி முதலிய மந்திரங்களால் வழிபடப் பெறுபவன்; உயிர்களின் அறியாமை முழுவதையும் போக்கியருள்பவன். |
| 10. | மாதேவன் | — | எல்லையில்லாத பேரொளி மயமாக வீற்றிருப்பவன். |
| 11. | பரமேசுவரன் | — | ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் ஆற்றுபவன். |

" அடங்கலும் தன்பால் தோற்றம் ஆதலாற் பவன்; ஆன்மாக்கள்
மடங்கரும் பிறப்பு இறப்பு ஆமயம் தவிர்த் திடுதலால், தோம்
உடங்குகொல் உருத்திரன், யாவோரையும் சுகப்படுத்தி
இடங்கௌ வைத்தலாலே மிருடன் என்று இயம்பா நிற்பர்.

ஒருதனக்கு உயர்ந்தோர் இல்லா உண்மையினுல் ஈசானன்;
மருவு அசைவு அற்றுஇருக்கும் மாண்பு மேவுறலால் தாணு;
பொருவரும் முத்தி யின்பம் புணர்த்திடும் அதனுற் சம்பு;
வெருவுறத் துட்டரைக் கொல் விதத்தினுற் சருவன் என்பார்.

ஒண்கதிர் முதற்கோள் யாவும் உதித்தல் அத்தமித்தல்; ஒன்றில்
எண்கடல் கரைமேல் தாவாது அடங்குதல் இறத்தல்; பூமுன்
விண்கடை யாய பூதம் வெளிப்படல் ஒடுங்கல் ஆதி
எண்கொளத் தக நடத்தும் வலியின் உக்கிரனே என்பார்.

ஒளிகிளர் உருவால் என்றூழ உடுபதி அழற்கு நாளும்
ஒளிகொடுத் திடலால்; காயத்திரி முதல்உள மனுக்கள்
ஒளிகெழ உபாசித் தேத்தும் உண்மையால் ; உயிர்கட் கெல்லாம்
ஒளியுற அவித்தை முற்றும் ஒழித்தலால், பர்க்கன் என்பார்.

அளவரும் ஒளியோன் ஆகி அமர்தலினுல் மாதேவன்;
தளர்வற வினை ஐந்து ஆற்றும் தன்மையாற் பரமேசன்; சீர்
உளபல நாமம் இன்னும் உள்ளன சிவனுக்கே; அப்
பளகு இலாதவனே வேறே, பரம் எடுத்து உரைத்தி என்றார்."

—திரு அம்பர்ப் புராணம்,

மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை.

(2) 'திருவிசைப்பா' என்பது, சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாம் திருமுறையைச் சேர்ந்தது. திருவிசைப்பாவும், சேந்தனுர் அருளிய திருப்பல்லாண்டும் சேர்ந்து, ஒன்பதாம் திருமுறையாக விளங்குகின்றன. திருவிசைப் பாத் திருப்பதிகங்கள் 28, பாடல்கள் இப்போது உள்ளவை 301. ஒன்பதாம் திருமுறையிலுள்ள திருவிசைப்பாத் திருப்பதிகங்களைப் பாடியருளிய ஆசிரியர்களும் ஒன்பதின்மர், அவர்களின் பெயர்கள் வருமாறு:—

| | பெயர்கள் | | பதிகங்கள் |
|---|---|---|---|
| 1. | திருமாளிகைத் தேவர் | — | 4 |
| 2. | சேந்தனுர் | — | 2+1 (திருப்பல்லாண்டு) |
| 3. | கருவூர்த் தேவர் | — | 10 |
| 4. | நம்பி காடவர்கோன் | — | 2 |
| 5. | கண்டராதித்தர் | — | 1 |
| 6. | வேணுட்டு அடிகள் | — | 1 |
| 7. | திருவாலி அமுதனுர் | — | 4 |
| 8. | புருடோத்தம நம்பி | — | 2 |
| 9. | சேதிராயர் | — | 1 |

செம்பொன்மணி அம்பலத்து நிருத்த னுர்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தம் திருப்பேர் சொல்லில்,
பம்புபுகழ் செந்திரு மாளிகைமெய்த் தேவர்,
பரிவுடைய சேந்தனுர், கருவூர்த் தேவர்,

நம்பி காடவர்கோன், நற் கண்டராதித்தர்,
நன்குயர் வேணுட்டு அடிகள், திருவாலி அமுதனுர்,
அம்புவியோர் புகழ் புருடோத்தமர், சேதிராயர்,
ஆகஇவர் ஒன்பதின்மர் தாம்முறை கண்(ட) அடைவே.

(3) 'இராவுத்தர்' என்பது ஒரு திசைச் சொல். அதற்குக் குதிரை வீரன் (Cavalier) என்பது பொருள். அது பின்னர் அரபியா நாட்டினின்று குதிரைகள் கொணர்ந்து விற்கப் போந்த இசுலாமியப் பெருமக்களைப் பெரிதும் குறிப்பதாயிற்று. அவர்களுட் பலர் இன்றும் இப்பெயரால் வழங்கப்படுதல் காணலாம். ரவா—அரசன். துதா. செய்தியாளன். அரசனிடமிருந்து செய்தி கொணரும் வீரன் என்றும், இச் சொல்லுக்குப் பொருள் கூறுவது உண்டு. அருணகிரிநாதர், கி. பி. 15 ஆம் நூற்றுண்டில், முசுலீம் மக்கள் தமிழகத்திற் பரவிப் பெருகி வாழத் தொடங்கிய காலத்தில் விளங்கியவர் ஆதலின், இச் சொல்லைப் பெரிதும் போற்றித் தழுவித் தமது வழிபடு கடவுளாகிய முருகனைக் குறித்தற்கு வழங்கியருளினுர்.

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மற வேன்;முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடூ டுடுடுடு டுண்டு டுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி ஆடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே

படிக்கும் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினுற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சல்என் பாய்! பெருைம் பாம்பில்நின்று
நடிக்கும் பிரான்மருகா! கொடுஞ் சூரன் நடுங்கவெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில் ஏறும் இராவுத்தனே.

—கந்தர் அலங்காரம்: 38, 50

"எதிரில் புலவர்க் குதவு வெளிமுகடு முட்டவளர்
இவுளி முகியைப் பொருத ராவுத்தன் ஆனவனும்"

—திருவகுப்பு, அருணகிரிநாதர்

இங்ஙனமே குமரகுருபர சுவாமிகள், தமது முத்துக் குமார சுவாமி பிள்ளைத் தமிழில், முசுலீம் மக்கள் பெரிதும் பயன்படுத்தும் 'சலாம்' என்னும் சொல்லை,

"குறமகட்குச் சலாம்இடற்கு ஏக்கறும்
முத்துக் குமாரனைப் போற்றுதும்"

என அழகுறத் தழுவி வழங்கி யிருத்தல் காணலாம். "கடிசொல் இல்லை காலத்துப் படினே" என்னும் தொல்காப்பிய நூற்பாவின்படி தழுவிக் கொள்ளப் பெற்ற

இன்னோரன்ன சொற்கள், நம் சமயச் சான்றோர்களின் பரந்து விரிந்த **சமரச மனப்பான்மையினை** விளக்குவதாகும். இன்றும் முருகப் பெருமானைப் பழநி கதிர்காமம் முதலிய தலங்களில் முசுலீம் மக்கள் பக்தியுடன் வழிபட்டு வருவது கண்டு மகிழத்தக்க காட்சியாகும்.

(4) **மாயூரம்** என வழங்கும் திருமயிலாடுதுறையில், வள்ளல்களுக்கெல்லாம் மேலான சிறந்த பெருவள்ளலாகத் திகழும் சிவபெருமான், இங்ஙனம் பலவகைகளில் **வள்ளல்** எனப் பெயர் பெற்று, வெவ்வேறு கோயில்களில் விளங்கி வருகின்றார்.

திருமயிலாடுதுறைக்கு எழுந்தருளிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்குக் காவிரியாற்றின் வெள்ளத்தை வடியச் செய்து துறையைக் காட்டி வருமாறு அழைத்தருளியதனால், கிழக்கேயுள்ள திருவிள நகரில் **துறைகாட்டும் வள்ளல்** எனவும்; நல்ல வாக்கு வன்மையினை விரும்பித் தவம்புரிந்த பிருகஸ்பதி பகவானுக்கு அவ்வாறே சிறந்த வாக்கு வன்மையினை அளித்தருளியதனால், தெற்கேயுள்ள தாருகாவனம் எனப் புராணங்கள் கூறும் பெருஞ்சேரியில், **வாக்குக்காட்டும் வள்ளல்** எனவும்; ஒரு சமயத்தில் வழிதெரியாமல் மயங்கிய தேவர்களுக்கு வழிகாட்டி அருள் செய்ததனால், மேற்கேயுள்ள மூவலூரில் **வழிகாட்டும் வள்ளல்** எனவும்; சிவஞானத்தை விரும்பித் தவஞ்செய்த விருஷப தேவர்க்கும் ஏனையோர் பலருக்கும் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளி மோன முத்திரை காட்டிச் சிவஞானத்தை உபதேசித்தருளியதனால், வடக்கேயுள்ள வதான்யேசுவரம் என்னும் கோயிலில் **கைகாட்டும் வள்ளல்** எனவும் பெயர் பெற்று, மாயூரநாதர் மாட்சிமை யுற்று விளங்குகின்றார்.

(5) '**காடுகிழாள்**' என்பது '**வனதுர்க்கை**' எனப்படும் அம்பிகைக்குரிய தூய தமிழ்ப் பெயர். மிகப் பழங்காலத்திலேயே தமிழ்நாட்டில் காடுகிழாள் வழிபாடு பெரிதும் நிலவி வந்ததனால், காடுகிழாளைத் தமிழ் மக்கள் **பழையோள்** என்னும் சிறப்புப் பெயராலும் போற்றி வந்தனர். ஆசிரியர் நக்கீரர் தமது திருமுருகாற்றுப்படையில், முருகப் பெருமானைப் '**பழையோள் குழவி**' என்று குறிப்பிட்டுப் போற்றிச் சிறப்பித்துரைத்திருத்தல் காணலாம். **சிலப்பதிகாரம்** காடுகாண் காதையில் வனதுர்க்கையின் கோயில் குறிப்பிடப் பெற்றுள்ளது; வேட்டுவ வரியில் வனதுர்க்கையின் வடிவம் பெருமை வழிபடும்முறைமை ஆகிய செய்திகள் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

இறைவனின் திருவருள் ஆகிய சக்தி பலவேறு நிலைகளில், பலவேறு தன்மைகளோடு விளங்குதலைச் சமய நூல்கள் விவரிக்கின்றன. சக்தி பேதங்கள் பலவற்றுள் **துர்க்கை** என்பதும் ஒன்று. துர்க்கையை அக்கினி துர்க்கை, மகா துர்க்கை, ஜலதுர்க்கை, பிரம்ம துர்க்கை, விஷ்ணு துர்க்கை, ருத்ர துர்க்கை, வனதுர்க்கை, ஸ்தூல துர்க்கை, சூலினி துர்க்கை என்று ஒன்பது விதமாக ஆகமங்கள் கூறுகின்றன. வெற்றி தரும் தெய்வமாதல் பற்றித் துர்க்கையைத் தமிழ் நூல்கள் **கொற்றவை** எனக் குறிப்பிட்டுப் போற்றுகின்றன. கொற்றம்—வெற்றி. "வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ" என்பது திருமுருகாற்றுப் படை. 'கொற்றவை நிலை' என்பது தமிழிலக்கணத்திற் புறப்பொருள் துறைகளுள் ஒன்று.

சிவசக்தி ஒன்றேயாயினும், செயல்வகையில் நான்காக விளங்குகின்றது. கோபத்திற் **காளி**; இன்பத்தில் **கவுரி** (பவானி); ஆண்மையில் **விஷ்ணு**; கொடியவர்களை அழித்தலில் **ஐயை** (துர்க்கை) என அது பெயர் பெறுகின்றது. இதனை,

"இறுதிசெய் திடலே சீற்றம் இன்பமே ஆண்மை என்று
அறைதரு சத்தி நான்காம் அரன்தனக்கு; ஐயை காளி
முறைதரு கவுரி இன்னோர் மும்மையும் பெற்றோர்; ஏனைப்
பெறலரும் சத்தி யான்;இப் பெற்றியும் மறைகள் பேசும்"

—கந்தபுராணம்

வனதுர்க்கை எனப்படும் காடுகிழாள் பற்றிச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் தம்முடைய தேவாரப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டிருத்தல் ஈண்டு அறியற்பாலது :—

"மையார்தடங் கண்ணிபங் காகங்கை யாளும்
மெய்ஆகத்து இருந்தனள் வேறிடம் இல்லை
கையார்வளைக் காடுகா ளோடும் உடனாய்க்
கொய்யார்பொழிற் கோடியே கோயில்கொண் டாயே"

—சுந்தரர் தேவாரம்

(6) சமயத் துறையில் நாம் பெறுதற்குரிய சிறந்த பதினாறு பேறுகள் என்பன வருமாறு :—

1. தெய்வ சம்பந்தமான நூல்களை நிந்தித்தல், சிவபெருமானை நிந்தித்தல் ஆகியவற்றைப் பொறுத்துக் கொள்ள இயலாத மனம்.

2. ஐம்புல இன்பங்களை அவாவி, அவற்றிற்கு அடிமைப் படாத ஆற்றல்.

3. அறிவில்லாத தீயவர்களோடு சேராமற் பிரிதல்.

4. சிறந்த அறங்களைச் செய்யும் நல்லவர்களுடன் நட்புக் கொள்ளுதல்.

5. அடியவர்கள் விரும்பும் உதவிகளைச் செய்யும் இயல்பு.

6. சிறந்த சான்றோர்கள் ஒறுக்க நேர்ந்தாலும், அவர்களைப் பணிந்து வணங்கும் மகிழ்ச்சி யுணர்வு.

7. ஆசாரியர் உபதேசித்தருளிய பொருள்களில் உண்மையும் உறுதியும் மிக்க நம்பிக்கை.

8. அடியார்கள் தீங்கு செய்ய நேர்ந்தாலும், அதுவும் சிவன் செயலே எனப் பொறுத்து ஏற்றுக் கொள்ளும் தெளிவு.

9. மனமும் வாக்கும் அடியவர்களிடம் ஒருமைப்பட்டு நிற்கும் செயல்.

10. கனவிலும்கூட அடியவர்களுக்கு அடிமையாகப் பணிபுரியும் கருத்து.

11. கணவனை யன்றிப் பிறரெவரையும் கருதாத கற்புடைய மங்கையைப் போலத் தன் வழிபடு கடவுளிடத்தில் சலனம் இல்லாத உறுதியான அன்பு நிலை.

12. இறைவனின் புகழை நாடோறும் ஏத்திடும் பொலிவு.

13. தீங்கு பயக்கும் இழி நிலைக் கொள்கைகளைப் புறக்கணித்து ஒழுகுதல்.

14. உண்மைநெறி கடைப்பிடித்துப் பிறர் பொருளை விரும்பாமல் இருத்தல்.

15. பிறன் மனைவியை ஏறெடுத்தும் பாராத பெருந்தகைமை மிக்க விரதம்.

16. யான் எனது என்னும் அகப்பற்று புறப்பற்றுகள் எதுவும் இல்லாத தூய துறவு உள்ளம்.

"மறைகள் சிந்தனை சைவ சிந்தனை பொருமனமும்,
தறுகண் ஐம்புலன் களுக்கேவல் செய்யுருச் சதுரும்,
பிறவி தீதெனப் பேதையர் தம்மொடு பிணக்கும்,
உறுதி நல்லறம் செய்பவர் தங்களொடு உறவும்,

யாது நல்லன்பர் கேட்கினும் உதவுறும் இயல்பும்,
மாதவத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடும் மகிழ்வும்,
ஓதும் நல்உப தேசமெய் உறுதியும், அன்பர்
தீது செய்யினும் சிவச்செயல் எனக்கொளும் தெளிவும்,

மனமும் வாக்கும் நின் அன்பர்பால் ஒருப்படு செயலும்,
கனவினும் உனது அன்பருக்கு அடிமையாம் கருத்தும்,
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்,
புனித நின்புகழ் நாடொறும் உரைத்திடும் பொலிவும்,

தீமையாம் புறச் சமயங்கள் சேர்வுறாத் திறனும்,
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறா வளனும்,
ஏமுறும் பரதாரம் நச்சிடாத இன் நோன்பும்,
தூய்மை நெஞ்சின் யான்எனது எனும் செருக்கு உருத்துறவும்,

துறக்க மீது உறையினும் நரகில் தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பத்து உய்க்கினும்
பிறைக்கொழுந்து அணி சடைப் பெரும! இவ்வரம்
மறுத்திடாது எனக்கு நீ வழங்கல் வேண்டுமால்"

—திருவையாற்றுப் புராணம்.

இவைகள் பதினாறும் திருநந்திதேவர் சிவபிரானிடம் வேண்டிப் பெற்ற வரங்கள் ஆகும்.

(7) வைஷ்ணவ பரிபாஷையில் பெருமாளுக்குப் போக மண்டபம் என்பது திருவரங்கம்; புஷ்ப மண்டபம் என்பது திருமலை எனப்படும் திருப்பதி (திருவேங்கடம்); தியாகமண்டபம் என்பது காஞ்சிபுரம்.

(8, ஸ்ரீ கண்ணபிரானின் பட்டத்துத் தேவிமார்கள் எண்மர். அவர்களின் பெயர்கள் முறையே வருமாறு :—

1. ருக்மிணி
2. ஸத்யபாமை
3. ஜாம்பவதி
4. ஸத்யை
5. மித்ரவிந்தை
6. ஸுசீலை
7. ரோகிணி
8. இலக்ஷணை

(9) "ஸ்வயம் வியக்தம்" (தாமே வெளிப்பட்டவை) எனப் புகழ்ந்து போற்றப்பெறும் வைஷ்ணவத் தலங்கள் எட்டு. அவற்றின் பெயர்களாவன :—

1. திருவரங்கம்
2. திருமுஷ்ணம்
3. திருவேங்கடமலை
4. சாளக்கிராமமலை
5. நைமிசாரணியம்
6. வானமாமலை (தோதாத்ரி)
7. புஷ்கரக்ஷேத்திரம்
8. பதரிகாசிரமம்

(10) ஸ்ரீ மகாவிஷ்ணுவின் பல்வேறு அம்ஸபூதர்களாக ஆழ்வார்கள் தோன்றியருளினர்கள். அவ்வவ் வாழ்வார்களுக்குரிய அம்ச விவரம் வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1. | பொய்கையார் | — | சங்கு, பாஞ்சசன்யம் |
| 2. | பூதத்தார் | — | கதை, கௌமோதகி |
| 3. | பேயார் | — | வாள், நாந்தகம் |
| 4. | திருமழிசையார் | — | சக்கரம், சுதர்ஸனம் |
| 5. | நம்மாழ்வார் | — | விஷ்வக்சேனர். |
| 6. | மதுரகவி | — | குமுதர் |
| 7. | குலசேகரர் | — | கௌஸ்துபம் |
| 8. | பெரியாழ்வார் | — | கருடன் |
| 9. | ஆண்டாள் | — | பூமாதேவி |
| 10. | தொண்டரடிப்பொடி | — | வனமாலை |
| 11. | திருப்பாணாழ்வார் | — | ஸ்ரீவத்ஸம் |
| 12. | திருமங்கை மன்னர் | — | வில், சார்ங்கம் |
| 13. | இராமாநுஜர் | — | ஆதிசேஷன். |

—ஆசிரியர்.

---

## கோயில் நிகழ்ச்சிகள்

2 3—66 திருநாராயணபுரம் வேதநாராயணப் பெருமாள் கோயில் மின்விளக்கு ஏற்று விழா.

3—3—66 வழுவூர் வீரட்டம் பிட்சாடனர் விழா; பெருஞ்சேரி வாகீசுவர சுவாமி கோயில் மாசிமக விழா.

5—3—66 கள்ளழகர் கோயில், கஜேந்திர மோட்சம், தெப்போற்சவம் திருப்பார் புரம் சேஷபுரீசுவரர் கோயில், மாசிமக விழா.

6—3—66 சென்னை ஏகாம்பரேசுவரர் கோயில், பெரிய புராண விரிவுரைத் தொடக்கம். ஆடுதுறை அபராதரக்ஷகர் கோயில், மாசிமக விழா.

# திருநாவுக்கரசரின் ஒரு திருத்தாண்டகம்

**முன்னுரை :**

இந்நாளில் பல்வேறு இதழ்களிலும் சிறுகதை, தொடர்கதை, புதினக்கதை, காதற்கதை எனப் பல கதைகள் வெளிவருவதைக் காண்கின்றோம். நமது **திருநாவுக்கரசர்** பெருமானும் ஒரு சிறு கதை எழுத்தாளர் நிலையில், அந்நாளில் விளங்கியிருந்திருப்பார் போலும்! அவர்தாமும் இந்நாளைய எழுத்தாளர்களைப் போலவே ஒரு காதற் கதையை—சிறு கதையை—நமக்கு எழுதிக் காட்டுகின்றார்,

**சிறுகதை :**

ஓர் ஊரில் ஒரு செல்வக் குடும்பத்தில் ஒரு பெண் பிறந்தாள். தாய் தந்தையரால் அவள் பெரிதும் பேணி வளர்க்கப் பெற்றாள். தக்க பருவமுற்றாள். பெற்றோர் அவட்குத் திருமணம் செய்து வைக்கும் முயற்சியில் தலைப்பட்டனர். தக்கவன் ஒரு நம்பிக்குத் தம் நங்கையைக் கொடுக்கத் தாய்தந்தையர்கள் உறவினருடன் குணம்பேசிக் குலம்பேசித் திருமணத்திற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தனர். அத்திருமணப் பேச்சின் விவரங்களையெல்லாம் அப்போதைக்கப்போது தோழியின் வாயிலாக மணமகள் அறிந்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். தோழியின் வாயிலாக மணமகள் தன்னை மணக்கப்போகும் ஆடவனின் பெயரை முதலிற் கேட்டறிந்து கொண்டாள். பின்னர் அவனது வடிவழகும் குணநலன்களும் இவ்விப்பெற்றியவை என உசாவி உசாவித் தெரிந்து கொண்டாள். இதற்கும் பின்னர் அவனது ஊர் யாதெனவும் வினவி உணர்ந்து கொண்டாள், இவையனைத்தும் அவளுக்குப் பெரிதும் மனநிறைவை அளிக்கும் வகையிலேயே மேலும் மேலும் அமைந்தன. ஆதலின், அத்துணை அரிய பெரிய சிறப்புக்கள் அமைந்த அவ்ஆண்மகனையே மணந்து கொள்வதென உறவினருடன் தாமும் உளமொத்திசைந்தாள்; உறுதி பூண்டாள். ஒருகணமும் ஊழியாகும் நிலையில் திருமணம் நிகழவிருக்கும் நாளை ஆவலுடன் எதிர்நோக்கி நின்றாள். திருமணம் சிறப்புற நிகழ்ந்தது, பின்னர்ப் பிறந்தகம் விட்டுப் பெயர்ந்து புகுந்தகம் செல்ல வேண்டிய நாள் போந்தது. தன்னை வளர்த்த அன்னையையும் தந்தையையும் மறந்தாள். நென்னல் வந்த தலைவனுடன் இயைந்து விரைந்து சென்றாள். இல்லிகவாப் பருவத்தில் தனக்கு விதிக்கப்பெற்றிருந்த உலகியற் கட்டுப்பாடுகளையெல்லாம் துறந்தாள். தன்னலம் மறந்தாள். கணவன் நலமே கருதிவாழ முற்பட்டாள். வாழ்விலும் தாழ்விலும் இன்பிலும் துன்பிலும் கணவனுடன் இயைந்து ஒன்றி நின்று இன்புற்று வாழ்ந்து வந்தாள்....

**திருத்தாண்டகம் :**

திருநாவுக்கரசர் நமக்காக எழுதி வெளியிட்ட அழகிய நல்ல இச்சிறுகதை, பின்வரும் சிறந்த திருத்தாண்டகப் பாடலாக அமைந்துள்ளது.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்!
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்!
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்!
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்!

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்!
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை!
தன்னை மறந்தாள்! தன் நாமம் கெட்டாள்!
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!"

எனவரும் அனைவரும் அறிந்த திருப்பாடலில், இச்சிறுகதை அமைந்துள்ளது. ஒரு முறை கேட்ட அளவிலேயே உள்ளம் கொள்ளை கொள்வதே சிறந்த கவிதையாகும்' என்பர் அறிஞர்கள். அதற்கேற்ப, முதன் முறையாகக்கேட்ட மாத்திரையே எவருள்ளத்தையும் கொள்ளை கொண்டுவிடும் ஆற்றலும் அழகும் மிக்க இத்திருப்பாடலின் சிறப்பை, எம் ஒரு நாவாற் கூறல் ஒல்லுமோ ?

"சேமமிகும் திருவா லூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே! நீஉரைத்த வாசகத்தை எண்ணு
தொறும்
காமமிகு காதலன்தன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன்
பெய்துவதே!"

என இராமலிங்க அடிகளார் பாடியருளிய வாறு போல, காதலுணர்வின் வயப் பட்ட ஒரு கன்னிப்பெண்ணின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை மட்டுமேயன்றிக், கடவுளு ணர்வு தலைப்பட்ட அடியவர்களின் உள நெகிழ்ச்சி அனுபவங்களையும், இப்பாடல் குறிப்பிடுதல் காணலாம்.

காதலரும் பக்தரும் :

தனது காதற்குரியவரின் பெயர் கேட்டு மகிழ்தல் காதலர்களுக்கு இயல்பு. அங் ஙனமே தாம் வழிபடும் கடவுளின் திருப் பெயர் கேட்டலில் அடியார்கட்குப் பெரு மகிழ்வு. "சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியம்மான்" "சிவனெ னும் ஓசை அல்லது அறையோ உலகில்திரு நின்ற செம்மையுளதோ?" எனச் சான் றோர்கள் தம் வழிபடு கடவுளரின் திருப் பெயரில் தமது ஈடுபாட்டினைப் புலப் படுத்தியுள்ளமை காணலாம்.

"பேர்பரவை பெண்மையினிற்
பெரும்பரவை விரும்பல்கு
லார்பரவை அணிதிகழும் மணிமுறுவல்
அரும்பரவை
சீர்பரவை ஆயினாள் திருவுருவின்
மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை
எழுபரவை

—பெரிய புராணம்

"அரக்கனே ஆக!வேறோர் அமரனேஆக!
அன்றிக்
குரக்கினத் தொருவனேதான் ஆகுக!
கொடுமைஆக!
இரக்கமே ஆக!வந்திங்கு எம்பிரான்
நாமம்சொல்லி
உருக்கினன் உணர்வை! தந்தான் உயிர்!
இதின் உதவியுண்டோ"

—கம்பராமாயணம்

"சிறையாரும் மடக்கிளியே; இங்கேவா!
தேனொடுபால்
முறையாலே உணத்தருவேன்!
மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன்,
துளங்கும்இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற்
பேசாயே!"

—தேவாரம்

எனவரும் பாடல்களும் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

தமதுகாதற்குரியாரின் வடிவழகும் குண வழகும் நினைத்தும் கேட்டும் இன்புறுதல் காதலர்கட் கியற்கை. அங்ஙனமே தாம் வழிபடும் கடவுளின் திருவுருவ நலங்களி லும் அடியார்கட்குப் பேரீடுபாடு நிகழும். "வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன் றும்" என்பன போன்று வரும் பதிகங்கள் இதன் உண்மைதேற்றும்.

தம்மால் விரும்பப் படுபவரின் ஊர் கேட்டு உணர்ந்துவப்புறுதல் காதலர் தம் செயல். அவ்வாறே தம் வழிபடு கட வுள ரின் தல விசேடங்களை அறிந்துகொள்ள விரும்புதல் அடியவர் பண்பு. "ஒருவனாய் உலகேத்த நின்றநாளே? ஒருருவே மூவுரு வம் ஆனநாளோ?.. திருவாரூர் கோயி லாக் கொண்டநாளே" என்பன போன்று வரும் திருப்பதிகங்கள் இதற்குச் சான்று பகரும்.

ஊரும் பேரும் உருவும் சிறப்புடைமை தெளிந்ததற்பின், அனைய சிறப்பினரையே மணந்துகொள்வேன் என உறுதி கடைப் பிடித்துப் பித்துற்று நிற்றல் காதலர்கள் நெறி. "உத்தமன் அத்தன் உடையான் அடியே நினைந்துருகி மத்த மனத்தொடும் மால் இவனென்ன மன நினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்து எவரும்

தத்தம் மனத்தன பேசத்'' தம்வயம் இழந்து பித்தராயொழுகுதல் அடியவர் களின் பண்பு.

> "இறந்த கற்பினட்கு எவ்வம் படரன்மின்!
> சிறந்தானே வழிபடஇச் சென்றனள்!
> அறந்தலைப் பிரியா ஆறும்மற் றதுவே!"

என்றதற்கேற்ப, எத்துணையோ பாடுபட்டுத் தம்மை இனிது வளர்த்த தாய் தந்தையரைப் பிரிந்து, தம்மை மணந்து கொண்டவர் பின்னே செல்லுதல் மணமக்கள் வழக்கம். அங்ஙனமே கடவுளுணர்வு தலைப்பட்ட அடியவர்கள், தம்மொடு பல காலமாகப் பயின்று தாயும் தந்தையும் போலும் நிலையில் இருந்து வந்த பொறி புலன் கரணங்களை யெல்லாம் நீத்து, தாம்காதலித்த கடவுட் செம்பொருளையே தேடிப் பின்பற்றிச்சென்று சேர்ந்து நலம் பெறும் இயல்புடையார் ஆவர்.

''நிறையெனப்படுவது மறை பிறர் அறியாமை'' எனும் அகலிடத்தார் ஆசாரம் காத்து ஒழுகினோர், இல்லற வாழ்வில் அதனைச் சிறிது தவிர்ந்தொழுகுவர். அங்ஙனமே, கடவுளுணர்வு கைகூடிய ஞானி களும் ''தேசம் இடம் காலம் திக்கு ஆசனங்கள் என்பன இன்றி, செய்வது ஒன்றுபோற் செய்யாச் செயலதனைச் செய்து, பாலருடன் உன் மத்தர் பசாசர் குணம் மருவிப் பாடலினெடு ஆடலிவை பயின்று'' ''**உலகியற் பகையார்**'' எனும் நிலையில் அகலிடத்தார் ஆசாரத்தை அகன்று நிற்பர்.

> "வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
> கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
> நடுங்கு துயர்கூர நாப்புலர வாடித்
> தன்துயர் காணத் தகைசால் பூங்கொடி"

எனச் சிலப்பதிகாரம் கூறுவதுபோல, தன்னலம் மறத்தல் காதலர்க்கியல்பு. ''எனை நானென்பது அறியேன், பகல் இரவாவதும் அறியேன்'' ''என்னை மறந்திருந்தேன் இறந்தேவிட்டது இவ்வுடம்பே'' ''ஊன் கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ.'' ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே.'' ''ஆயக்கடவேன் நானோதான்? என்னதோ இங்கு அதிகாரம்? காயத்திடுவாய் நின் கழற்கிழ் வைப்பாய் கண்ணுதலே'' என் றெல்லாம் அருளும் நிலையில் வைகுதல் ஞானிகள் நிலை.

திருமணத்திற்கு முன் இன்னார் மக ளெனவும், அதன் பின்னர் இன்னார் மனைவியெனவும் பெண்கள் பெயர் பெறுதல் உலகியற்கை. அங்ஙனமே கடவுளுணர்வு தலைப்படுமுன் செட்டியார், முதலியார் என்பனபோன்ற பெயர்கள் பெற்றிருந்து, கடவுளுணர்வு தலைப்பட்ட பின்னர்ப் பண்டைக்குலம் ஒழிந்து தொண்டக் குலத்தினராகிப் பக்தர், சித்தர், அன்பர், அடியார் முதலிய பெயர்பெறுதல், அருளாளர் பண்பு.

இன்பிலும் துன்பிலும், வாழ்விலும் தாழ்விலும் கணவனின் திருவடிகளையே, புகலிடமாகக் கொண்டு கற்புடை மகளிர் ஒழுகுவர். அவ்வாறே ஞானிகளும் ''இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உனகழல் தொழு தொழுவேன்'' எனும் நிலையில் இறைவன்தாளே தலைப் பட்டு நிற்பர்.

இன்னோரன்ன உண்மைகள் எத்துணையோ பலப்பல இனிதமைந்து விளங்கும்வண்ணம், திருநாவுக்கரசர் பெருமான் எழுதிக் காட்டிய இச் சிறுகதைத் திருப்பாடல் எத்துணைச் சிறந்த தொன்றாகத் திகழ்கின்றது பார்மின்கள்! திருமுறை களின் சிறப்பை யுணர்தற்கு இவ்வொரு திருப்பாடலே அமையாதோ? ''இதனளவு உண்டு கோள் மதிவல்லோர்க்கே''.

**திருத்தாண்டகத்தில் திருக்குறள் :**

இனி ஈண்டு இப்பாடலில் முதன்மையாகக் கருதத் தகுவது ஒன்றுள்ளது. இவ் வழகிய இனிய பாடல், ஆசிரியர் **திருவள்ளுவர்** தமது திருக்குறளின் கண் கடவுள் வாழ்த்தாகக் கூறிய பத்துக் குறள் களையும் தன்னுள்ளடக்கிக் கொண்டு,

குறளினும் மிகச் சுருக்கமும் இலக்கியச் சுவையும் வாய்ந்து திகழ்கின்றது எனலாம்.

(1) திருவள்ளுவர் **'ஆதிபகவன்'** எனக் குறித்ததனையே திருநாவுக்கரசர் பெருமான் 'அவனுடைய நாமம்' என்கின்றார்.

(2) **வாலறிவன்** என்றதனை "மூர்த்தியவனிருக்கும் வண்ணம்" என விளக்குகின்றார்,

(3) **மலர்மிசை ஏகினன்** என்பதே அவனுடைய 'ஆரூர்' எனப்பட்டது,

(4) இறைவனின் **'பொருள்சேர் புகழ் புரிதல்'** "அவனுக்கே பிச்சியாதல்" எனக் குறிப்பிடப்படுவதாயிற்று.

(5,6) வேண்டுதல் வேண்டாமை இலான் என்பதும், பொறிவாயில் ஐந்தவித்தல் என்பதும், 'அன்னையையும் அத்தனையும் நீத்தலாக' உருவகம் செய்யப்பட்டன.

(7) தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்து மனக்கவலை மாற்றலே 'அகலிடத்தார் ஆசாரம் அகலுதல்' ஆயிற்று.

(8) பொருளும் புகழும் போகமுமாகிய பிறவாழி நீந்தலே 'தன்னை மறத்தல்' எனவும்.

(9) எண்குணத்தான் தாளை வணங்கிப் பசு கரணங்கள் பதிகரணங்களாக மாறப்பெறுதலும் பிறவுமே 'தன் நாமம் கெடுதல்' எனவும்.

(10) பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவனடி சேர்தலே 'தலைவன் தாள் தலைப்படுதல்' எனவும் திருவள்ளுவரின் அடியொற்றித் திருநாவுக்கரசரால் குறிப்பிடப்பெற்றன.

முடிவுரை :

திருக்குறள் போன்ற சிறந்த இலக்கிய நூல்களை ஆராய்ந்துணர்தற்கும் சுவைப்பதற்கும்கூட, இத்தகைய தனிய திருமுறைப் பாடல்கள் பெரிதும் துணை புரிதல் காணலாம். திருக்குறளின் கடவுள் வாழ்த்துப் பாடல்களின் பொருளினை, இங்ஙனம் ஒரு திருப்பாடலிலேயே சுருக்கமாகவும், சுவை பெருகவும், ஒரு கதை நிகழ்ச்சி போல அமைத்துக் கலைத் திறம் விளங்கவும் சமய அனுபவ நலங்கள் தகவுற மிளிரவும் அருளிச் செய்த திருநாவுக்கரசரின் சிறப்பு, நினைத்தொறும் நினைத்தொறும் வியப்பும் விம்மிதமும் விளைப்பதாகும்.

—ஆசிரியர்

# செய்திச் சுருக்கம்

சிங்கப்பூர் சிராங்கூன் ரோடு ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில் பழமையாகிப் பழுதுபட்டதனால், அது திருப்பணி செய்யப் பெற்று, ஸ்ரீநிவாசப் பெருமாள், தாயார், ஆண்டாள், கருடன், ஆஞ்சநேயர், ஆழ்வார்கள் ஆகியோருக்குத் தனிச் சந்நிதிகளும், ஏகாதசி மண்டபம் முதலியனவும், தமிழ்நாட்டு ஸ்தபதிகள் சிற்பிகளைக் கொண்டு சாத்திர விதிப்படி சுதை வேலை சிற்ப வேலை வண்ண வேலைகள் யாவும் செய்து கட்டி முடிக்கப் பெற்றது. 24—3—66 முதல் 28—3—66 வரை மகா குர்பாபிஷேக விழாவும் மிகவும் சிறப்புற நன்கு இனிது செய்து நிறைவேற்றப் பெற்றது. கடல் கடந்து சென்று, நமது சமயத்தைப் பேணி வளர்த்து வரும் சிங்கப்பூர் இந்து மக்களின் அன்பும் ஆர்வமும் பெரிதும் போற்றிப் பாராட்டற்பாலனவாகும்.

# சமயமும் விஞ்ஞானமும்

சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் ஏதோ முரண்பாடு இருப்பது போல, நம்மிற் பலர் நினைப்பதும் பேசுவதும் உண்டு. விஞ்ஞானம் வளர வளர, சமயமும் சமய நம்பிக்கைகளும் தாமே மறைந்துவிடும் என்றும், ஒரு சிலர் வலியுறுத்திக் கூறுவர். சமயவுணர்வும் நம்பிக்கையும் உடையவர்களைப் பிற்போக்காளர்கள்—குருட்டு நம்பிக்கை கொண்டவர்கள் எனக் குறிப்பிட்டுச் சிலர் ஏளனமும் செய்யாநிற்பர். மற்றும் சிலர், தமக்குச் சமயவுணர்வும் நம்பிக்கையும் இல்லை என்று சொல்லிக் கொள்ளுதலை, ஒருவகை முற்போக்கு நெறியாகவும் நாகரிகப் பாங்காகவும் கடைப்பிடித் தொழுகுதலையும், நாம் காண்கிறோம்.

ஆனால் உண்மையிலேயே ஆராய்ந்து பார்த்தால், விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும்—அறிவியலுக்கும் அருளியலுக்கும்—இடையே எத்தகைய முரண்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. சமயமும் விஞ்ஞானமும் தமக்குள் எவ்வகையிலும் மாறுபட்டன அல்ல. விஞ்ஞானம் ஐம்புலன்களுக்குள் அகப்படும் புறப்பொருள்களையும் பருப் பொருள்களையும் (Pheno mena) மட்டுமே, ஆராய்ந்தறிய முயலுகின்றது; சமயமோ ஐம்புலன்களுக்கு எட்டாமல் அப்பாற்பட்டு விளங்கும் அகப்பொருள்களையும் நுண் பொருள்களையும் (Noumena), ஆழ்ந்துணர்ந்து அநுபவிக்க வழிவகுக்கின்றது. இவ்வாற்றால் இரண்டினுடைய எல்லையும், குறிக்கோளும், செயல்முறைகளும் தனித்தனியாக விளங்குதல் காணலாம். ஆதலின் இவையிரண்டிற்கும் எத்தகைய போட்டியோ, பூசலோ ஏற்படக் காரணமேயில்லை.

எங்கே விஞ்ஞானம் செயலிழந்து முடிவுற்று நிற்கின்றதோ, அங்கேயிருந்து தான் சமயம் தொடங்குகின்றது. (1).

விஞ்ஞானம் என்பது வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு கலையே; அஃது இன்னும் குழவிப் பருவத்திலேயே இருந்து வருகின்றது. அதன் வளர்ச்சி முறையிலும், ஆராய்ச்சி நெறியிலும், எத்தனையோ இடையீடுகளும் மாறுபாடுகளும் நேரலாம். ஆதலின் விஞ்ஞானம் சமயத்துக்கு முரண்பட்டதென்று நாம் முடிவு கட்டிவிடுதல், பொருத்தம் ஆகாது. மேலும் விஞ்ஞானம் என்பது இயற்கைப் பொருள்களின் இயல்புகளை விளக்கக்கூடுமேயன்றி, அதன் காரணங்களையும் அடிப்படைகளையும் விளக்க வல்லதன்று (2) விஞ்ஞானம் எனப்படுவது வெறும் அறிவே; ஆனால் சமயமோ, அதன் பயனாகிய சிறந்த அநுபவமாக அமைவது. எனவே சமயமும் விஞ்ஞானமும் தம்முள் ஒன்றையொன்று தழுவிப் பிணைந்து நிறைவுறுவனவேயன்றி, முரண்படுவன அல்ல என்றுணரலாம் (3).

---

(1) "Where science ends, there religion begins".

(2) "Science cannot tell the ultimate "why" of things and events. Hydrogen and Oxygen combine to form water, but why should they? We all know Newton's Law of inverse squares. Science does not tell us why it cannot be the Law of inverse cubes. Natural laws are what they are, but why they are not something else, science does not say "

*—W. C. Dampier Whetham*

(3) "Increasing number of important Physicists, astro-physicists, mathematicians, and biologists are now of the opinion that science and religion are not only not at all inimical to each other, but constitute only in their intimate inter-relation a complete picture of the world"

*—Rene Fulop Miller*

"சமயம் கலவாத விஞ்ஞானம் முடத் தன்மையுடையது; விஞ்ஞானம் கலவாத சமயம் குருட்டுத் தன்மை வாய்ந்தது" (4) என்பர் **ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன்.** "சமயத்தோடு இயைபில்லாத விஞ்ஞானம் அகந்தை மிக்கது; விஞ்ஞானத். தோடு சேராத சமயம் மூடநம்பிக்கை பொருந்தியது" (5) என்பர் பேரறிஞர் **இராதாகிருஷ்ணன்.** "வெறும் அரை குறை அறிவே நாத்திகம் பேசும்; ஆழ்ந்து நிறைவுற்ற அறிவோ சமய வுணர்வில் தலைப்பட்டுத் தழைத்து நிற்கும்" (6) எனக் கட்டுரைக்கின்றார் **பிரான்ஸிஸ் பேக்கன்.**

விஞ்ஞானி என்பவன் நாத்திகனாக இருத்தல் இயலாது. இயற்கைப் பொருள்களை ஆராய ஆராய, இறைவனின் அருமை பெருமைகள் விஞ்ஞானிக்குத் தான் நன்கினிது விளங்கும் என்பது, விஞ்ஞானப் பேரறிஞர் ஆகிய ஐன்ஸ்டைனின் கூற்று. முதலிற் கடவுளுணர்ச்சி இல்லாமல் இருந்த விஞ்ஞானிகளிற் பலர், பின்னர் நாளடைவிற் கடவுளுணர்ச்சி யுடையவர்களாக மாறியிருக்கின்றனர் (7).

விஞ்ஞானத்தின் போக்கு இப்பொழுதெல்லாம் ஒரு திருப்பம் அடைந்து, சமயத்தை நோக்கித் தழுவி இணையவே முற்பட்டு வருகின்றது. இதனை **ரெனி ஃபுலாப் மில்லர்** (8) என்னும் அறிஞர் பின்வருமாறு உருவக முறையில் அழகுற விளங்குகின்றார்:*

"அறிவுக்கும் (Reason) நம்பிக்கைக்கும் (Faith)- விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும் - இடையே ஒரு வழக்கீடு ஏற்பட்டு நிலவி வந்தது. அறிவு வதியாக அமைய நம்பிக்கையே பிரதிவாதியாக இருந்தது. அறிவு நலனும் பரந்த மனப்பான்மையும் கொண்ட ஆண் பெண், இருபாலாரும் அடங்கிய நடுவு நிலைக்குழுவினர் அதனை ஆராய்ந்தனர். மில்லிக்கன், எட்டிங்டன், ஜீன்ஸ், வொயிட் ஹெட், ஹால்டேன் போன்ற பேரறிஞர்கள் சான்று கூறினர். அச்சான்றுரைகளை அடிப்படையாகக் கொண்டு, பிரதிவாதியாகிய நம்பிக்கையின் மீது கொணரப் பெற்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் வாதியாகிய அறிவுதான், 'புரட்சிகரமான பிற்போக்கு மனப்பான்மை' கொண்டுள்ள உண்மையான குற்றவாளி என்ற ஐயுறவு நேர்ந்தது. ஆயினும் தன் குற்றத்தை யுணர்ந்து கொண்டு மெய்யாகவே திருந்திவிடக் கூடிய நிலையில் மாறிவருவதனால், அறிவு ஆகிய புதிய பிரதிவாதியின் மீது அக்குற்றம் வலியுறுத்தப்படாமல், பரிவு காட்டப் பெறுகின்றது."

---

(4) "Religion without science is lame; science without religion is blind".

—*Dr. Albert Einstein*.

(5) "Religion without science is superstition; science without religion is arrogance".

—*Dr. S. Radhakrishnan*

(6) "A little philosophy inclineth a man's mind to atheism, but depth in philosophy bringeth men's minds about to religion".

—*Francis Bacon*

(7) "Even the skeptic Heine wrote in a postscript to his Romanzero: 'Yes, I have return to God. I am the prodigal son: I was overcome by heavenly nostalgia. There is, after all, a divine spark in every human soul".

(8) "At the present time things are taking a decidedly different turn. The odds are clearly against reason More and more often the witnesses called in from the laboratories and studies of exact science turn evidence for the defence, and materialism is told a great many unpleasant things by its own experts and authorities.

The jury, composed of intelligent and liberal modern men and women, bases its verdict on the views expressed by the witnesses Millikan, Eddington, Jeans, Whitehead, Haldane. The case against faith is dismissed

Reason, the original plaintiff, is now suspected of being really the one that is guilty of reactionary backwardness, but the case is not pressed for it seems that the new defendant is honestly desirous of mending his ways"

—*Rene Fulop Miller*.

(The Saints that Moved the World),

விஞ்ஞானப் பேரறிஞர்களுள் ஒருவராகிய **மார்க்கோனி** என்பவர், தாம் காலை மாலை வேளைகளில் செய்யும் ஜெபமும் பிரார்த்தனையும் எங்கேயோ பரமண்டலத்திலுள்ள பரம பிதாவுக்கு எங்ஙனம் கேட்டல் இயலும்? என்று தமக்குச் சிறுவயதில் இருந்த ஐயப்பாடு, கம்பியில்லாத் தந்தியைத் தாம் கண்டுபிடிக்க முடிந்த தன் வாயிலாகத் தீர்ந்துவிட்டது என்றும்; அன்பர்கள் செய்யும் வேண்டுகோள்களை யெல்லாம், உலகம் எங்கணும் வியாபித்து நிற்கும் இறைவன் செவிமடுத்து மனமிரங்கி அருள்புரிகின்றான் என்பது முற்றிலும் உண்மையே என்றும், குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்நாளைய அறிவியலறிஞர்கள் பலர் ஆராய்ந்து வரும் தெளிவுக் காட்சி (Clairvoyance), தெளிவுக் கேள்வி (Clairaudience) தொலைவிலுணர்தல் (Telepathy), மறைபொருளாராய்ச்சி (Occultism), ஆவியுலக ஆராய்ச்சி (Psycho-analysis) முதலிய அறிவியற் கலைகள் அனைத்தும், சமயமும் விஞ்ஞானமும் ஒன்றையொன்று தழுவிப் பிணைந்து வளர முற்படும் காலம் தொலைவில் இல்லை என்று அறிவுறுத்துகின்றன.

விஞ்ஞானிகளிற் பலர் இன்று சமயவுணர்வும் நம்பிக்கையும் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். விஞ்ஞானம் உலகாயத நிலையில் இருப்பதாக இன்றும் பேசிவருதல் பொருந்தாது. இந்நாளைய விஞ்ஞானிகள் மெய்ஞ்ஞானிகளோடு சேர்ந்து, இறைவனை இயற்கையின் மூலம் உணர்ந்து துதித்துப் பரவி வழிபடுகின்றனர் என்று **மில்லிகன்** என்னும் விஞ்ஞானி சொல்லுகின்றார். (9)

இதுகாறும் கூறியவாற்றால், உண்மைச் சமயமும், உண்மை விஞ்ஞானமும் தமக்குள் ஒரு போதும் மாறுபடுவன அல்ல என்னும் உண்மையைச் செவ்விதின் உணர்ந்து கொண்டு, நாம் அவ்விரண்டையும் நல முறப் போற்றி ஒழுகி உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்

"Is there anyone Who still talks about the materialism of science? Rather does. the scientist join with the psalmist of thousands of years ago in reverently proclaiming, 'the Heavens declare the glory of God and Firmament sheweth His handiwork'."

—*Robert Andrews Millikan*

## தூய்மையாக வைக்கப்பட்டுள்ள ஆலயங்களுக்குச் சுழற்கோப்பைப் பரிசளிப்பு விழா

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சிந்துபூந்துறை | — | ஸ்ரீபாளயஞ்சாலைக் குமார சுவாமி கோயில். | 25—3—66. |
| 2. | செம்பொனார் கோயில் | — | ஸ்ரீ சுவர்ணபுரீசுவரர் கோயில் | 26—3—66. |
| 3. | ஒன்பது வேலி | — | ஸ்ரீ நவநீதகிருஷ்ணசாமி கோயில் | 30—3—66. |
| 4. | கரூர் | — | ஸ்ரீ கல்யாண பசுபதீசுவரர் கோயில் | 31—3—66. |

# இறை வழிபாடு

## முன்னுரை :

மக்கள் வாழ்க்கைக்கு வழிபாடு என்பது மிகவும் இன்றியமையாததொன்று; உடல் நலத்திற்கும் நோயின்மைக்கும் உணவும் நீரும் காற்றும் எங்ஙனம் இன்றியமையாதனவாக விளங்குகின்றனவோ, அங்ஙனமே உயிர் நலத்திற்கும் தூய்மைக்கும் உரியனவற்றுள், வழிபாடு என்பது மிகவும் இன்றியமையாததாக இருக்கின்றது.

வழிபாடு பிரார்த்தனை ஜெபம் முதலியவற்றினால், நாம் உள்ளத் தூய்மை—அமைதி — எழுச்சி — ஒருவகைப் புதிய ஆற்றல் முதலியவற்றைப் பெறுகின்றோம். அதனால் நம் உயிர் வாழ்க்கைக்கு எத்துணையோ பல நன்மைகள் நாளடைவில் ஏற்படுகின்றன.

## திருவள்ளுவர் ;

"எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உளன். அவனாலேயே இவ்வுலகம் அனைத்தும் இயங்கி வருகின்றது. அவனை நாம் நம் மனமொழி மெய்களினால் வழிபட்டு, அறநெறி கடைப்பிடித்து ஒழுகினால், நம்முடைய துன்பங்கள் யாவும் நீங்கி, கவலைகள் எல்லாம் தீர்ந்து, நாம் நலம் பெற்று உய்யலாம்" என்பதனை நாம் அனைவரும், நம் உள்ளத்தில் நன்கினிது பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

'தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது'

என அருளிச் செய்தவாற்றால், இறைவழிபாட்டினையும், அதனால் விளையும் நலனையும் குறித்துத் திருவள்ளுவர் வலியுறுத்தியிருத்தல் காணலாம்.

## மாணிக்கவாசகர் :

இவ்வாறே **மாணிக்கவாசகர்,** இறைவனை வழிபடும் தொண்டர்களை **உழவர்கள்** என்றும், அவர்கள் இறைவன்பாற் செய்யும் அன்பினை **விதை** என்றும், அன்பாகிய விதை ஒன்று பத்து நூறு ஆயிரம் எனப் பெருகிச் சிவபோகப் பெரும் பயிர் வளருமாறு செய்து நலம்பல விளைத்தலின், இறைவழிபாட்டினை **அருச்சனை வயல்** என்றும் குறிப்பிட்டு அருள்கின்றார்.

அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க!

என்பது திருவாசகம். வித்தும் வயலும் உழவும் ஆக வைத்து மொழிந்துள்ள உருவகத்தின் குறிப்பினால், அவற்றின் சிறப்பும் தேவையும் ஆகியவற்றை யாவரும் உணரலாம்.

## தொல்காப்பியர் :

இற்றைக்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டே, தமிழ்மக்கள் தெய்வ வழிபாடு செய்து வந்தனர்; வழிபடு தெய்வம் தம்மைத் காப்பாற்றும் என்ற தெளிவு உடையவராகத் திகழ்ந்தனர்; தெய்வ வழிபாட்டால் செல்வம் முதலிய பலவகை நலங்களும் எய்தப் பெற்றனர்; தாம் மட்டுமேயன்றித் தம்முடைய சந்ததியினர்க்கும் கூடத் தெய்வ வழிபாட்டினால் நலங்கள் விளையும் என்ற நம்பிக்கையும் உறுதிப்

பாடும் கொண்டிருந்தனர். இத்தகைய செய்திக் குறிப்புகள்,

"வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே"

எனவரும் தொல்காப்பிய நூற்பாவினுல் அறியப் பெறுகின்றன.

**சிவப்பிரகாசர் :**

வழிபாடு என்பது நம்மை நாம் பல வகைகளிலும் தூய்மைப் படுத்திக் கொள்ளும் செயலையாகும். நம்முடைய மனம் மொழி மெய் என்னும் மூன்றும், அழுக்குகளினுல் மூடப் பெற்றுள்ளன. அழுக்காறு அவா வெகுளி செற்றம் என்பன மன அழுக்குகள் பொய்கூறல் புறங்கூறல் கடுஞ்சொற்கூறல் பயனில் சொற்கூறல் என்பன மொழியின் அழுக்குகள். பொல்லாதன செய்தல், புல்லியன செய்தல் போல்வன மெய்யின் அழுக்குகள். மன அழுக்கைத் **தியானம்** என்னும் நீரினுலும், மொழியின் கண் நிகழும் அழுக்கைத் **துதி** என்னும் நீரினுலும், உடலின்கண் விளையும் அழுக்கினை **அருச்சனை** (வழிபாடு) என்னும் நீரினுலும் கழுவி, நாம் தூய்மை செய்து கொள்ளுதல் வேண்டும்.

"திருக்குறும் அழுக்காறு அவாவொடு
வெகுளி
செற்றம் ஆகிய மன அழுக்கைத்
தியானம் என் புனலால்; பொய்
புறங்கூறல்
தீச்சொல் என்கின்ற வாய் அழுக்கை

அருட்கிளர் நினது துதிஎனும் புனலால்;
அவத்தொழில் என்னும்மெய் அழுக்கை
அருச்சனை என்னும் புனலினுற் கழுவா
அசுத்தனேன் உய்யும்நாள் உளதோ?"

எனத் துறைமங்கலம் **சிவப்பிரகாச சுவாமிகள்** அருளிச் செய்திருத்தல் கொண்டு, இவ்வுண்மையினை உணரலாம்.

**பட்டினத்தார் :**

வழிபாட்டின் சிறப்பினையும் முறையினையும் இனி வேருெரு வகையாகவும் உணர்த்தலாம். நம்முடைய உடல் என்பது ஒருவகை **மாளிகை.** அதன்கண் மனம் என்பது ஒரு புனிதமான **அறை.** அதனை நாம் ஏற்ற பெற்றி போற்றிப் பாதுகாவாமையால், அது தூசு படிந்து இருள் நிறைந்து பாழறையாகக் கிடக்கின்றது. காமம் வெகுளி பொய் முதலிய குப்பைகள் அதன்கண் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. புனிதமும் தூய்மையும் மிக்குப் பொலிய வேண்டிய அவ்வறையில் தொழுவம் போல, மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகள் ஆகிய எருமைக் கடாக்கள் கொணர்ந்து கட்டப்பெற்றுப் **பாழறை** ஆக்கப்பட்டுள்ளது. இங்ஙனம் பல்லாற்ருனும் அசுத்தப்படுத்தப்பட்டுள்ள மனம் ஆகிய பாழறையினைத் தூய்மைப் படுத்தும் முறையும் நன் முயற்சியே, இறைவழிபாடு எனலாம்.

மனம் ஆகிய பாழறையினைத் தூய்மைப்படுத்த, நாம் அங்கேயுள்ள காமம், வெகுளி, பொய் முதலிய குப்பைகளையெல்லாம் வாரி அகற்ற வேண்டும். ஐம்பொறிகள் ஆகிய **எருமைக்** கடாக்களை அவிழ்த்து வெளியே வெருட்டி ஓட்டுதல் வேண்டும். பின்னர் **அன்பு** என்னும் நறுமணச் சாந்தினுல் மெழுகவும், **அருள்** ஆகிய விளக்கை ஏற்றவும், **துன்பம்** எனப்படும் இருளைப் போக்கவும் வேண்டும். அதன் பின் **உண்மை** என்னும் விதானம் விரித்து, அப்பாழறையினை அழகிய சிறந்த நல்ல **பள்ளியறை**யாக மாற்றி அமைத்தல் வேண்டும் அங்கே **சிந்தனை** எனும் செழுமலர்த் தவிசு இட்டு, அதன்கண் சிவபிரானும் உமாதேவியும் ஆகிய **கணவன் மனைவி** இருவரும் எழுந்தருளிக் **குடிபுகுந்து** நிலையாக வாழ்ந்து வருமாறு செய்ய முயலுதல் வேண்டும். இதுதான் சிறந்த வழிபாட்டு முறைமை.

"கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்எனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக்கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப், பொருதிறல்

மைஇருள் நிறத்து மதனுடை அடுசினத்து
ஐவகைக் கடாவும் யாப்புஅவிழ்த்து அகற்றி
அன்புகொடு மெழுகி, அருள்விளக்கு ஏற்றித்
துன்ப இருளைத் துரந்து, முன்புற
மெய்எனும் விதானம் விரித்து, நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளியறை ஆக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தைநீ இருக்க இட்டனன் ......
அருள்கனி சுரக்கும் பிரளய விடங்க! நின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டு, இங்கு
எழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே!"

என இந்த இறைவழிபாட்டு முறைமையினை, முற்றத் துறந்த முனிவரர் ஆகிய **பட்டினத்தடிகள்**, தாம் இயற்றிய திருக்கழுமல மும்மணிக் கோவையில் அழகுறப் பாடியருள்கின்றார்.

## வழிபடும் முறை :

இறைவழிபாட்டினைத் தனியாக இருந்தோ பலரோடு சேர்ந்தோ செய்யலாம். வீட்டிற் குடும்பத்தினரோடும், கோயில்களிற் பொதுமக்கட் கூட்டத்தோடும் கூடிச் செய்யலாம். நாடோறும் செய்யலாம்; இயலாமற் போனால் வாரம் ஒருமுறையேனும் தகுதியுடைய நல்லவர்கள் சூழலிற் சேர்ந்து செய்யலாம். இவற்றினாலெல்லாம் நாளடைவில் நமக்குப் படிப்படியே பலப்பல நலங்கள் விளையும் என்பது திண்ணம்.

எவர் எங்கு வழிபாடு செய்யினும், அங்குத் தூய்மையும் அமைதியும் பொலியுமாறு பார்த்துக் கொள்ளுதல் இன்றியமையாதது. தூய்மையும் அமைதியும் இல்லாத இடத்தில், மன ஒருமைப்பாடும் உண்மையன்பும் வழிபாட்டு உணர்வும் ஒருபோதும் நிகழமாட்டா. ஆதலின் இந்துக்களும், சமயவுணர்வுடன் தெய்வ நம்பிக்கையுடையவர்களும் ஆகிய நாம் அனைவரும், நம்முடைய திருக்கோயில்களில் எப்போதும் தூய்மையும் அமைதியும் ஒழுங்கு முறையும் நிலவுமாறு பார்த்துக் கொள்ள வேண்டுவது, நம்மனோர்க்குத் தலையாய கடமையாகும்.

கோயில்களிலோ, அதன் சூழல்களிலோ, எத்தகைய அசுத்தத்தையும் நாம் செய்தல் கூடாது; பிறர் செய்வதற்கும் அநுமதித்தல் கூடாது. கோயில்களுக்குச் செல்வோர் வீண் பேச்சுப் பேசுதல், கூச்சலிடுதல், அமைதியைக் குலைத்தல், ஒழுங்கு முறைகளை மீறுதல் ஆகியவற்றை ஒருபோதும் செய்தலாகாது. முறையான இறைவழிபாட்டின் பயனைப் பெற, நாம் இத்தகைய சிறுசிறு செயல்களையும் விதிகளையும் கூடக் கவனித்துக் கடைப்பிடித்து ஒழுகுதல் இன்றியமையாததாகும்.

## சாமர்செட் மாம் :


உலகப் புகழ் பெற்ற எழுத்தாளரும் நூலாசிரியரும் ஆகிய **'சாமர்செட் மாம்'** என்னும் பேரறிஞர், 1938ஆம் ஆண்டில் ஒருமுறை நம் இந்திய நாட்டைச் சுற்றிப் பார்க்க வந்தார். அப்போது அவர் பல இடங்களுக்குச் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு, நமது **மதுரை** மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலுக்கும் வந்து பார்த்து மகிழ்ந்தார். அப்போது அவர் உள்ளத்தில் எழுந்த சில எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தம்முடைய நூல் ஒன்றில் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

"இந்தியாவில் எப்பொழுதுமே ஒரு சப்தம் இருந்து கொண்டிருக்கின்றது. இங்குள்ள மக்கள் நாள்முழுவதும் இடையீடின்றித் தங்களுடைய குரலில் உச்ச நிலையிற் பேசிக் கொண்டேயிருக்கின்றார்கள். அதுவும் கோயில்களிலோ, எப்பொழுதையும்விட இன்னும் மிக அதிகமான உரத்த குரலிற் பேசுகின்றார்கள். இந்தச் சந்தடியும் இரைச்சலும் மிகப் பயங்கரமாக இருக்கின்றது. இவர்கள் பிரார்த்தனை புரிகின்றார்கள்; துதிப் பாடல்கள் பாடு

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS



துர்க்கா பரமேசுவரி, வேதாரணியம்.



காட்சி கொடுத்த நாயனர்—வேதாரணியம்.

கின்றார்கள்; ஒருவரை ஒருவர் உரக்கக் கத்திக் கூப்பிடுகின்றார்கள்; மிக உரத்துக் கூச்சலிட்டு விவாதிக்கின்றார்கள்; சண்டை சச்சரவுகள் புரிந்து கொள்கின்றார்கள். ஒருவருக்கொருவர் அன்புரை தெரிவித்துக் கொள்கின்றார்கள். இவ்வளவும் கோயிலிலேயே நடைபெறுகின் றன. மக்களின் பயபக்தியுணர்வைக் காட்டும் அறிகுறிகள் எதுவும் இங்குத் தென்பட வில்லை. என்ற போதிலும் இத்தனைக் குறை பாடுகளுக்கும் இடையே கூட, ஏதோ ஒரு வகையான தெய்வீக வுணர்வு நம்மை மெய்ம் மயிர் சிலிர்க்க வைக்கும் நிலையில், இக்கோயில் களில் நிலவுகின்றது. ஏதோ ஒரு வியக்கத் தக்க வகையில் அருகிலும் உயிர்ப்புடனும் தெய்வங்கள் இங்கு விளங்கி வருவதாகத் தெரிகின்றது,"

"There is always a noise in India. People talk all day long at the top of their voices, but in the temple they talk more loudly than ever. The row is terrific. People pray and recite litanies, they call to one another, voc ferously discuss, quarrel or greet one another. There is nothing that suggests reverence and yet there is a vehement overwhelming sense of the divine that sends cold shivers down your spine. In some strange way the gods there seem to be near and living."

—*William Somerset Maugham,*
A writer's Notebook, P. 245

**முடிவுரை :**

நாம் நம்முடைய கோயில்களில் அமை தியையும்; தூய்மையையும் தெய்வ சாந் நித்திய வுணர்வையும் எங்ஙனம் போற்றிப் பாதுகாக்க முற்பட வேண்டும் என்று உணர்ந்து கொள்ளுதற்கு, மேலே குறித்த **சாமர்செட் மாம்** என்னும் பேரறிஞரின் கருத்து நமக்கு ஓரளவு துணை புரியும். நமது தெய்வ நிலையங் களில் தூய்மையும் அமைதியும் ஒழுங்கும் பேணிப் பாதுகாத்து, இறைவழிபாட் டினை முறையுற நிகழ்த்தி, நலங்கள் பெற்று உய்ய நாம் அனைவரும் முயலுவோமாக !

—ஆசிரியர்.

## கோயில் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 19— 3—66 | தாராபுரம் கொசவலசு, பகவான் திருமலைசாமி கோயில், யுகாதி பெருந் திருவிழா. |
| 21— 3—66 | திருவலம் வில்வநாதசுவாமி கோயில், பரிசளிப்பு விழா. |
| 22— 3—66 | பண்ணாரி மாரியம்மன் பங்குனிப் பெருந்திருவிழா. மதுராந்தகம் கோதண்ட ராமசுவாமி கோயில், ஸ்ரீராமநவமி விழாத் தொடக்கம். |
| 24— 3—66 | சென்னை ஏகாம்பரேசுவரர் கோயில், நூதன துவஜஸ்தம்ப மகா கும்பாபி ஷேக விழா. |
| 25— 3—66 | திருச்சுழியல் திருமேனிநாதர் கோயில் பங்குனிப் பெருவிழா.<br>காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் ,,<br>திருவாலங்காடு வடாரணியேசுவரர் கோயில் ,,<br>திருத்தவத்துறை சப்தரிஷீசுவரர் கோயில் ,,<br>திருவிரிஞ்சிபுரம் வழித்துணைநாதர் கோயில், பங்குனிப் பெருவிழாத் தொடக்கம். |

# சங்கற்ப நிராகரணம்

## 5. பாடாணவாதி சங்கற்பம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஐக்கியவாதியின் கொள்கைகளை மறுத்த **பாடாணவாதி**, இனித் தன் கொள்கைகளைக் கீழ் வருமாறு எடுத்துக் கூறுகின்றான் :

'தொன்மையிலேயே உயிர்களுக்கு இயல்பாக ஆணவமலம் என்பதொன்று உண்டு. அம்மலத்தினைப் போக்குதற் பொருட்டு மாயையானது உயிரின்பால் வந்து பொருந்தும். இறைவன் உயிர்களுக்கு அவைகள் முன்னே செய்த வினைகளுக்கு ஏற்ப, உடல்களைப் படைத்துக் கொடுப்பான். உயிர்கள் அவ்வுடல்களோடு பொருந்தித் தங்களது நல்வினை தீவினைகள் என்னும் இரண்டன் பயனையும் நுகர்ந்து வரும்.

அங்ஙனம் நுகருங்கால் உயிர்களுக்கு ஆணவமலத்தினால் மறைப்பு நிகழ்கின்றது. அதனால் முன்பு நன்றாகக் காணும் தன்மை பெற்றிருந்த கண்கள் இடை நடுவே படலம் ஏற்பட்டு மறைப்பதனால் தமது பார்வையினை இழந்துவிட்டுத் துன்புறும் மக்களைப் போல, உயிர்களும் ஆணவமல மறைப்பினால் அறிவை இழந்து துன்புறும். அங்ஙனம் அறிவு மறைப்புண்டு துன்புறுதலால், உயிர்களுக்குப் பிறவித் துன்பமானது மேலும் மேலும் பெருகாநிற்கும் இஃது உயிர்களின் கட்டுற்ற நிலை.

இனி வீடுபேற்று நிலையோ எனின், அறியாமை மிக்க மாந்தர்கள் எல்லாத் துன்பங்களும் நீங்கப் பேருறக்க நிலையில் அழுந்திக் கிடக்கும் தன்மைபோல—சுட்டிக் காண்டற்கு ஒரு காட்சியும் இன்றாய், இன்ப துன்ப நுகர்ச்சிகளும் இல்லாதொழிய, உயிர்கள் ஆணவமலத்தில் அடங்கிக் கல் (பாடாணம்) போலக் "கரணங்கள் கெட இருக்கும்" நிலையே விடுபேறாகும்" எனப் பாடாணவாதி புகன்றான்.

இதன்கண், விட்டு நிலையில் உயிர்கள் கல்லினைப் போலக் கிடக்கும் என்று அகச் சமயத்தில் பாடாணவாதி கூறும் திறனைப் போலவே, புறச்சமயத்தில் **பிரபாகரன்** என்பானும் கூறுவன் என்பது,

அருஞ்செயலின் அபாவத்தே
அபூர்வமெனும் அதுதோன்றித்
தருஞ்செயல்ஒன் றின்றியே
தான்பலிப்ப தாகும் அது
வருஞ்செயல்ஒன் றின்றியே
மண்சிலைபோல் ஆம்முத்தி
தரும்செயலும் எனவுணர்ந்து
தாரணிமேல் அவன்சாற்றும்

எனவரும் சித்தியார் பரபக்கச் செய்யுளால் உணரலாம்.

"ஆணவந்தான் அநாதி, அந்நம் அடையாதாகும், அடையின் அந்த ஆன்மாவும் அழியும்" என்பது பாடாணவாதியின் முடிந்த கொள்கை. பாடாணம் என்பது கல். முத்தி நிலையில் உயிர்கள் ஒரு செயலும் இன்றிப் பாடாணம் போற் கிடக்கும் என்று கூறுதலால், இவனுக்குப் பாடாணவாதி என்று பெயர் ஏற்பட்டது.

### பாடாணவாதி நிராகரணம் :

பாடாணவாதி தன் கொள்கைகளைக் கூறி முடித்ததும், **பேதவாதி** எழுந்திருந்து அவற்றை மறுக்க முற்படுகின்றான் :

சொற்களைப் பலவாகப் பயனின்றிப் பார்த்துரைத்து, உவமைகளும் கூறி முடிவில் எல்லாக் கருவிகளும் நீங்கி உயிர்கள் ஆணவமலத்தில் அழுந்திக் கிடக்கும் கேவல நிலையினையே வீடுபேறாம் என நீ துணிந்துரைத்தாய்! இவ்வாறு கூறினார் வேறுபிறர் எவருமிலர்!

விளக்கானது ஒளி நல்கக் கண்கள் பொருள்களைக் கண்டு வருதல் போல, உயிர்களுக்குத் துணையாக இயைந்த கருவிகள் பொருள்களை விளக்கி யுணர்த்த, உயிர்கள் சுவையொளியூறோசை நாற்றங்களை நுகர்ந்து கொண்டு வரும் என உயிர்களின் சகலநிலை பற்றி நீ கூறியது பொருத்தமேயாகும். படலம் மறைத்ததனால் இடையே காட்சி தடைப்பட்ட கண்ணினையுடைய உயிர்களுக்குப் பின்னர் ஒரு நிலையில் மருந்திடுதல் முதலியனவற்றால் படலம் நீங்கிப் பார்வை தெளிவடையக் காண்கின்றேமாதலின், விளக்கினைப் போல உயிர்களுக்குக் காட்டாக நிற்கும் கருவிகள் இல்லாதவழி உயிர்கள் ஆணவமலத்தில் அழுந்திக் கிடக்கின்ற கேவலநிலை பற்றியும், பொருத்தமாகவே பிழைபாடின்றிக் கூறினாய்!

ஆயின், வீடுபேற்று நிலையினையும் அத்தகையதொரு கேவலநிலை போலவே நீ கூறிவிட்டமை, பொருத்தமாகத் தோன்றுகின்றிலது! சுட்டிக் காண்டற்கு ஒரு காட்சியுமின்றித் துன்ப நுகர்ச்சியும் இன்றி, எல்லாக் கருவிகளும் நீங்கிய நிலையே வீடுபேறு எனின், கருவிகள் இழந்தவர்கள், இறந்தொழிந்தவர்கள், கருவிற் கிடப்பவர்கள், மரமிவர்ந்தோர்கள் முதலினோரும் வீட்டுநிலை எய்தியவர்களாதல் வேண்டும்!

இத்தகையதொரு வீட்டுநிலையினை எய்துதற்கு எத்தகைய ஞானாசிரியனும் வேண்டுவதில்லை. மிக எளிதில் எவரும் எய்திவிடத் தகுந்த இத்தகைய நின் வீட்டுநிலை, எல்லாக் கருவிகளும் நீங்கி ஆணவமலத்தோடு கூடி ஒன்றும் அறியாமல் கிடக்கும் கேவல நிலைத் துன்பமேயன்றி வேறொன்றன்று.

இப்பகுதியின்கண், உயிர்கள் வீட்டு நிலையில் கரணங்கள் கெட்டு அறிவிழந்து கல்லைப்போற் கிடக்கும் எனப் பாடாணவாதி சொல்லுதல் பொருந்தாதெனப் பேதவாதி மறுத்ததனை ஒட்டி,

"ஒடுங்கிடா கரணந் தாமே;
ஒடுங்குமா றுணர்ந்தொ டுக்க
ஓங்கிடும் என்னில், நின்றது
ஒடுங்கிடா; கரணம் எல்லாம்
ஒடுங்கிட ஒடுங்க உள்ள
உணர்வுதான் ஒழியும்; வேறாய்
ஒடுங்கிடின் அன்றி மற்ற
உண்மையை உணரொ ணாதே"

எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளும் மறுத்தல் காணலாம்!

வீட்டு நிலையில் ஆணவமலம் "ஔடதத்தால் தடுப்புண்ட விடமும், ஒள்ளெரியின் ஒளி முன்னர் இருளும், தேற்றின் வருபரல் சேர் நீர்மருவு கலங்கலும் போலாகி, மாயாதே தன் சக்தி மாய்ந்து தேயும்" என்பது சைவ சித்தாந்தம்.

**பேதவாதி சங்கற்பம்;**

இவ்வாறு பாடாணவாதியை மறுத்த **பேதவாதி**, பின்னர்த் தன் கொள்கைகளை எடுத்துக் கூறுகின்றான்:

"நிலத்தின் கீழ்ப் புதையுண்டு கிடக்கும் செம்பின்கண் உண்டாகும் களிம்பானது இரத குளிகை சென்று கூடிய பொழுது நீங்க, அச்செம்பு பத்தரை மாற்றுப் பொன்னாயின தன்மைபோல — தகுதி பெற்ற உயிர்கள் இறைவனது அருளால், ஆணவம் மாயை கன்மம் எனப்பெறும் மலங்களின் தொடர்பொழிந்து, அழியாததாய்க் குற்றமற்றதாய் விளங்கும் வீட்டுநிலை பெற்று, "பெறுவானும் பேறுமாய்ப் பேதமுற இருக்கும்" என்று மறை வல்ல நல்லோர்கள் சொல்லுகிற்பர்.

இப்பகுதியின் 'களிம்பு நீங்கிய செம்பு பொன்னாதல் போல உயிர்கள் மலம் நீங்கி வீட்டுநிலை எய்தும்' எனப்பெறும் கருத்தினை, "செம்பிரத குளிகையினால் களிம்பற்றுப் பொன்னாய்ச் செம்பொனுடன் சேரும். மலம் சிதைந்தால் சிவன் நம்பனுடன் கூடும்" எனச் சிவஞானசித்தியாரும், பிறன் கூற்றாக எடுத்து மொழிதல்

காணலாம். உயிர்கள் முத்திநிலையில் இறைவனின் வேருய்ப் பேதப்பட்டு நிற்கும் எனக் கூறுதலின், இவனுக்குப் பேதவாதி எனப் பெயர் அமைந்தது.

**பேதவாதி நிராகரணம் :**

இங்ஙனம் மேலே தன் கொள்கைகளைக் கூறிய பேத வாதியினைச் **சிவசமவாதி** அடுத்தெழுந்து மறுக்கத் தொடங்கு கின்ருன் :

'வேதசாத்திரம் மிருதி புராண கலை ஞானம்' என்னும் இவைகளெல்லாம் பதிபசுபாசம் என்னும் முப்பொருட்கும் அழிவில்லை எனச் சற்காரிய வாதம் கூறுகின்றன. அவ்வுண்மையை மறந்து விட்டு, இரத குளிகையின் செயலால் செம்பின்கண் உளதாகிய களிம்பு கெட் டொழிதலைப்போல, இறைவனின் அருளி ஞல் உயிர்களின் மலங்கள் கெடும் என்று கூறுகின்ருய். நின் கூற்று சான்ருேர் களின் நூல்களுக்கு முரண்படுமாதலால், வீடுபேற்றில் பாசம் கெடும் என்ற நின் கொள்கை பொருந்தாது.

மேலும், இரத குளிகையானது செம்பை நிலைநிற்க ஒட்டாமல் அதனை யழித்துப் பொன்னுகச் செய்தல் போல் என்று நீ கூறிய உவமையானது, அதன் உவமேயமாகிய வீடுபேற்று நிலைக்கு இயைந்ததாக இல்லை. இயையுமாயின், செம்பானது அழிந்து பொன்னுக மாறுதல் போல, உயிரானது அழிந்து சிவமாக மாறுகின்றது எனல் வேண்டும். அவ்வா ருயின், உயிரானது முதல் கெடாமல் பெறுவானுய் இருப்பச் சிவம் பேருக நிற்கும் என்று நீ கூறிய பேதவாதம் பழுதுபடும்.

இவையன்றியும், நின் கூற்றில் வேருெரு குற்றமும் உளது! அஃது யாதெனில், செம்பானது தன்னைத் தூய்தாக்கிய குளிகையுமாகாமல், தன்னுடைய தன்மையும் கெட்டு, இடையே பொன்னுயின தன்மைபோல — உயிரும் தன்னைத் தூய்மைசெய்த சிவத்தின் இயல் பும்பெருமல், தன் தன்மையும் அழிந்து, வேறு ஒரு பண்பினைப் பெறுவதாதல் வேண்டும். அங்ஙன மின்மையின், நின் கூற்று குற்றமாதல் தெளிவு. வீடு பேரு வது, செம்பும் இரதகுளிகையும் போலும் என்று நீ கூறியது பொருந்தாது. முத்தி யில் முப்பொருள்களும் அழியாமல் இருக் கும் என்பது சைவசித்தாந்தம். இதனை,

"முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்!
சுத்தஅநு போகத்தைத் துய்த்தல் அணு—மெத்தவே
இன்பம்கொ டுத்தல்இறை, இத்தைவிளை வித்தல்மலம்
அன்புடனே கண்டுகொள்அப் பா"

எனவரும் 'உண்மை விளக்க'ச் செய்யு ளால் எவரும் இனிதுணரலாம். எனவே, செம்பினைப் பற்றிய களிம்பு போல உயிரி னைப் பற்றியுள்ள மலங்கள் அழிந்து விடும் எனக் கூறும் பேதவாதியின் கொள்கை பொருந்துவதன்று.

(தொடரும்)

—ஆசிரியர்.

## கோயில் நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| மூவலூர் | — ஸ்ரீ மார்க்கசகாயசுவாமி தேவஸ்தானம் | — ருத்திரபாத பெருவிழா |
| இளையாத்தங்குடி | — ஸ்ரீ கைலாசநாதசுவாமி நித்ய கல்யாணி அம்மன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த கீரணிப்பட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் | — பெருவிழா |
| இராஜேந்திரம் | — ஸ்ரீமத்யார்ஜுனேசுவரசாமி கோயில் | — பங்குனி பிரம்ம உத்சவம். |

# கோயில் நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | — | ஸ்ரீ சென்னமல்லீசுவரர் | — | பிரம்ம உத்சவம். |
| 2. | சென்னை | — | ஸ்ரீ அரங்கநாதசுவாமி தேவஸ்தானம் | — | பெருவிழா. |
| 3. | மைலாப்பூர் | — | ஸ்ரீ கபாலீசுவரர் கோயில் | — | பெருவிழா. |
| 4. | பழனி | — | ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் | — | பங்குனிப் பெருவிழா |
| 5. | கல்லக்குறிச்சி | — | ஸ்ரீ கலியுக வரதராஜப் பெருமாள் கோயில் | — | பிரம்ம உத்சவம். |
| 6. | கும்பகோணம் | — | ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் கோயில் | — | தெப்பத் திருவிழா (4—4—'66) |
| 7. | கும்பகோணம் | — | ஸ்ரீ ராமசுவாமி கோயில் | — | ஸ்ரீராமநவமி பெருவிழா. |
| 8. | ஸ்ரீவில்லிபுத்தூர் | — | ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம் | — | திருக்கல்யாண மகோத்சவம். |
| 9. | திருச்சி | -- | மலைக்கோட்டை—ஸ்ரீ தாயுமானவர் தேவஸ்தானம் | — | தெப்பத்திருவிழா. |
| 10. | சுவாமிமலை | — | ஸ்ரீசுவாமிநாதசுவாமி கோயில் | — | ஸ்ரீ வள்ளி திருக் கல்யாண உத்சவம். |



திருப்பூந்துருத்தி ஸ்ரீ புஷ்பவன ஈசுவரர் கோயில்
மகா கும்பாபிஷேகக் காட்சி.

# "மதுரகவியும் மணிமொழியும்"

(திரு. என். எஸ். நாத்தாச்சாரியார், தஞ்சை)

ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த
சீராகும் சித்திரையில் சித்திரைநாள்—
பாருலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்
களிலும்
உற்றதுநமக்கு என்று நெஞ்சே! ஓர்

—உபதேசரத்தினமாலை

**எண்ணிக்கையில் ஏற்றம் :**

திருமாலடியார்களான ஆழ்வார்களைப் பன்னிருவர் என்றும், பதின்மர் என்றும் பெரியோர் பணிப்பர். ஸ்ரீ ஆண்டாளைத் தமப்பரான பெரியாழ்வாருடன் ஒன்றுபடுத்தியும், மதுரகவியைத் தம் ஆசாரியரான இன்பமாரியாம் நம்மாழ்வாருடன் ஒருமைப்படுத்தியும் பதின்மரென்று கணக்கிடுவார்கள். இதனால் தான் ஆழ்வார்களின் தோற்றம் பத்திற்கும் "அபிநவ தசாவதாரம்" (புதிய பத்து அவதாரம்) என்றும் சமயப் பெருவழக்குண்டு. திருமாலின் ஒவ்வொரு அவதாரத்தையும் ஆழ்வார்களின் ஒவ்வொரு அவதாரத்துடன் ஒருமைப்படுத்தி மிக அழகான பொருள்நயம் கூறுவார்கள். மதுரகவியார் ஆழ்வார்களின் வரிசையில் ஆறுவதாகக் கணக்கிடப்படுபவர். மதுரம் மிகுந்த கவிகளைப் பாடுபவர் ஆதலின், மதுரகவியார் எனப் பெயர் பெற்றார். திருமங்கை ஆழ்வார் நாலுகவிப் பெருமாள் என்றால், இவர் மதுரகவி மறையோராவார். இவர் நம்மாழ்வார் பற்றிப் பாடிய தேனிலும் இனிய கவிதைகள் பதினொன்றாகும். ஸ்ரீ அமுதனார் இராமாநுசனை நடுநாயகமாய்ப் பாடிய இராமாநுச நூற்றந்தாதியைப் போல், இவர் நம்மாழ்வாரையே நடுநாயகமாய் வைத்து இப்பாட்டுக்களைப் பாடினார். முதல் பாட்டின் முதல் சொல் தொடர்ச்சியான "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்பதைக் கொண்டே இவர் நூலிற்குப் பெயரிட்டார்கள். பாட்டுக்களின் முதல் கடைச் சொற்றொடர்களை ஒன்றுபடுத்திப் பார்த்தால் "கண்ணிநுண் சிறுத்தாம்பினால், நம்புவார் பதிவைகுந்தம் காண்மினே" என்றதொரு பொருள் நயத்தையும் காணலாம். இவர் பிரபந்தத்தை முதலாயிரம் என்ற பிரிவில் கடைசியில் சேர்த்து வைத்துள்ளார்கள்.

**அடியார்க்கு அடிமை :**

எம்பெருமானுக்கே அடிமைப்பட்ட நிலையை "பகவந்நிஷ்டை" என்றும், அவன் அடியார்களுக்கே அடிமைப்பட்டிருப்பதை "பாகவத நிஷ்டை" என்றும் ஸ்ரீவைணவர்கள் கூறுவார்கள். இந்தப் பாகவதநிஷ்டையையே "சரமபர்வம், என்றும் "ஐந்தாம்பருவம்" என்றும் "சரம நிஷ்டை" என்றும் அழைப்பார்கள். கன்றைக் காட்டிக் காராம்பசுவை அழைப்பதுபோல், அடியார்கள் பக்தியைக் காட்டி எம்பெருமானை அழைப்பதுதான் மிக எளிது என்பது ஸமயப் பெரியோர்களின் துணிவு. "தேவுமற்றறியேன் குருகூர்நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே" (2) "திரிதந் தாகிலும் தேவபிரானுடைக் கரிய கோலத் திருவுருக்காண்பன்நான்" (3) என்று இவர் கூறிய நல்லுரையே நல்லுரையாகும். இவர் வடமொழி நூல்களின் துறை கண்ட மாபெரும் புலவர், முதலில் இறைவன் பொன்னடியையே போற்றிப் பூசித்தார். ஆனால் கடைசியில் "வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ் செய்த மாறன்" எனக் கூறி இன்பத்தின் இறுதிகண்டவர். "துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தொல்வழியே நல்வழியாம் துணிவார்கட்கே" என்று திருவாய் மலர்ந்த ஸ்ரீவேதாந்த தேசிகன் மதுரகவியின் வழியையே நல்லதோர் நய வழியாகக் கூறினார். இவ்வழியையே "சத்துருக்னன்" காட்டிய வழி என்றும் இராமாயணப் பேரறிஞர் போற்றுவர். அந்தணராய்த் தோன்றிய இவர் நம் நம்மாழ்வாரையே நலமந்த

மில்லா நற்பொருளாகக் கொண்டார் என்பதையும் நாம் கண்டுகளிக்கவேண்டும்.

இவ்வாறே சைவசமய அடியார்களிலும் ஒரு மகானைக் காண்கிறோம். அவரே அப்பூதி அடிகள் நாயனாராவார். அவரும் தமக்கு அனைத்தும் அப்பர் பெருமானே என்று உறுதி கொண்டு உய்ந்தார். "வேறொரு பேர் முன் எழுத வேண்டிய காரணம் என்கொல் கூறும்" (நீர் சமைத்த தண்ணீர்ப் பந்தர்க்கு வேறு ஒருவர் பெயரிடக் காரணம் என்ன?) என்று அப்பர் பெருமான் திருவாக்கிடவே, ஆருத் துயருற்ற அப்பூதி அடிகளார் கூறிய "நன்று அருளிச் செய்திலீர். "திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர் தம் திருப் பேரோ வேறொருபேர்?" என்ற அவர் பதிலைக் கண்கொண்டு ஏட்டில் படித்தால், அடியார் பற்று எவ்வளவு ஊற்றம் பெற்றிருக்கிறது என்பதை உணரலாம். ஞானசம்பந்தரும் "கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல் உண்மையாம் எனின் உலகர் முன் வருக" என்று அடியார் பெருமையைப் பணயம் வைத்தன்றோ பூம்பாவைக்குப் புத்துயிர் ஊட்டினார். சேக்கிழார் பெருமான் பாயிரப் பதிகத்தில், அடியார் பெருமைக்கு அரக்கு முத்திரை இட்டது போல், பின்வருமாறு பாடியிருத்தல் காணலாம்.

> அளவிலாத பெருமையராகிய
> அளவிலா அடியார்புகழ் கூறுகேன்
> அளவுகூட உரைப்பது அரிதாயினும்
> அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்"

எம்பெருமானைக் கொண்டு காரியம் கொள்வது, கையைப்பிடித்துக் காரியம் கொள்வதற்கு ஒப்பென்றும், அடியார்களைக் கொண்டு காரியம் கொள்வது காலைப் பிடித்துக் காரியம் கொள்வதற்கு ஒப்பென்றும் கூறுவார்கள். எண் திசையும் புகழ்கொண்ட ஸ்ரீ இராமாநுஜர், பிள்ளை வில்லி உறங்காதாஸருக்கு "நாம் எம்பெருமான் கை பார்த்திருப்போம் அல்லோம் காணும்; எனக்குப் பெரிய நம்பிகள் உண்டு, உமக்கு நான் உண்டு" என்று கூறி ஆசாரிய ஸம்பந்தத்தின் மூலமாய் அடியார் பெருமைக்கு முத்தாய்ப்பிட்டார். "தந்தை என நின்ற தனித் திருமால் தாளில் தலைவைத்தோம் சடகோபன் அருளினாலே" என்று பேசும் அமிருதாசுவாதினி, ஆழ்வார் பக்தியே ஆலிலை எம்பெருமானை அடைய எளிய வழியாகும் எனப் பேசிற்று. பகவானும் "தன் சங்கல்பத்தைக் குலைத்தாகிலும் ததீயர் (அடியார்கள்) சங்கல்பத்தை (எண்ணத்தை) நிறைவேற்றுவன்" என்ற பெரியோர் பொன் மொழிக்கிணங்க, இறைவன் அடியார்க்கு அடியார்களிடத்தில்தாம் அதிகம் பற்றுள்ளவன். தன் அடியரான திருமழிசைப் பிரானின் அடியரான கணிகண்ணனுக் காகத் தன் பைந்நாகப் பாயைச் சுருட்டிக்கொண்டு புறப்பட்டுப் பெருமாள் சொன்னவண்ணம் செய்தார் என்றால், அடியார்களின் பெருமையை ஏட்டில் எழுதி, கருத்துரையால் காட்ட இயலுமோ?

**அவதாரப் பெருமை :**

செந்தமிழ் நாடென்று சிறப்புற்ற பாண்டி நாட்டிலே ஈரொன்பதாகிய திருப்பதிகளில் "திருக்கோளூர்" என்ற திருப்பதி மிகவும் பெருமை பெற்றது. இங்கு ஆதிசேஷ சயனக் கோலத்தில் "வைத்த மாநிதி" என்ற பெருமாள் யோகு செய்கிறான். "நிக்ஷேபவித்தன்" எனவும் அவரது திருநாமம். ஸ்ரீவல்லி நாச்சியார். ஸ்ரீகர விமானம், குபேரதீர்த்தம், தாமிரபரணிநதி என்ற வற்றாலும் திருக்கோளூர் சிறப்புடைய தலமாகும். அதர்ம தேவதை குபேரனிடம் இங்கே நவநிதிகள் ஒளித்துக் கொண்டிருக்கின்றன எனக் கோள் சொல்லியதால், இத்தலத்திற்குக் கோளூர் எனத் திருப்பெயர் ஏற்பட்டது. "பிசுன க்ஷேத்திரம்" எனவும் அழைப்பார்கள். இத்திவ்விய தேசத்தின் கிழக்கே இருபது கல் தொலைவில் தான், ஆழ்வார் அவதார க்ஷேத்திரமான ஆழ்வார் திருநகரி யுள்ளது.

வையம் எல்லாம் வாழவைக்கும் இத் திருக்கோளூரிலே ஈசுவர வருஷம் சித்திரை மாதம் வெள்ளிக்கிழமை சித்திரை நக்ஷத்திரத்திலே குமுதர் கருடன் இருவர் அம்சமும் ஒரு அம்சமாய், நம்மாழ்வாராகிய கதிரவன் தோன்றும் முன்பு, அருணோதயம் போலத் தோன்றினார் மதுரகவி ஆழ்வார். நம்மாழ்வாரைவிட வயதால் முந்தியவர். கண்ணபிரான் வாழ்ந்தகாலத்தவர் எனவும் கூறுவார்கள். வடநாட்டுத் திருப்பதிகள் காணச் சென்ற இவர், கடைசியில் திரு அயோத்தி சென்று அங்கு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ இராமபிரானை ஸேவித்து வரும் நாளில், ஓர் நள்ளிரவில் தென் திசையில் வானளாவி நின்ற சோதியைக் கண்டு,

அதனைக்கண்டு தெளியத் தம் நாடான தமிழ் நாட்டை நோக்கிப் புறப்பட்டார். அச்சோதி படிந்து அமைந்த, ஆழ்வார் திருநகரியில் வீற்றிருந்த, நம்மாழ்வார் திருமேனியைக் கண்ணுரக் கண்டு வணங்கி அவருக்குக் கட்புலன் உளதா என அறிய "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்" (இந்த உடலில் பிறந்த அணுவான ஜீவான்மா எதை உண்டு எப்படிவதியும்) என்ற கேள்வியைக் கேட்க ஆழ்வாரும் "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" (அந்த உடலின் இன்ப துன்ப நுகர்ச்சிகளையே நுகர்ந்து அத்துடன் இருக்கும்) என மறுமொழிபகரவே அவரையே பரமாசாரியனுகத் தேறித் தண்டனிட்டு வணங்கினர். அவர் சோதி வாய் திறந்து பணித்த திருவாய் மொழியைப் பட்டோலை சாற்றிக்காத்தார். "ஆயிரம் பாட்டந்தாதிச் செம்மொழிப்பாமாலை ஒன்றும் செப்பிடக் கேட்டு எழுதிவைத்தான்" எனப் புலவர் புராணம் கூறும்.

மதுரகவியாழ்வாரும் அத்திருப்பதியிலே சில நாள் எழுந்தருளி இருந்து, ஆழ்வார் திருநாட்டை அலங்கரித்தபின் அவருக்குத் திருக்கோயில் அமைத்து வழிபட்டு வந்தார். இவ்வாறு மதுரகவிகள் தமது ஆசாரியரது திருப்பாதம் அல்லது வேறொன்றும் காணுது சிலநாள் வாழ்ந்து, பிறகு சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தான பேரின்ப வீட்டை அடைந்தார். ஆழ்வாருக்குப்பல ஆண்டுகளுக்குப்பின் தோன்றி நாலாயிரம் வகுத்த நாதமுனிகள் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்று இவர் பாடிய பாட்டையே மந்திரமாகப் பன்னீராயிரம் தடவை ஜபித்து நம்மாழ்வாரிடமிருந்து திருவாய் மொழியைப் பெற்ருர். இதனுல் இக்"கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பாடலுக்கு வேதமந்திரத்தினேடு ஒப்புவமை சொல்லி ஏற்றம் கூறும் பெருமை ஏற்பட்டது. இவர் வெளியிட்டருளிய பத்துப்பாடல்களின் இனிமையை, ஆழ்வாருடன் இவருக்கு ஏற்பட்ட பத்துவிதமான தொடர்புடன் கூட்டி "இன்பத்தில் இறைஞ்சுதலில்" என்ற பாடலிலே ஸ்ரீ வேதாந்த தேசிகன் மிக அருமையாக எடுத்துக் காட்டி உள்ளார்.

**ஆழ்வார் பேச்சு :**

மதுரகவியாழ்வார் தம் பாடல் ஒவ்வொன்றிலும் ஆழ்வார் திருநாமத்தையும் பெருமையையும் எம்பெருமான் பெருமையுடன் முத்தும் பொன்னும் கலந்து வைத்தாற்போல் கலந்து தொகுத்துக் காட்டியுள்ளார். (1) தேவு மற்றறியேன் "(2) வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் (3) காரிமாறப்பிரான் (4) சடகோபன் என்நம்பிக்கு, பெரியவன் குருகூர் நம்பிக் காளுரியனுய் அடியேன் பெற்ற நன்மையே (6) என்னை ஆண்டிடும் தன்மையான் (7) செயல்நன்ருகத் திருத்திப்பணி கொள்வான்" என்னும் இப்புடையிலே ஆழ்வாரையே உண்ணும் சோறு தின்னும் வெற்றிலை, பருகு நீராக்கிப் பார்புகழ் எய்தினர்.

"மன்றே புகழும் திருவழுந்தூர் வள்ளல்
மாறனை முன்
சென்றே மதுரகவிப் பெருமாள்தென்
தமிழ்த்தொண்டையில்
ஒன்றேபதிகம் உரைத்தவன் பொன்னடி
உற்றுநின்ருன்
என்றே பதிகம் பதிகமதாக இசைத்தனனே"

என்றபடி கம்பனுக்கும் இவரே வழிகாட்டினராணர். கவிச் சக்கரவர்த்தி ஆகிய கம்பர் பெருமானே விதந்து வியந்து போற்றும் மாட்சிமையுடையவர் எனின், மதுர கவிகளின் அருமை பெருமைகளை நம்மனேர் அளவிட்டுரைக்க இயலுமோ ?

---

## கோயில் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 14—3—66 | சென்னை ஸ்ரீவத்ஸபுரம் ஆஞ்சநேய வரதராஜ சுவாமி கோயில், பக்த ஆஞ்சநேயர் அவதார வைபவம். |
| 18—3—66 | திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயில் பங்குனிப் பெருவிழாத் தொடக்கம். |
| 26—3—66 | திருப்பனந்தாள் ஸ்ரீ வீரியம்மன் கோயில் பங்குனி உத்திரப் பெருவிழா தொடக்கம். |
| | காஞ்சிபுரம் திருவேகம்பநாதர் கோயில் ,, ,, ,, |

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஏவலாளருடன் சென்ற ஆழ்வானும் பெரிய நம்பிகளும் சோழன் சபையினுள் கம்பீரமாகவே புகுந்தனர். அவையிலே சோழன் ஆதனத்திருக்க, பல வித்வான்கள் குழுமியிருந்தனர். ஆழ்வான் "அரசே நம்மை இங்கே அழைத்த காரணம் யாது?" என்று வினவ, சோழனும் ஓலையை அவரிடம் நீட்டி 'இதில் நீர் கையெழுத்திடவேணும்' என்று சொன்னான். நாலூரராச்சான் அரசனைப் பார்த்து 'அரசே இது எம்பெருமானாரல்ல. அவர் வேடத்திலே வந்த கூரத்தாழ்வான்' என்று கூறினான். அரசன் கோஷ்டனாய்த் துடித்தான் எம்பெருமானார் தப்பி விட்டனரே என்று. அவரை உடனே ஓடிப்பிடித்து வர ஆள் அனுப்பினான். ஆழ்வானே வாங்கிய ஓலையைப் பார்த்தார். புன்முறுவல் செய்தார். அரசனே கையெழுத்திடும் என்று அவசரப் படுத்தினான்.

ஆழ்வான் நிதானமாக 'அரசே! ஓலைக் கையெழுத்தால் ஒரு பொய்யை நிலை நாட்டிவிட நீ நினைப்பது வியப்புக்கும் பரிகாசத்துக்குமே இடமாகும். மேலும் உண்மையை நீ உணரவில்லை என்று தெரிகிறது" என்று கூறவே அவன் "இது உண்மையின்றேல் எது உண்மை?" என்று கோபத்தோடு வினவினான். ஆழ்வான் சாவதானமாக 'கேள்! சோழனே நன்றாய்க்கேள்! தெய்வ பரத்துவத்தை நிர்ணயித்துரைப்பது வேதம். அவ் வேதங்களை ஒட்டி ஸ்மிருதிகள், இதிகாஸங்கள் புராணங்கள் இவை விளக்கியுரைப்பனவாகும் ஸகலவேதங்களாலும் இதிகாச புராணங்களாலும் பரதெய்வமாகக் கூறப்பெற்றவன், ஸகல மகரிஷிகளாலும் அவ்விதம் போற்றப் பெற்றவன் ஸ்ரீமந் நாராயணனே. வேதம் தெரிந்தவர் இவ்வுண்மையை மறுக்க மாட்டார்கள். அவனே அனைவருக்கும் மேலானவன். உலக காரணன், த்யானத்துக்குரியவன், தன் நாபியிலே தோற்றுவித்த பிரம்மாவையும், அப்பிரம்மாவினால் படைக்கப் பெற்ற ருத்ரனையும் (சிவனையும்) தனக்கு மகன் பேரன் என்ற முறையிலே கொண்டவன்; அவர்களிருவரும் அவன் நியமனத்தினாலே இருப்பவர்கள். அவர்களும் மற்றும் எல்லா உலகங்களிலுமுள்ள எவரும் எவையும் அவனிடத்தே தோன்றியவர்களே. 'நாராயணாத் ருத்ரோஜாயதே. நாராயணாத் ப்ரம்மாஜாயதே' என்று வேதமே பறையறைகின்றது. பிரம்மா தொடக்கமாகப் புல் ஈறாக அனைத்தையும் தன் திருவடியால் தடவி அளந்தான் ஒருவன். அளந்தவன் திருவடியைப் பிரீதியோடே கழுவினான் ஒருவன். அந்நீரைப் பக்தியோடு தன் தலையிலே ஏற்றான் ஒருவன் ஏற்ற காரணத்தால் பரிசுத்தியடைந்து கபாலித்வம் நீங்கிச் சிவத்வம் சித்தியாயிற்று. இதில் பரன் யார் என்பது கூறித்தெரிய வேண்டியதில்லையே இன்னும் வேத வாக்கியங்கள் தேவையானால், நீ புரிந்து கொள்ள முடியுமானால் கூறி, உனக்கு விளக்க நான் ஸித்தனாயிருக்கிறேன்' என்று கூறி நின்றார்.

சோழனோ அவர் கூறிய தொன்றையும் செவியில் ஏற்று அறிய முற்படவில்லை. அவன் மனம் ஒரே வெறிமயமாகவே யிருந்தது. "நீர் வித்வான். என்ன வேண்டுமோ சொல்லுவீர்" என்று அவன் கூற, ஆழ்வான் "உன் கட்சியைக் கூறவல்ல ஒரு வைதிக வித்வானைக் காட்டு. அவனுடன் நான் வாதிடுகிறேன். என்னை அவன் தெளிவிக்கட்டுமே!" என்று பதிலிறுத்தார். சோழன் கோபம் மீற அதெல்லாம் தேவையில்லை. இந்த ஓலையிலே 'சிவாத்பரதரம் நாஸ்தி' என்று எழுதிக்கையெழுத்துப்போடப் போகிறீரா இல்லையா? என்று உறுமி ஓலையையும் நீட்டினான். பார்த்தார் ஆழ்வான். புத்தி செயல்படுபவனிடம் பேசலாம். மூர்க்கனிடம் பேசிப் பயனில்லை என்று ஓலையை வாங்கினார்

எழுத்தாணியை எடுத்தார். ''சிவாத்பரதரம் நாஸ்தி துரோணமஸ்தித்த: பரம்'' என்று எழுதி நீட்டினர். வாங்கிப்பார்த்தான்சோழன். 'ஆழ்வானை சிவனுக்குமேலானவன் இல்லை என்று எழுதச் சொன்னேம். அவர் 'குறுணிக்கு மேலானதில்லை' எனக் குறித்துப், பின் அதற்கு மேல் 'பதக்கு என்று ஒன்று இருக்கிறது' என்று பொருள்பட ஏளனமாக வல்லவா எழுதியிருக்கிருர்' என வந்தது சீற்றம்.

"சிவன்பர மென்ன நீயே
செப்பியிங் கெழுத்தி டென்ருய்!
இவன்பர மாளுல் வேதன்
இருந்தலை கொய்த துன்பும்
அவன்பர மன்ருே தீர்த்தல்?
ஆங்கது கூடா தேபோய்
எவன்பர மென்ன வேருர்
இறைவனை இரக்க லாமோ?''

"பாண்டியன் கூடல் தன்னில்
பரத்துவம் உணர்ந்த அந்நாள்
ஆண்டுசெய் கிரியை யன்ருே
அரசர்தம் கிரியை மன்னு!
கூண்டிருந் துனக்குத் துன்பம்
வருத்திடும் குருக்கள் நின்பால்
வேண்டுவ துரைத்திட் டாலும்
மெய்மெய்யாம் பொய்பொய் யாமால்''

ஏருறு சிவனே மேலைப்
பரமென எழுதும் ஓலை
சீர்பெற அவனை ஈன்ற
திசைமுகன் இறந்த நாள்இப்
பாருறு விசும்பும் நீராய்ப்
பாழுள வோங்கும் அன்று
தாரமர் முடியாய் ஓலை
தங்கரிக் கின்ற தெங்கே?

"ஓதம்மின் மினியை நோக்கி
ஒருவன் ஆதவன் இதுஎன்றும்
தீதறும் இரவி தன்னைச்
சிறியமின் மினியே யென்றும்
பேதமுற் றுரைத்தால் அந்தப்
பேதை தன் னளவு மன்றிக்
கோதறும் உலகுக் கெல்லாம்
குறிப்பதற் குறுமோ கோவே!''

''வேதம் அறியும் மான்அறியும்
விரிஞ்சன் அறியும் மெய்ம்மையினைக்
கோதில் உலகம் பதினுலும்
அறியும் அந்தக் குறிக்கிடப்ப
ஓதும் ஓலைப் புறத்தெழுதி
உபயப் படுத்தல் எவரோடே
பூதம் ஐந்தும் இறந்தாலும்
புரளா நிலையைப் புவிமன்னு''!

''அறியா தொன்றை ஒரொருவர்
அறிவிற்காட்டிச் செயப் புக்கால்
நெறியால் நின்ற குரவர்கடன்
அதனைத் தவிர்த்து நிலை நிறுத்தல்;
பொறிவாய்ப் புலனுல் ஆங்கவரும்
போதம் மயங்கிப் பூபதியே
எறியா நின்ற கனலிடை நெய்
ஈவா ரொத்தால் என்ஆமால்?''

"என்றித் திறத்தை ஆழ்வான்
ஆங்கியம்ப மன்னன் மிகச்சீறி
ஒன்றும் பேச வேண்டாம்நீர்
உரைத்த தெல்லாம் பொறுத்தனன் நான்
இன்று சிவத்தின் மேலொன்றும்
இலதுஎன்று ஓலைக்கு எழுத்திட்டுக்
குன்ற மெடுத்தான் தமர்காள்நீர்
போமின் என்னக் கூறினன்''

"கூரத் தாழ்வான் அதுகேட்டுக்
குறுணி என்றும் சிவம் என்றும்
நேர்ஒப் பிடும்ஓர் சொல்லுளதாம்;
அதனை நிலையாய்ப் படித்தெடுத்தாங்கு
ஓதப் பட்ட குறுணிக்கு
மேலே பதக்கும் உண்டென்னத்
தீரத் தெளிந்து திருவெழுத்தை
யிட்டுக் கொடுத்தான் சீக்கிரத்தில்''

என விளக்கிச் செல்லும் வடிவழகிய நம்பி தாஸர் (செய்யுட்) குருபரம்பரை நூல்.

ஆழ்வானுக்குப் பதில் கூற வழியில்லை எனினும் மற்ருெருவர் இருக்கிருரே அவரிடமாவது கையெழுத்துப் பெறமுடியுமா பார்ப்போம் என்று எண்ணியவனுய்ப் பெரிய நம்பியை நோக்கி "நீர் கையெழுத்திடும்'' என்று ஓலையை நீட்டினர். நம்பிகளும் பலபடியாக அவனுக்கு விளக்கி நாராயணனே பரதெய்வம் என்று சான்றுகளோடு

கூறவே, சோழனின் கோபம் எல்லை கடந்தது. 'இவர்கள் கண்களைப் பிடுங்கி விடுங்கள்' என்று பிறந்தது அரக்கத்தனமான உத்தரவு. காவலர் தண்டனையை நிறைவேற்ற நெருங்கினர். கம்பீரமாக நிமிர்ந்தார் ஆழ்வான். "சோழனே! சரியான தண்டனை கொடுத்தாய் எனக்கு. மகாபாதகனை உன்னைப் பார்த்த கண்களோடு நான் இருப்பது பாவம் தான். உன் சேவகர்களுக்குச் சிரமம் வேண்டாம். அப்பாவக் கண்கள் எனக்குத்தேவையில்லை இனி' என்று கூறிக்கொண்டே தம் இருகை நகங்களாலும் தம் இரு விழிகளையும் பறித்துச் சபையிலே எறிந்தார். கண்டவர் உளம் நடுங்கினர். கயவனின் காவலர் பெரிய நம்பிகளை இட்டுச், சென்று, அக்கிழவரின் கண்களை வாங்கினர். இருவரும் கண்ணிழந்தவராய், ஆனால் உள்ளம் களிப்பிலே தேங்கியவராய் நிற்க, அவர்கள் இருவரையும் அத்துழாய் கதறிக் கண்ணீர் பெருக்கி, மெல்லக் கை பிடித்து வெளியே அழைத்துச் சென்றாள்.

இங்ஙனம் நடந்ததை எல்லாம் ராஜ சபையிலே நின்று பார்த்துக்கொண்டிருந்த ராஜசேவகி ஒருத்தி (அரசனுக்கு உடைவாளெடுப்பவள் என்பர்) அரசனது இக் கொடுங்கோன்மையைச் சகியாதவளாய், தான் வைத்திருந்த அரசனது வாளைச் சபையிலே அவன் முன்னே எறிந்து 'அரசே! இனி உம்மிடம் எனக்கு வேலை தேவையில்லை'' என்று வெறுப்புடன் கூறி, ஆழ்வான் பெரிய நம்பி இவர்களோடு தானும் வெளியேறி அவர்களை ஊருக்குப் புறத்தே ஓரிடத்தே சேர்த்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தாள்.

ஆழ்வான் உள்ளத்திலே சிறிதும் வருந்தாதவராய், தர்சனத்துக்குத் தர்சனம் கொடுக்கப்பெற்றோமே! நம் மதத்தை நிலைநாட்ட நம் கண்களையே தியாகம் செய்யும் பேறு பெற்றோமே! என்று அதிமகிழ்ச்சியுற்றவராயிருந்தார். பெரிய நம்பிகள் வயது முதிர்ந்தவ ராகையாலே வேதனை பொறுதவராய் ஆழ்வான் மடியிலே திருமுடியும் அத்துழாய் மடியிலே திருவடியுமாகக் கண் வளர்ந்தருளினர். ஆழ்வானும் அத்துழாயும் நம்பிகள் இனிப் பிழைப்பது அரிதென்றுணர்ந்தனர். அத்தகைய பெரியவர் ஸ்ரீரங்கத் திருப்பதியும் எம்பெருமானர் ஸன்னிதியும் இருக்க, மகாபாபியான சோழன் நகரான கங்கை கொண்ட சோழபுரத்திலே திருநாடலங்கரிக்க நேர்வதே! என்று வாய்விட்டுப் புலம்பினர். இதனைத் திருச்செவியேற்ற பெரிய நம்பி அவர்களைக்கையமர்த்தி 'அப்படிக் கூறலாகாது. நானும் ஸ்ரீரங்கம் போய்த்தான் இத்தேகத்தை விட நினைத்தேனாகில் 'நம்பிகளுக்கே திருவரங்கம் போக வேண்டிற்று நமக்கும் அங்குபோனால்தான் திருநாடு போகமுடியும் என்று பாகவதர்கள் கிலேசப்பட ஏதுவாகும். பெரிய உடையாருக்கு (ஜடாயுவுக்குப்) பெருமாள் திருமடி கிடைத்தது போலே, எனக்கும் உம்முடைய மடி கிட்டியது. ஒரு பாகவதன் மடியைக் காட்டிலும் கோயிலுக்கு அதிக ஏற்றமோ? இங்குதானே நம் கூடஸ்தரான ஸ்ரீமந் நாதமுனிகளும் குருகை காவலப்பனும் திருநாடலங்கரித்தது' என்று கூறி, தம் ஆசார்யரான ஸ்ரீஆளவந்தார் திருவடிகளை உள்ளத்தே தியானித்துக் கொண்டவராய்த் திருநாட்டுக் கெழுந்தருளினர்.

இப்படி யாரும் துணையின்றி ஆழ்வானும் அத்துழாயும் நம்பிகளின் பூதவுடலை எங்ஙனம் உரிய சம்ஸ்காரம் செய்வது என்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் அநாதைப் பிரேதங்களுக்குக் கரும கிரியைகள் செய்வதே தொழிலாகக்கொண்ட சிலர் வந்து தாங்கள் சரம கிரியைகள் செய்வதாகக் கூறினர். ஆழ்வான் அவர்களிடம் 'ஈச்வரனும், அவன் உபய விபூதிகளும் இவருக்குத் தேவையான கைங்கர்யம் செய்யத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அன்னவருக்கா நீங்கள் கிரியை செய்ய வருகிறீர்கள்?' என்று அவர்கள் உதவியை மறுத்துவிட்டார். சற்று நேரத்துக்கெல்லாம் ஸ்ரீ பராந்தகம் என்ற ஊரிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளாக வந்து, பெரிய நம்பிகளின் திவ்விய விக்கிரகத்தை ப்ரம்ம மேதத்தாலே திருப்பள்ளிபடுத்து உரியவற்றையெல்லாம் குறைவின்றிச்செய்து முடித்து ஆழ்வானை ஒரு கட்டிலிலே எழுந்தருளப் பண்ணி, அவரையும் அத்துழாயையும் தம்மூருக்கு அழைத்துச்சென்று, தங்கள் திருமாளிகையிலே அமர்த்தி உபசரித்தனர்.

(தொடரும்)

# திருப்பாவையில் ஆழ்வார்களின் திருப்பள்ளியெழுச்சி

மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்:

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## கீசுகீசென்றெங்கும்—குலசேகராழ்வார்.

கீசுகீசென்றெங்குமானைச்சாத்தன் கலந்து
பேசினபேச்சரவம் கேட்டிலையோபேய்ப்
பெண்ணே!
காசும்பிறப்பும் கலகலப்பக்கைபேர்த்து
வாசநறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவம்கேட்டிலையோ நாயகப்
பெண்பிள்ளாய் நாராயணன்மூர்த்தி
கேசவனைப்பாடவும்நீகேட்.டேகிடத்தியோ
தேசமுடையாய்! திறவேலோரெம்பாவாய்,

கீழ்ப்பாசுரத்திலுணர்த்தப்பட்ட பெரியாழ்வார்க்கு அடுத்த முந்தியவரான குலசேகராழ்வார்க்குத் திருப்பள்ளியெழுச்சி பாடும் பாசுரமிது. இதில் **பேய்ப்பெண்ணே! நாயகப் பெண்பிள்ளாய்! தேசமுடையாய்!** என்கிற மூன்று விளிகளும் குலசேகராழ்வார்க்கு அஸாதாரணமானவை. [பேய்ப்பெண்ணே] பெருமாள் திருமொழியில் மூன்ருவது பதிகம் முழுவதும் தம்மைப் பேயராகப் பிரசுரப்படுத்திக்கொண்டது. மையல் கொண்டொழிந்தேன், நரகாந்தகன் பித்தனே, உன்மத்தன் காண்மினே, மணவாளன் றன்பித்தனே எம்பிரானுக்கெழுமையும் பித்தனே, பித்தனையொழிந்தேன், பேயனுயொழிந்தே னெம்பிரானுக்கே, தனிப்பெரும் பித்தனுங்குலசேகரன் என்று ஒருகாற் சொன்னுப்போலே ஒன்பதின்காற் சொன்ன பேயர் இவரே. [நாயகப் பெண்பிள்ளாய்] நாயகனென்று அரசனுக்குப் பெயர்; இவர் அரசர். கொல்லி காவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குலசேகரன் என்று தம்வாக்கால் தம்மை நாயகராகச் சொல்லிக் கொண்டவருமிவர். முக்கியமான பொருள் கேளீர். யதிராஜ ஸப்ததியில் "அமுநா தபநாதிசாயிபூம்நா யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ: என்றருளிச் செய்தபடி ஆசார்ய கோஷ்டியில் எம்பெருமானுர் நாயகமணியாக [நடுநாயகமாக] விளங்குவது போலக் குலசேகராழ்வார் ஆழ்வார்கள் கோஷ்டியில் நடுநாயகமாக விளங்குபவர். முதலாழ்வார்கள் மூவர், மழிசையர், மாறன் ஆக ஐவர் முன்னே விளங்க, பட்டர்பிரான், ஆண்டாள் முதலான ஐவர் பின்னே விளங்க நடுநாயகமாக வன்றே இவர் விளங்குவது. பெண்ணே! என்றும் பெண்பிள்ளாய்! என்று முள்ள விளிகளும் இவர்க்குப் பொருந்தும்; பெருமாள் திருமொழியில் ஏர்மலர்ப்பூங்குழல்- ஆலை நீள்கரும்பு-மன்னுபுகழ் ஆகிய மூன்று பதிகங்களும் கோபிகள், தேவகி, கௌஸல்யை யெனும் பிராட்டிமார் பாவனையில் பேசினவன்றே. [தேசமுடையாய்] தேஜஸ்ஸையுடையாய்! என்றபடி. பகவத் கீதையில் [18-43[ சௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் யுத்தேசாபி அபலாயனம், தானமீச்வராபாவச் சக்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம் என்கிற சுலோகத்தில் தேஜஸ்ஸு க்ஷத்ரிய தருமமாகச் சொல்லப் பட்டது. "தேஜ: —பரை: அநபிபவநீயதா" என்று பாஷ்யம். தேசங்களை யுடையாய்! என்கிற பொருளுமாகலாம். கொல்லிநகர்க்கிறை கூடல்கோமான் குலசேகரன்; கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன் என்று பல தேசங்களையுடையவராகச் சொல்லிக்கொண்டவரன்ரேவிவர். அன்றியும், ஆசார்ய ஹ்ருதயத்தில் (81) "தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜனிகள் போலே ப்ரஹ்மஜன்மமும் இழுக்கென்பார்க்குப் பண்டை நாளிற் பிறவி உண்ணாட்டுத் தேசிறே" என்றுள்ள சூர்ணைக்கு மூலமாகக் கொள்ளப்பட்ட *உண்ணாட்டுத் தேசன்றே* என்கிற பெரியதிருவந்தாதிப் பாசுரத்தில் "ஆழியங்கைப் பேராயற்கு ஆளாம்பிறப்பு —உண்ணாட்டுத் தேசன்றே" என்னப்பட்டது. அதாவது அடிமைக்கு விரோதியான ஜன்மாத்யபிமானமின்றிக்கே கைங்கர்யாநுரூபமான குடிப்பிறவி உயர்ந்த தேஜஸ்ஸு என்றவாறு. அத்தகைய தேஜஸ்ஸையுடையவர் குலசேகராழ்வாரொருவரே; எங்ஙனேயென்னில், பெருமாள் திருமொழியில் *ஊனேறுசெல்வப் பதிகத்தில் 'வேங்கடத்துக் கோனேரிவாழும் குருகாய்ப் பிறப்பேனே—மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனா

வேனே! – செண்பகமாய் நிற்குந்திருவுடையேனு வேனே — தம்பகமாய்நிற்குந் தவமுடையேனு வேனே...எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனு மாவேனே'' என்று அபிமானஹேதுவல்லாத ஜன்மத்தை விரும்பியவர் இவ்வாழ்வாரே யாதலால் உண்ணூட்டுத் தேசுடையாரிவர். ஆக பேய்ப் பெண்ணே! நாயகப் பெண்பிள்ளாய்! தேசமுடையாய்! என்கிற மூன்று விளிகளும் குலசேகராழ்வார்க்கே பொருந்துவனவாயின. இனி முதலடியே தொடங்கி விவரிக்கிறேன்.

[ஆனைச்சாத்தம் எங்கும் கீசுகீ சென்று] க்ருஷ்ணன் என்கிறநாமேதயம் உலகில் பேச்சுவகையில் பல விகாரங்களை யடைவது வழக்கம். கிட்டு, கிட்டன், குட்டு, கிச்சு என்றிப்படி பலவாறு திரிகிற முறையில் கீசு என்றும் திரியும். எங்கும் கீசுகீசென்றது—க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண என்னும் உச்சாரணமே எங்கு மாயிற்றென்றபடி. ஆனைச்சாத்தமென்று ஒரு விலக்ஷணபக்ஷிக்குப் பேராதலால் விலக்ஷணாதிகாரிகள் பகவந்நாமோச்சாரணமே செய்யும்படியைச் சொன்னவாறு. குலசேகராழ்வாருடைய சரித்திரத்திலே சிறிது செல்வோம். *குஷ்யதே யஸ்ய நகரே ரங்கயாத்ரா தினே தினே* என்றபடி இவ்வாழ்வார் அடிக்கடி திருவரங்கம் பெரிய கோயிலுக்குப் பயணம் செய்யப் பாரிப்பர். அதைக்கண்ட மந்திரிகள் 'இவர் ஸ்ரீ ரங்கம் செல்வாராயின் மீளவும் இங்கு வரவே மாட்டார்; ஆகவே இவர் புறப்படாதபடி செய்து விடவேணும்' என்று கருதி, பகவத் பக்தியிற்காட்டிலும் பாகவத பக்தியே மிகச் சிறந்ததென்று கொண்டிருக்கு மிவ்வாழ்வார் பாகவதர்களைக் கண்டால் பயணத்தை நிறுத்தி இவர்களை உபசரிப்பதிலேயே ஊன்றியிருப்பர் என்றெண்ணிப் பாகவதர்களைத்தேடிக்கொண்டு வந்து முன்னே நிறுத்துவர்கள்; குலசேகரரும் அவர்களின் ஆராதனத்திலே ஊன்றியிருந்து திருவரங்கப் பயணத்தை நிறுத்தி விடுவர். இத்தகைய உபாயத்தை மந்திரிகள் அடிக்கடி செய்து அவருடைய பயணத்தை அப்போதைக்கப்போது நிறுத்தியே வந்தார்கள். ஆழ்வாரும் அந்த பாகவதோத்தமர்களை அகங்கனிந்த அன்போடு ஸத்கரித்துவரவே அந்நாடெங்கும் ஸ்ரீ வைஷ்ணவத்திரள் மிக்கது. எங்கும் பகவந்நாம ஸங்கீர்த்தனமே மலிவு பெற்றது. இது சொல்லப்படுகிறது ஆனைச்சாத்தம் எங்கும் கலந்து கீசுகீசென்று பேசின பேச்சரவம் கேட்டிலையோ? என்பதனால்.

அதற்குமேல் என்னயிற்றென்பதையும் சரித்திரத்திலே பார்ப்போம். அந்நாடெங்கும் மலிந்த ஸ்ரீ வைஷ்ணவத்திரள் அரண்மனையினுள்ளும் ஆலோசனைச் சபா மண்டபத்திலும் இன்னும் அந்தரங்கமான இடங்களில் எக்காலத்திலும் சிறிதும் தடையின்றிப் போவது வருவதாகி அரசன் பக்கல் வரம்பு கடந்த ஸ்வாதந்திரியம் பாராட்டுதலைக் கண்டு பொறுமை கொண்ட மந்திரிகள் இந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கலில் குலசேகரர்க்கு வெறுப்பையுண்டாக்கக் கருதினர். அவருடைய அர்ச்சாவதாரப் பெருமாளுக்கு விசேஷமான திருவாபரணங்களுண்டு; அவற்றில் சிறந்ததொரு ரத்ன ஹாரத்தைத் தாங்கள் களவாடி அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் மேல் பழியிட்டுவிட்டால் அரசன் அவர்களைக் கண்டித்து விலக்கிவிடக் கூடுமென்றறுதியிட்டு அப்படியே சூழ்ச்சி செய்துவிட்டனர். அர்ச்சகர்கள் திருவாபரணம் களவு போயிற்றென்று அரசரிடம் முறையிட, அரசர் மந்திரிகளையழைத்து 'கள்வனைக் கண்டுபிடியுங்கள்' என்று கட்டளையிட, அதுவே வியாஜமாக 'ப்ரபோ! இந்தக் களவு செய்தவர்கள் வைஷ்ணவர்களேயன்றி வேறு எவருமல்லர்; இவர்களே எப்போதும் இங்குமங்கும் தட்டின்றித் திரிகின்றனர்; பிறனெருவன் புதியனாக வந்து அஞ்சாது இத்தொழில் செய்யான்' என்று பாகவதர் மீது அடாப்பழி சுமத்தினர். அக்கடுஞ் சொல்லைக் கேட்ட குலசேகரர் பாகவதர்களின் மஹிமையை நன்குணர்ந்தவராதலால் 'வைஷ்ணவசிகாமணிகள் ஒருபோதும் இத்தகைய பாவச்செயலை நெஞ்சிலும் நினையார்; இதனை உங்களுக்கு உறுதிப்படுத்துதற்காக யானே பிரமாணங் காட்டுவேன்' என்று சொல்லி, பாம்பை உள்ளிட்டதொரு குடத்தைச் சபை முன்பே தருவித்து 'ஸ்ரீவைஷ்ணவர்கள் த்ரிகரணத்தாலும் சுத்தர்கள்; இல்லையாயின் இந்நாகம் இப்பொழுதே என்னைத் தீண்டிக் கொல்லுக' என்று சபதஞ்செய்து அக்குடத்தினுள்ளே கையிட்டனர். "ஆரங்கெடப் பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்டவன், மாற்றலரை வீரங்கெடுத்த செங்கோல் கொல்லி காவலன் வில்லவர் கோன், சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகா

மணியே" என்ற தனியன் காண்க. ஆக இந்த சரித்திரத்திற்குச் சேர இப்பாட்டிலுள்ளது' காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து என்பது. காசு என்பதும் பிறப்பு என்பதும் இடையர்களின் ஆபரண விசேஷங்களென்று வியாக்கியானம். ஆபரண ப்ரஸ்தாவமுள்ளது குலசேகராழ்வார் வைபவத்தில்தான். கைபேர்த்து என்றது கையிட்டு என்றபடி. குடப்பாம்பில் கையிட்ட கதையை நினைப்பூட்டினபடி. களவு செய்து பாகவதர்கள் மீது பழி சுமத்தின மந்திரிகளுக்குத் தண்டனையாக அவர்களின் கையைப் பேர்த்ததாகவும் கதையுண்டு. அதுவும் இங்கே விவக்ஷிதமாகலாம்.

வாச நறுங்குழலாய்ச்சியர் மத்தினலோசை படுத்த தயிர்க் கதையைக் குலசேகராழ்வாரொருவரே பெருமாள் திருமொழியில் ஓர் ஆய்ச்சியின் வாக்கால் வெளியிட்டுள்ளார்; அதில் (6-2), *கெண்டையொண்கண்மடவாளொருத்தி கீழையகத்துத் தயிர் கடையக் கண்டு, ஒல்லை நானும் கடைவனென்று கள்ளவிழியை விழித்துப் புக்கு, வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ வாண்முகம் வேர்ப்பச் செவ்வாய் துடிப்பத், தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம் தாமோதரா! மெய்யறிவன் நானே.* என்கிற பாசுரம் இங்கு நினைவுக்கு வந்தே தீரும். [நாராயணன் மூர்த்திகேசவனைப்பாட] குலசேகராழ்வார் தாம் தம்முடைய திவ்வியப் பிரபந்தத்தை நிகமித்தருளுகையில் "தமிழ்மாலை பத்தும் வல்லார் நலந்திகழ் நாரணனடிக் கீழ் நண்ணுவாரே" என்று நாராயணனைப் பாடியருளினர். கேசவனென்பதற்கு ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றும் பல பொருள்களில் திருவாய்ப்பாடியில் நலியவந்த கேசியென்னும் குதிரை வடிவனை அசுரனைக் கொன்றவனென்கிற பொருளுமொன்று. குலசேகராழ்வார் தமது திருமொழியின் முதற் பதிகத்தில் கண்ணபிரானுடைய சரிதைகளை யநுஸந்திக்கத் தொடங்குகையில் முந்துறமுன்னம்* மாவினை வாய்பிளந்து உகந்தமாலை* என்று கேசிவத சரிதையையே யநுஸந்தித்தார். [நீ கேட்டே கிடத்தியோ?] குலசேகர வைபவத்திலுள்ள கதை கேண்மின்; இவர் ஒரு நாள் ஸ்ரீராமாயண காலக்ஷேபம் செய்து வருகையில் ஆரண்ய காண்டத்தில் கரதூஷணாதிகள் பதினாலாயிரம் அரக்கர்களைத் திரட்டிக் கொண்டு போர் செய்யப் புறப்பட்டு வந்தபோது "சதுர்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம், ஏகச் ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி" என்று ஆகாச சாரிகள் வயிறு பிடித்துரைக்கும் சுலோகத்தைப் பௌராணிகர் விரித்துரைக்க, கேட்ட குலசேகரர் இது எப்போதோ நடந்த கதையென்று கொள்ளாமல் அப்போது தான் நடப்பதாகக் கொண்டு தாம் மிக மிக ஸம்ப்ரமம் கொண்டதாகவும், பிறகு பௌராணிகர் வெகு சாதுர்யமாக இவரைத் தேற்ற வேண்டி "தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம், பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே." என்கிற விஜயச்லோகத்தை விரித்துரைத்து இவருடைய ஸம்ப்ரமத்தைத் தணித்ததாகவும் கதையுள்ளது. கதை கேட்பவர்கள் யாவரும் கேட்டுக்கொண்டு வாளாகிடப்பது போலல்லாமல் இவர் ஸம்ப்ரமித்தவரென்பது கேட்டே கிடத்தியோ வென்பதனால் நன்கு காட்டப்பட்டதாயிற்று. "குலசேகராழ்வாரே! நீர் அஸ்மதாதிகளைப் போலே கதை கேட்டுக்கொண்டு வாளாகிடப்பவரோ? என்று கேட்கிறபடி ஸுவ்யக்தமாகவுள்ளதன்றோ.

இவையெல்லாம் நிற்க; இப்பாட்டில் மிகப் பெரிய விஷயமொன்று குறிக்கொள்ளத் தக்கது. அதாவது, ஆனைச்சாத்தமென்கிற சொல் திருப்பாவையில் தவிர வேறு எந்த நூலிலும் பிரயோகம் பெறவில்லை. இது திசைச்சொல்லாயிருக்குமோவென்று நினைத்திருந்தேன். கீர்த்தி மூர்த்தியான ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வானமாமலை சின்ன கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியோடு ஸம்பாஷிக்க நேர்ந்தகாலை ஸ்ரீஸ்வாமி மலைநாட்டுத் திருப்பதி யாத்திரை எழுந்தருளியிருந்தபோது அந்த நாட்டில் ஆனசாதம் என்றொரு பக்ஷி வழங்கப்படுவதாகக் கேட்டிருந்ததை ஸாதித்தருளினர். ஸ்ரீகுலசேகரர் மலைநாட்டு ஆழ்வாராகையாலே அவருடைய பாஷை இங்கு தெய்விகமாகப் புகுந்தது போலும். திருவாய்மொழியில் (9-8) *அறுக்கும் வினையாயின* என்கிற பதிகம் மலைநாட்டுத் திருப்பதியான திருநாவாயைப் பற்றியது. அதில் முதற் பாட்டில் *வெறித்தண் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய், குறுக்கும்

வகையுண்டு கொலோ கொடியேற்கே* என்றுள்ளது. இங்கு 'குறுகும் வகையுண்டு கொலோ; என்றிருக்க வேண்டும். குறுக்கு மென்றிருப்பது எதுகை நயத்திற்காகவென்று தமிழர் கருதுவார்கள். ஈட்டில் இவ்விடத்திலுள்ள ஸ்ரீஸூக்தி காணீர்— "குறுக்குமென்று அத்தேச பாஷை' எம்பெருமானுர் திருவடியைத் தொழவெழுந்தருளா நிற்க எதிரேவருகிருர்கள் சிலரை நோக்கி 'திருநாவாய் எத்தனையிடம் போரும்' என்று கேட்டருள, 'குறுக்கும்' என்ருர்களாய், அத்தைக் கேட்டு 'இப்பாஷையாலே யருளிச் செய்வதே ஆழ்வார்' என்று போரவித்தராயருளினுர்" என்று.

ஆக இத்தனை சான்றுகளால் இப்பாசுரத்திலுணர்த்தப்படுபவர் குலசேகராழ்வாரென்பது நிஸ்ஸந்தேஹ விபர்யயம். இப்பாசுரத்தை விட்டு வேருெரு பாசுரத்தைக் குலசேகரர்க்கு ஆக்க வேண்டில் ஸ்ரீராமாயணத்தை ஸ்ரீபாகவதமாக்கி உபந்யஸிப்பது போலாகுமத்தனை வேருெராழ்வார் இங்குப் புகவும் முடியாது .....(170.)

> கீழ்வானம்வெள்ளென்று எருமைசிறுவீடு
> மேய்வான்பரந்தனகாண் மிக்குள்ள
> பிள்ளைகளும்
> போவான் போகின்ருரைப் போகாமல்காத்து
> உன்னைக்
> கூவுவான்வந்துநின்ரோம் கோதுகலமுடைய
> பாவாய்! எழுந்திராய் பாடிப்பறைகொண்டு
> மாவாய்பிளந்தானை மல்லரைமாட்டிய
> தேவாதிதேவனைச் சென்றுநாம்சேவித்தால்
> ஆவாவென்ருராய்ந் தருளேலோரெம்பாவாய்.

குலசேகராழ்வார்க்கு அடுத்த முந்தினவரான நம்மாழ்வாரை யுணர்த்தும்பாசுரமிது. இதில் 'கோதுகலமுடைய பாவாய்!' என்பது விளி. முன்னம் பாவாய்! என்று கொள்வோம். பாவை யென்று பதுமைக்குப் பெயர்: இதை உவமையாகு பெயராகக்கொண்டு பதுமைபோன்றவளே! என்று பொருள் கொள்க. பொதுவாக ஸ்திரிகளைப் பாவையென வழங்குவதுண்டு. பெரிய திருமொழியில் 'பண்டுகாமரானவாறும் பாவையர் வாயமுத முண்டவாறும்' என்ற பாசுரம் காண்க. அத்திருமங்கையாழ்வார் தாய்ப்பாசுரமாக அமைத்த திருவிடவெந்தைப்பதிகத்தில் "குவளையங்கண்ணி கொல்லியம்பாவை" என்று விசேஷித்துக் கூறுவதால் பாவையென வருமிடங்களிலெல்லாம் கொல்லியம்பாவையென்று கொள்வதும் தகும். அதாவது—கொல்லியெனும் பெயர் பூண்டதான மலையின் கணுள்ள ஒரு பெண்பாற் பிரதிமையைக் கொல்லிப்பாவையென்றும் கொல்லியம்பாவையென்றுங் கூறுவர். அம்மலையிலுள்ள தேவரையும் முனிவரையும் துன்புறுத்த வருகின்ற அசுரரும் அரக்கரும் இப்பதுமையின் சிரிப்பைக்கண்டுமயங்கி உயிர் துறப்பர்களாம். அசுரரும் அரக்கரும் அங்கு அணுகும்போது அவர்களது வாடை பட்டவுடன் இது தானே நகைசெய்யுமாறு யந்த்ர ப்ரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கின்றதாம். இது தேவசிற்பியால் அமைக்கப்பட்ட அழகிற் சிறந்த பதுமை. "எல்லையில் நின்ற எழிலினுங் கற்பினும், கொல்லியம்பாவையைக் கூறினர் புலவர்" என்று பாடியுஸ்ளார் ஒரு கவிஞர். அளவுகடந்த அழகும் பாதிவ்ரத்யமுமுடையார்க்கு இதனை உவமை கூறுவரென்க.

இங்கு நம்மாழ்வாரைப் பாவாய்! என விளிப்பது அவருடைய அழகையும் பாதிவ்ரத்யத்தையும் பற்ற. ஆண்பிள்ளையான ஆழ்வார்க்கு என்ன அழகு வேண்டியிருக்கிறது? ஞானபக்தி விரக்திகள்தான் அழகு. பாதிவ்ரத்யமென்பது ஸ்திரீகளுக்குப்போலப் புருஷர்களுக்குமுண்டு. "உன்னலல்லால் யாவராலுமொன்றுங் குறை வேண்டேன்" "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்" என்று உபாயோபேயங்களில் திடமான விரதங் கொண்டிருக்கைதான் பாதிவ்ரத்யம். இவ்விரண்டிலும் நம்மாழ்வார் தலைமை பெற்றவராதலால் பாவாய்! என்ற விளி இவர்க்கு நன்கு பொருந்தும். வேறு சில ஆழ்வார்களுக்கும், அல்லது எல்லா ஆழ்வார்களுக்கும் இது பொருந்துமேயென்ருல் மறுப்போமல்லோம். வெறும் பாவாய்! என்னுது கோதுகலமுடைய பாவாய்! என்றது நம்மாழ்வார்க்கே அஸாதாரணமான விளியாகும். இதைச் சிறிது விவரிக்கிறேன். [கோதுகலமுடைய பாவாய்] எம்பெருமானிடத்தில் ஆசையையுடைய (அல்லது) எம்பெருமானுடைய ஆசையைத் தன்னிடத்திலே கொண்டுள்ள

என்று இருவகையாகவும் பொருள்படும். பட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவத்தில் நம்மாழ்வாரை ருஷிம் ஜுஷாமஹே'' என்கிற சுலோகத்தினால் உபச்லோகிக்கிறார்; அதில் க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வமிவோதிதம்'' என்பது நம்மாழ்வார்க்கு இட்ட விசேஷணம். க்ருஷ்ணன் குதூஹலமே நம்மாழ்வாராக வடிவெடுத்தது என்றார். க்ருஷ்ணத்ருஷ்ணா என்னும்பதம் 'க்ருஷ்ணே த்ருஷ்ணா' என்றும் 'க்ருஷ்ணஸ்யத்ருஷ்ணா' என்றும் இருவகையாகவும் விக்ரஹம் பெற்று மேலே காட்டின பொருளைத் தாங்கி நிற்கும். கண்ணனிடத்தில் தாம் த்ருஷ்ணை கொண்டவர்; கண்ணனுடைய த்ருஷ்ணையைத் தம்மிடத்தே யுடையவர் எண்கை. இதனால் தேறின பொருளை கைம்மா துன்பொழித்தா யென்று கை தலைபூசலிட்டே, மெய்ம்மாலா யொழிந்தேன் எம்பிரானுமென்மேலானே என்கிற பாசுரத்தினால் நம்மாழ்வார் தாமே வெளியிட்டருளினார். ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம்; ஸ ச மம ப்ரிய: என்கிறபடியே நானும் எம்பெருமானிடத்துக் குதூஹலங் கொண்டேன், அவனும் என்னிடத்துக் குதூஹலங் கொண்டான் என்றருளிச் செய்தவர் நம்மாழ்வார். திருவாய்மொழியில் தாய் பாசுரமாக வருமிடங்களில் சூழ்வினையாட்டியேன் பாவையே என்றும் என்பாவை போயினித்தண் பழனத் திருக்கோளூர்க்கே என்றும் பலவிடங்களில் தம்மைப் பாவையாகச் சொல்லிக்கொண்டதும் பாவாய் என்ற விளிக்குப் பொருந்தும்.

எழுந்திராய் என்ற சொல்நயம் நன்கு நோக்கத் தக்கது. சயனித்திருப்பவரையும் வீற்றிருப்பவரையு மன்றோ எழுந்திருக்கும்படி ப்ரார்த்திப்பது. ஆழ்வார்களில் சயனிப்பவர் யாருமிலர். நம்மாழ்வாரொருவர் தவிர மற்றையோரெல்லோரும் நிற்பவர்கள். பத்மாஸநோபவிஷ்டம் ப்ரதமாசார்யம் பராங்குசம் வந்தே என்றது காண்க.

[கீழ்வானம் வெள்ளென்று] கிழக்கு வெளுத்ததென்றபடி, ''ப்ராசீ ஸந்த்யா காசித் அந்தர் நிசாயா:'' [ஹயக்ரீவஸ்தோத்ரே] என்றபடி உள்ளிருளுக்குக் கீழ்த்திசை வெள்ளென்றதாயிருப்பவர் நம்மாழ்வார். தஸ்மை நமோ வகுளபூஷணபாஸ்கராய என்ற ஸ்ரீ மந்நாதமுனிகளின் ச்லோகரத்னத்தை யடியொற்றி ஆசார்ய ஹ்ருதயத்திலே ''ஆதித்யராமதிவாகர அச்யுதபானுக்களுக்குப் போகாத உள்ளிருள் நீங்கி சோஷியாத பிறவிக் கடல்வற்றி விகஸியாதபோதிற் கமலமலர்ந்தது வகுல பூஷண பாஸ்கரோதயத்திலே'' என்றருளிச் செய்த சூர்ணை வியாக்கியானத்தோடும் இங்கே அங்கே பொருத்தமாக அநுஸந்தேயம். [கீழ்வானம்] என்றபோதே மேல்வானமொன்று நினைவுக்குவரும். மேற்பட்டதான வானம் பரமாகாசமெனப்படும் நித்ய விபூதி. கீழ்வானமென்றது இந்த விபூதி. இது வெள்ளென்றது—''குருகூர்ச் சடகோபன் சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும் உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்'' என்றும், வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே என்றும் பலச்ருதியாம்படி இருள்தருமா ஞாலமாயிருக்கையன்றிக்கே சுத்த ஸாத்விகமாயிற்று என்றபடி. இப்படியானது நம்மாழ்வார் திருவவதாரத்தினால். அன்றிக்கே, வானமென்பது மேகம்; மேல்வானம்—மேலேயிருந்துகொண்டு நீரைப்பொழியும் மேகம்; கீழ்வானம் — இம் மண்ணுலகிலிருந்துகொண்டு தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன் என்கிறபடியே பக்தாம்ருதமான அருளிச்செயலைப் பொழிந்த மேகம். நம்மாழ்வார் தாமே வண்டமிழ் நூற்க நோற்றேன் அடியார்க்கு இன்பமாரியே என்று தம்மை இன்ப வெள்ளத்தைப் பொழியும் மேகமாகச் செல்லிக்கொண்டார்.

[எருமைசிறுவீடு மேல்வான் பரந்தனகாண்] எருமையாகச் சொல்லுகிறது ரஜோகுண தமோகுணப்ரசுரர்களை. வீடு—மோக்ஷம்; சிறுவீடு கைவல்யமோக்ஷம்; பேரின்பத்தைவிட்டுச் சிற்றின்பமான இந்த ஆத்மாநுவத்தை யாசைப்பட்டு இதையநுபவிக்கச் செல்லுகின்ற ராஜஸ தாமஸர்களை [காண்] கடாக்ஷித்தருளவேணும், கைவல்யத்திற்குச் சிறுவீடு என்று பெயர் கொடுத்தவர் நம்மாழ்வார். திருவாய் மொழியில் (4-1-10)* குறுகமிகவுணர்வத்தொடு* என்ற பாசுரத்தில் ''சிறுக நினைவதோர் பாசமுண்டாம்* என்றும், (4—9—10) *தெரிவரியவளவில்லாச் சிற்றின்பம்* என்றுமுள்ள விடங்களில் வியாக்கியானம் ஸேவிப்பது நம்மாழ்வார் திருவவதரிப்பதற்கு முன்பு கைவல்ய மோக்ஷநிஷ்டர்களே யிருந்தனர்.

[மிக்குள்ளபிள்ளைகளும் போவான் போகின்ருரைப் போகாமல் காத்து] மிக்குள்ள வென்றது மேம்பட்ட வென்றபடி. ஸ்ரீவசனபூஷணத்தில் "உண்டபோதொரு வார்த்தையும் உண்ணுதபோதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேருண்டிறே==" இத்யாதி சூர்ணையால் ஆழ்வார்கள் பதின்மரைக்காட்டிலும் மதுரகவிகளுக்கு ஏற்றம் சொல்லியிருக்கையாலே மிக்குள்ள பிள்ளைகளென்பதனுல் இவர் விவக்ஷிதர்; இவர் வடதிசை யாத்திரையாகச் சென்றிருந்தாரென்றும் அங்கிருந்து தென்திசையை நோக்க, பெரிய நகரம் நெருப்புப்பற்றி யெரிவதுபோன்ற ஜ்யோதி: புஞ்ஜத்தைக்கண்டு வடநாட்டு யாத்திரையை நிறுத்திக்கொண்டு திரும்பிவந்து *செம்பொன் மாடத்திருக்குருகூரிலே வந்து நம்மாழ்வாரை ஸேவித்து இங்கேயே நின்ருரென்றும் சரித்திரமுள்ளது. அஃது இங்கு ஸூசிதம். கோயில் அத்யயநோத்ஸவத்திலே ஆழ்வார்களெல்லாரும் தம்தம் ஸன்னிதிக்குப் புறப்பட்டருளுங் காலத்து நேரே போய்விடாமல் நம்மாழ்வார் ஸன்னிதி வாசலிலே வந்துநின்று மரியாதை பெற்றுப் போகிற ப்ரத்யக்ஷ இதிஹாஸமும் ஸூசிதம்.

"போவான் போகின்ருரை" என்ற பிரயோகம் வெகு ஆச்சரியமானது; 'போவதற்காகப் போகிறவர்கள்' என்று சொல்லுவதுண்டோ? இல்லை. அப்படியிருக்க ஏன் சொல்லிற்று. "போகைதானே பிரயோஜனமாகப் போனுர்களென்கை" என்பது பூருவர்களின் வியாக்கியானம். இத்தகைய பிரயோகம் முதன் முதலாக நம்மாழ்வார் திருவாக்கில்தான் வந்தது. திருவிருத்தத்தில் "போவான் வழிக்கொண்ட மேகங்களே!" என்ருர். [உன்னைக் கூவுவான் வந்து நின்ருேம்] 'கூவிக்கொள்ளும் காலமின்னங்குறுகாதோ" "என்னைக் கூவியருளாய் கண்ணனே" "கூவிக்கொள்ளாய் வந்தந்தோ" என்று பலகாலும் விரும்பினபடியே கூவுவான் வந்து நின்ருேமென்கிருள். [மாவாய் பிளந்த தேவாதிதேவனை] இப்போது ஆண்டாள் நோற்பதுபோல் நம்மாழ்வாரும் ஒரு திருவாய்மொழியில் நோன்புநோற்ருர்; *வீற்றிருந்தேழுலகும்* என்ற திருவாய்மொழியில் "ஏற்ற நோற்றேற்கு" என்று முதலிலும் "வண்டமிழ் நூற்க நோற்றேன்" என்று முடிவிலும் வருவது காண்க. அங்ஙனம் நோற்ற திருவாய் மொழியில் தேவாதி தேவனை அநுபவிக்கின்ற ஆழ்வார் மாவாய் பிளந்தானென்ற விசேஷணத்தையே முதற் பாட்டில் இட்டருளினர்; 'வெம்மாபிளந்தான் தன்னை' என்றது காண்க. ப்ரதமப்ரபந்தத்தில் "இமையோர் தலைவா! என்றும்; சரமப்ரபந்தத்தில் "அயர்வறுமமரர்களதிபதி" என்றும் தேவாதிதேவனையே முந்துறமுன்னம் சேவித்தாராழ்வார்* [சென்று நாம் சேவித்தால்] "வான நாயகனே!= அடியேன் தொழவந்தருளே" என்று தேவாதிதேவனை நீர் உம்மிடம் வருமாறு அழைத்தீர்; அங்ஙனமல்லாமல் அவனிடம் நாம் சென்று சேவிக்கலாம் வாரும் என்றழைக்கிருள் போலும். [ஆவாவென்று] "ஆவாவென விரங்கார் அந்தோ வலிதே கொல், மாவாய் பிளந்தார் மனம்" என்றும், "அடியேற்கு ஆவாவென்னுயே" என்றும் நீர் விரும்பினபடியே மாவாய்பிளந்த பெருமான் உமக்கு ஆவாவென்பன் என்று காட்டுகிறபடி, [ஆராய்ந்து] "ஆரென்னையாராய்வார்" என்ற உம்முடைய குறையும் தீரும் [அருள்] *மயர்வற மதிநலமருளினதைக் காட்டியபடி. நம்மாழ்வார்க்கு இத்தனை பொருத்தங்கள் இந்தப் பாசுரத்திலன்றி வேறு எந்தப் பாசுரத்திலுங் காண்பரிது.

# முட்டம் நாகேச்சுவரம்

(கோவை திரு. சி. எம். இராமச்சந்திரன்செட்டியார், B.A., B.L.)

## முன்னுரை :

கொங்கு நாட்டில் ஏழு பாடல் பெற்ற தலங்களும், பல வைப்புத் தலங்களும், அநேக புராணத் தலங்களும், கணக்கற்ற சிலாசாசனத் தலங்களும், 36 சோழன் திருப்பணித் தலங்களும் இருக்கின்றன. கொங்கு நாட்டின் 24 உள்நாடுகளிலே மேற்குக் கோடியில் மேற்குத் தொடர்ச்சி மலையோரமாக முட்டம் என்ற நிலப் பகுதி இருக்கிறது. அப்பகுதி வெள்ளிமலை அடிவாரத்தில் நொய்யல் என்ற காஞ்சிமா நதியால் பாயப்பெற்ற செழிப்பு வாய்ந்தது. காஞ்சிமா நதியின் மேற்குத் தீரத்தில் கரிகால் சோழன் திருப்பணி செய்த தலம் நாகேச்சுரம் என்ற புனிதக் கோயில். இக்கோயில் ஒரு பண்டைத் தலம் ஆகும். பண்டை அரசர்களால் சாசனங்கள் செய்யப் பெற்றுப் பல தான தருமங்கள் வரையப் பெற்றுள்ளது. நாளடைவில் கவனிப்பாரின்றிப் பழுது பார்க்கப்படாத நிலையிலிருக்கிறது.

கொங்கு நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையோரமாகப் பல கணவாய்களும் பள்ளத்தாக்குகளும், அவற்றின் இடையில் நீரோடைகளும் உள்ளன. அவற்றுள் கோவை நகரத்திற்கு மேற்கே வில்லை வளைத்தாற்போல ஐந்து மலைச் சிகரங்கள் உள்ளன. அவைகளின் பெயர் பேரூர்ப்புராணப்படி சிவ மயமாகிய வெள்ளிமலை 1, நீலிமலையாகிய உமா தேவியார் மலை 2, ஐயாசாயி மலை என வழங்கும் பிரமன் மலை 3, பெருமாள்முடி என வழங்கும் திருமால் மலை 4, முருகக் கடவுள் மலையாகிய மருத மலை 5 என்று இருக்கக் காண்கிறோம். இம்மலைகள் நடு மையமாகிய பேரூர்ப் பட்டிப் பெருமான் கோயிலைச் சுற்றி வளைந்து அதனைக் காக்கின்றன. இவ் வளைவில் மேற்குக் கோடியில் உள்ள பகுதிதான் பேரூர் நாட்டு முட்டத்துக்குரிய நிலம் ஆகும். இம் முட்டம் பண்டைக் காலத்தில் வனங்கள் நிறைந்த செழிப்பு நிலமாக இருந்தது. அதில் நாகேச்சுரம் என்ற பெயர் பெற்ற புனிதக்கோயில் இருக்கிறது.

## ஐதிகம்:

கொங்கு நாட்டில் உள்ள 36 தலங்களைப் பற்றியும், சோழன் பூர்வ பட்டயம் என்ற அரசியலார் கையெழுத்துப் பிரதி ஒன்று கூறுகின்றது. அதனை அண்மையில் அரசியல் பகுதியார் அச்சேற்றி உள்ளார்கள். அந்நூல் பண்டைய சரிதைகளைப்போல எழுதப்பட்டிருந்தாலும், சில நூற்பகுதிகள் சரியாக இருக்கின்றன. சரிதப் பகுதிகள் ஆங்காங்கு மிளிர்ந்து கிடக்கின்றன. ஐதிகங்களும் வரலாறுகளும் கலந்திருப்பதினால் வரலாற்றை மட்டும் பிரிப்பது கடினம். கொங்கு நாட்டுக் கோயில்களின் பெயர்கள், இடங்கள், தோற்றம், திருப்பணி முதலிய விவரங்கள் ஆராயத்தக்கவை. தேவதைகள் பிரசன்னமாதல், பலி வாங்குதல், சிப்பந்திகளின் ஏற்பாடுகள் முதலியவைகளைக் கற்பனையாகத் தள்ளிவிடலாம். இந்த 36 தலக் கோயில்களும் கரிகால் சோழனால் திருப்பணி செய்யப்பட்டனவாம். அவைகளில் வெள்ளிமலை ஓரமாக உள்ள முட்டத்து நாகேசுரர் கோயில் ஒன்று. கோயிலின் விவரங்கள் சரியாக உள்ளன.

சோழப் பூர்வ பட்டயத்தின்படி நாகேசுவரர் கோயில் ஐதிகம் அடியிற்கண்டபடி காண்கிறோம். கோயில்களின் திருப்பணிகளைச் செய்துகொண்டு சென்ற கரிகாற்சோழன், முட்டவனத்திற்குச் சென்று வேடர் கம்பளத்தைவிட்டுக் காடுகளை அழித்தபோது, அவ்வனத்தைக் காத்துக்கொண்டிருந்த நாகதுர்க்கை என்ற வனதேவதை பலி கேட்டதாம். கோயில் கட்டின பிறகு பலி தருவதாக வாக்களித்து வெளி பண்ணின பிறகு, அங்கே நாகேசுரலிங்கத்தைக் கண்டு கோயிலும் மதிலும் கட்டினான். திருக்குளம், கோட்டை, பேட்டை முதலியன உண்டாக்கி, நல்லூர் என்ற ஊரும் அமைத்தான். பலவகைக் குடிகளையும் குடியேற்றி, அவரவர்களுக்குத் தலைவர்களையும் நியமித்து, உத்தம பண்டிதரைக் கொண்டு புண்ணியாவாசனம் செய்வித்து, கிராமம் விளாப்பாடு நன்செய் புன்செய் விளைவுகள் தந்து, கல்வெட்டுப் பொறித்தான். ஊழியம் நாட்டாண்மை நம்பி நட்டுவன்,

தாசி மணியம் கணக்கு முதலியவர்களை நியமித்தான். தன் வாக்குப்படி நாகதுர்க்கைக்கு வடக்கு வாசலில் கோயில் கட்டி மானியம் விட்டு, ஆராதனைக்குப் பண்டாரமும் நியமித்து முடித்தான் அப்போது அங்கு வெள்ளியாறு பொன்னுறு காஞ்சியாறு பச்சையாறு கல்லாறு ஆகிய ஐந்து ஆறுகள் பெருக்கெடுக்க, அந்தப் பஞ்ச நதிகளையும் கோயில்கள் இருக்கும் அமைப்பையும் கண்டு, எல்லாரும் அகமகிழ்ந்தார்கள். "இந்த ஊர் பேரூருக்குத் திருமுட்டமாக இருக்கிறதென்றும், பேரூர் அரசம்பலத்திற்கும் அதிகமான முட்டவனம் இதுவென்றும், திருமுட்டநல்லூர் இது என்றும், வாயாரப் புகழ்ந்தார்களாம். மேலும் 360 ஆலயங்களும்கட்டி முடிந்த காலம் கலி 3556 என்று நூல் குறிக்கிறது. முட்டத்தில் நாகேசுரர் முத்துவாளி மீனுட்சி வேதநாயகி கணபதி கரியகாளி இராயர் அங்காளம்மன் கன்னிமார் ஆகியோர் கோயில்கள் இருந்தனவாம். இற்றைக்கு 50 ஆண்டு வரை குருக்கள்மார் இருந்தார்கள். வளமின்மையால் பேரூருக்குச் சென்றுவிட்டார்கள். உற்சவ விக்ரகங்களும் சென்றுவிட்டன. அரசியல் பட்டியலில் இக்கோயில்கள் உள்ளனவாம்.

கோயில் :

கோவையிலிருந்து வெள்ளியங்கிரி அடிவாரத்தில் உள்ள பூண்டி சென்று அங்கிருந்து கிழக்கே $1\frac{1}{4}$ கல் சென்ருல், காஞ்சி நதிக்கரையில் இந்தக் கோயிலைக் காணலாம். தொண்டாமுத்தூர் வழியிலும் செல்லலாம். தொலைவு ஏறக்குறைய 18 கல் இருக்கும். முப்புறங்களிலும் மதில்கள் போன்ற மலைத்தொடர்களுக்கு இடையே செழிப்பான வனங்கள் தோட்டங்கள் இடையே உள்ள இந்தக் கோயில் வெகு வனப்பு வாய்ந்தது. கோட்டைச் சின்னங்கள் இன்னும் காணப்படுகின்றன. பழைய சாம்பல் மண் மேடுகள், பண்டைய ஓடுகள், முதுமக்கட்டாழிகள் அருகே கிடக்கின்றன. ஆகவே பண்டைக் காலத்தில் பெரும் நகரக் கோயிலாக இருந்தது. நகரம் அழியவே கோயிலும் தாழ்வு அடைந்திருக்கிறது. மண்டபங்கள் மதில்கள் தூண்கள் முதலியவற்றின் இடிந்த பகுதிகள் தென்படுகின்றன. கோயில் கருவறையில் நாகலிங்கம், வெளி மண்டபத்தில் தென்முகக் கடவுள், முத்து விநாயகர், காட்சி அளிக்கின்றனர். கோயிலில் இருந்த பல சிலைகள் தூண்கள் முதலியவற்றை அக்கம்பக்கத்து ஊரார்கள் கொண்டு போய்விட்டார்கள். இக்கோயில் கற்கள் வெகு நன்ருக வேலை செய்யப்பட்டவைகள். அவைகளில் சித்தரித்த தூண்கள் இரண்டு, கோவைப் பழைய கல்லூரிக் கட்டிடத்தின் வாயிலில் நாட்டப்பட்டிருக்கின்றன. கோயிலின் உற்சவர்கள் வெகு அழகானவை. ரீர்ச்சகக் குருக்கள் அக்கோயிலைத் துறந்துவிட்டுப் பேரூருக்கு வந்தபோது, சில உற்சவத் திருமேனிகளைப் பேரூருக்குக் கொண்டு போய்விட்டதாகக் கூறுகின்றனர். ஆனல் கோயில் சுவர்களில் உள்ள கல்வெட்டுக்களை ஒருவரும் நீக்க முடியவில்லை. அவைகளே கோயிலின் பெருமைகளை நிரூபிக்கின்றன.

சிவாலயத்திற்கு அடுத்து வடபுறத்தில் சற்று மேற்கே தள்ளி இருப்பது, முத்துவாளியம்மன் என்ற அம்மன் கோயில். முத்துக்களாலான அகியமுவாளி என்ற காதணி அணிந்த வகையில் இப்பெயர் வந்ததென்பர். சபா மண்டபம் அழிந்ததெனினும் முன் மண்டபம் நன்ருக உள்ளது. அம்மன் சிலை வெகு அழகாக உள்ளது. மதுரை மீனுட்சியம்மையின் சிலையைச் செய்த சிற்பியே இதனையும் செய்தனன் என்பர். மேகலை, கழுத்தணிகள், தாமரை ஏந்திய கை, கைவளையல்கள், விரல்களின் நகங்கள், கைவரிகள், காற்சிலம்புகள், திருமுடி முதலிய பகுதிகள் பார்க்கத்தக்கவை. அம்மையின் திருமுகம் கருணை காட்டும் வடிவில் அமைந்திருக்கின்றது. திருவண்ணுமலைக் குகை நமசிவாயர் முத்துவாளியம்மையைப் பாடின இரண்டு வெண்பாக்களும், இந்த அம்மையின் கருணுமுகத்தினை நினைவூட்டுகின்றன.

மேலூர் என்னும் இடத்தில், வேங்கடேசுவரப் பெருமாள் கோயில் என்ற ஒரு பெருமாள் கோயில் இருக்கிறது. அக்கோயிலிலும் கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளில் இக்கோயில் குலசேகர விண்ணகரம் என்று கூறப்பட்டுள்ளது. கோயில் சிதைந்து போய் மண்டபம் மட்டும் காணப்படுகிறது. பெயரைப் பார்த்தால் சேரர் ஆட்சிக் காலத்தில் தோன்றியதாக இருக்கலாம்.

இவை தவிர, நாககாளி என்ற துர்க்கை கோயில், வீரகாளியம்மன் கோயில், முட்டத்து நாயர் கோயில் (ஓச்சிலிகர் குலதேவதை), அங்காளம்மன்

கோயில் (போளுமாம்பட்டிக்குப்போய்விட்டதாம்) முதலான பல கோயில்களும் இருந்தன. இவைகளையும் இடையிடையே அழிந்த ஊர்ப் பகுதிகளையும் கண்டால், பண்டைய நாளில் இவ்வூர் ஒரு சிறந்த ஊராக இருந்திருக்க வேண்டும் என்று கூறலாம்.

கல்வெட்டுச் சான்றுகள் :

அரசியலார் 1910-ல் இந்தக் கோயிலில் சில கல்வெட்டுக்களைப் படி எடுத்திருக்கிறார்கள். முழுமையும் எடுக்க முடியவில்லை. சிறிது சிரமப்பட்டிருந்தால் மற்றவற்றையும் எடுத்திருக்க முடியும். நெ, 150 முதல் 157 வரையில் எட்டுக் கல்வெட்டுக்களின் சாராம்சம்தான் கிடைத்திருக்கிறது.

கொங்குச் சோழன் வீரராஜேந்திர சோழன் (1207—1239) காலத்திய இரண்டு கல்வெட்டுக்கள், இவைகளில் முக்கியமானவை. அதிராசராசன் திருமடை விளாகத்தில் இருந்த ஒரு அன்பன், நாகேசர் கோயிலில் இரண்டு கதவு நிலைகள் தானம் செய்தான். தானம் செய்த ஆண்டு 27. அதாவது கி. பி. 1234. ஆகவே அந்தக் காலத்தில் இக்கோயில் திருப்பணி நடந்திருக்க வேண்டும். (150/2970). அவ்வரசனுடைய இரண்டாம் கல்வெட்டு அதே ஆண்டில் பொறிக்கப்பட்டது (கி பி. 1234). அது முன்னுளில் சேர மன்னர்களான அதிராசராச தேவன், இராசராச தேவன் என்பவர்கள், கோயிலுக்கு விட்ட நிலத்தைப் பற்றிக் கூறி, அவைகள் உறுதிப்படுத்தப்பட்ட செய்தியைக் கூறுகிறது. முட்டத்தை அந்த சேர மன்னர்கள் கைப்பற்றி இரவிவர்ம சதுர்வேதி மங்கலம் என்று பெயரிட்டிருந்தார்கள். இக்கல்வெட்டில் அமரபுஜங்கன் நல்லூர், இராசராஜ நல்லூர் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. இதில் மேலும் அருள்மொழித் தேவ சதுர்வேதி மங்கலம் என்ற பெயரும் காண்கிறோம். இது கோளூர் என்ற ஊருக்கிட்டிருந்த பெயராம். இக்கல்வெட்டினால் கொங்குச் சோழர்களுக்கு முன் சேர வம்சம் இப்பகுதியைப் பிடித்திருக்கலாம். பழனி, வேள்ளலூர்க் கல்வெட்டுக்களும் இச்செய்தியை உறுதிப்படுத்துகின்றன.

இராசராச தேவனுடைய மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்றில் முட்டம் என்ற அமரபுயங்க நல்லூர் நாகேசுரர் கோயிலின் வழிபாட்டிற்கு நிலதானம் செய்தது கண்டிருக்கிறது (151/1960). இந்தக் கல்வெட்டில் 'உத்தம சூலி வாய்க்கால்' என்ற பெயருடைய வாய்க்கால் கூறப்பட்டுள்ளது வெள்ளிமலையிலிருந்து வரும் இந்த வாய்க்கால் வழியாக அக்காலத்திலேயே வேளாண்மை செய்யப்பட்டதென அறிகிறோம். மற்றொரு கல்வெட்டில் அதே ஆண்டில், கோயில் பணிவிடையாளர்களுக்கு வழிபாட்டிற்காக அளித்த நிலதானச் செய்தி கூறப்பட்டுள்ளது. 'கன்னியப்பன் திட்டு இராச வாய்க்கால்' என்ற பெயர்களும் காண்கிறோம். இதனால் அக்காலத்தின் பெயரிடும் வழக்கம்பற்றி ஒருவாறு அறியலாம்.

மேலும் விக்கிரம சோழன் கல்வெட்டுக்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று 17-ஆம் ஆண்டு. மற்றொன்று 37-ஆம் ஆண்டு. ஆகவே அவன் முதல் விக்கிரமனாக இருக்கலாம் (1004). இறைவனுக்கு அவன் பலப்பல தானம் செய்த செய்தியைக் காண்கிறோம். ஊர்களில் அமரபுஜங்கன் நல்லூர், இரவிவர்ம சதுர்வேதிமங்கலம் என்ற பெயர்கள் உள்ளன. ஆகவே சேரவம்ச அரசர்கள் ஆண்ட உடன்பத்திலே இவைகள் ஏற்பட்டிருக்க வேண்டும் (1910/155).

இனி வேங்கடேசப் பெருமாள் கோயில் கல்வெட்டில் (156/1910), அக்கோயில் பெயர் 'குலசேகர விண்ணகரத்து எம்பெருமான்' என்று கூறுகிறது. கோயிலுக்கு ஒரு நந்தாவிளக்கு அளிக்கப்பட்டதாம். அடுத்த கல்வெட்டு, ஒரு நந்தா விளக்கு வைக்க ஒருவர் பணம் தந்ததைக் குறிக்கிறது (156—157/1920).

முடிவுரை:

இந்த எட்டுக் கல்வெட்டுக்களைத் தவிர, படி எடுக்க முடியாதவை மண்ணில் புதைந்து கிடக்கின்றன. முத்துவாளியம்மன் கோயிலில் சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஒன்றில் 'வல்லுவன் கோவன் விட்ட நிலம்' என்றும் 'வல்லாளன் ஆண்டு' என்றும் தெரிகின்றன. 'கன்னியப்பன் எழுத்து', 'உலக பரிபாலகன்', உத்தம சீலி வாய்க்கால், 'நாராயணன் வாய்க்கால்', 'உலகுடைய பெருமாள்', 'ஆதிநாத தேவர்' முதலான சொற்றொடர்கள் தெரிகின்றன. நீலிவாய்க்கால் என்று தற்போது வழங்கும் பெயர், உத்தமசீலி வாய்க்கால், என்று இருந்ததோ என்று ஐயம் உறலாம். இந்த வாய்க்கால் நீர்ப் பாய்ச்சலைப் பற்றி, இந்தப் பகுதியில் பெரிய வழக்குகள் நடந்திருக்கின்றன. ஆகவே இக்கல்வெட்டுக்கள் பல சரித வரலாறுகளுக்கு ஆராய இடம் தருகின்றன அல்லவா?

*

# மதச்சார்பற்ற நிலை★

(திரு. டாக்டர் பா. நடராஜன், M.A., D.Litt., M.L.A.)

மதச் சார்பற்ற நிலை என்பது மத நம்பிக்கை அற்ற நிலை அன்று. எம்மதமும் சம்மதமே என்ற பெருநிலை. இது மேலை நாட்டிலிருந்து இங்கே புகுந்த புதுமை என்று சில ஆங்கில நூலாசிரியர்கள் எழுதப் பார்க்கின்றோம். உண்மையில் ஆன்ம நெறியாகவும், அரசியல் நெறியாகவும் தொன்று தொட்டு இந்தியப் பண்பாட்டிலேயே ஊற்றெடுத்துப்பெருகிய ஒரு நடுவு நிலைக் கொள்கையாகும். இந்திய மக்கள் உள்ளத்திலே, உணர்ச்சியிலே, வளர்ச்சியிலே, கலந்துவிட்ட ஒரு பெரு இலட்சியம். இந்து சமயம்போல் சமரச உணர்வு கொண்ட ஒரு சமயம் உலகிலேயே இல்லை எனலாம். இந்துக்கள் போன்று அரசியலிலே மதச் சார்பற்ற மக்களும் வேறெங்கும் காண இயலாது. சார்வாகம் என்றும் உலகாயதம் என்றும் சொல்லி, கடவுளைப் பழிக்கும் கொள்கையைக்கூட "தர்சனங்களில்" ஒன்றாக மதித்துப் பார்க்கும் பரந்த உள்ளம் இந்திய தத்துவ ஞானிகள் பால் தான் காணலாகும்.

அரசநெறியைப் பற்றிக் கூற வந்த வள்ளுவர், எடுத்த எடுப்பிலேயே,

ஓர்ந்து, கண்ணோடாது, இறைபுரிந்து, யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை

என்று பாடுகிறார். அரசனின் முதற்கடமை நடுவு நிலையை நிலைநாட்டுவது என்கிறார். காவலன் கடன் அறனைக் காப்பது. ஆனால், அந்த அறனோ, அந்தணர் வேள்விக்கும் அப்பாற்பட்டது. எந்த தனிச் சமயத்தையும் கடந்தது. சமயங்கள் பலவாகும். அறன் ஒன்றே.

இந்த நாட்டில், பௌத்தம், ஜைனம், பார்ஸியர் மதம், கிறிஸ்துவம், இஸ்லாம், சீக்கியம் என்ற பல சமயங்கள் நிலவுகின்றன. பௌத்தமும் ஜைனமும் வந்து 2500 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. பார்சியர் மதம் வந்து 2600 ஆண்டுகளாகின்றன. இஸ்லாம் இங்கு வந்து 1400 ஆண்டுகளாகின்றன சீக்கியம் பிறந்து 500 ஆண்டுகளாகின்றன. ஆயினும், இவற்றிற்கெல்லாம் முன்னே தோன்றிய இந்து சமயம் இவற்றோடு தாராள மனப்பான்மையோடே நடந்து வந்துள்ளது. அவரவர் மத நெறி நின்று அவரவர் விரும்பியவாறு கடவுளைக் கண்டுகொள்வதே முறை என்றே இந்துக்கள் என்றும் கருதி வந்துள்ளனர். வேறெந்த மதத்தினரையும் தம் மதத்தில் வந்து சேருங்கள் என்று வலுக்கட்டாயப் படுத்தினதாக வரலாற்றிலில்லை.

கிறிஸ்து பிறப்பதற்கு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே அசோக மன்னன் இப் பாரத மண்ணை ஆண்டான். பௌத்த தருமத்தை உலகெங்கும் பரப்பினான். ஆயினும் மற்றைய மதத்தினரைப் போற்றுங்கள்; அம் மதத் தலைவர்களுக்கு அன்பும் மரியாதையும் செலுத்துங்கள் என்று கல்லிலும், இரும்புத் தூண்களிலும் கால வெள்ளம் அழிவு செய்யாதவாறு பொறித்துச் சென்றான். மதச் சார்பற்ற நிலையை அன்றே அசோக மன்னன் நிலைநாட்டினான். இந்திய உள்ளத்தில் ஊற்றெடுத்த பண்பாடு, பண்பாட்டிலே மலர்ந்த சமரச உணர்வு, உணர்வினிலே மணம்விட்ட செயல் நெறி, நடைமுறை அரசியல் நெறியாக அசோகன் காலத்தே வளர்ந்தது.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்றார் தெய்வப் புலவர். அவரைப் பின்பற்றிய பண்டைத் தமிழகத்தில் சமய சமரச நெறி பரந்து பொங்கியதில் வியப்பேதுமில்லை. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற ஐம்பெரும் காப்பியங்கள்

அதற்குச் சான்று பகர்கின்றன. சைவம், பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களெல்லாம் சங்க காலத்தில் பூசலின்றி இசைவோடு இயங்கின. பிறவா யாக்கைப் பெரியோன் கோயில் முதல், அருகர் பள்ளி ஈறாக, எல்லாவிடத்தும் வேறுவேறு கடவுளரின் விழாக்கள் பொலிவுறக் காவிரிப்பூம் பட்டினம் திகழ்ந்தது என்று இந்திரவிழா வூரெடுத்த காதையில் இளங்கோ அடிகள் பாடுகின்றார். இது கவிஞனின் கனவோ கற்பனையோ அன்று; அன்றிருந்த தமிழக அரசியலின் நிலைதான் என்பதற்கு இளங்கோவடிகள் பௌத்தசமயத்தினராகவும், அவரது சகோதரர் சேரன் செங்குட்டுவன் சைவ சமயத்தினராகவும், விளங்குவதே எடுத்துக்காட்டாக அமையும். இதுஇரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே.

"ஆருருவ உள்ளுவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்றார் தேவாரத்திலே திருநாவுக்கரசர்.

> ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குஉள
> என்றது போல இருமுச் சமயமும்
> நன்றிது, தீதிது என்றுரை யாளர்கள்
> குன்று குரைத்தெழு நாயை யொத்தார்களே"

என்றார் திருமந்திர ஆசிரியர் திருமூலர். இவர்கள் போதனையின் அடிச்சுவடு பற்றி நடந்த சோழ மன்னர்கள் அரசியல் துறையில் சமரச நெறியினைப் பேணி, நாகப்பட்டினத்தில் பௌத்த விகாரம் எடுத்தனர். இது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே.

இந்திய மண்ணின் இந்தச் சிறப்புப் பண்பு, இந்நாட்டை யாண்ட முஸ்லீம் மன்னரையும், ஆங்கிலேய அரசரையும் பற்றிவிட்டது.

> வேறுபடும் சமயமெல்லாம் புகுந்து பார்க்கில்
> விளங்கு பரம்பொருளே, நின்விளையாட் டல்லால்
> மாறுபடுங் கருத்தில்லை; முடிவில் மோன
> வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா

என்று தாயுமானவர் கண்ட உண்மையை, முகலாய மன்னரான அக்பர் அரசியல் பொதுவாழ்வில் நடைமுறையில் காட்டி, தனது இந்துக் குடிமக்கள் வாயார வாழ்த்த விளங்கினார், அந்த செந்நெறியைக் கைவிட்டு, மத நடுவுநிலையை மறந்து மதவெறி பிடித்த அரசியல் வாழ்விலே இறங்கிய ஔரங்கசீப் மன்னன், பிதுரார்ஜிதமான பெரியதொரு சாம்ராஜ்யம் சிதறுபடக் கண்டான். சமய நடுநிலையில் பிழைக்கவே, அவன் தனியனாய், தளர்ந்தவனாய், தன் வம்சத்துக்கே கோடரியாக மாறி நொந்து மறைந்தான்.

ஆங்கிலேய ஆட்சியில், விக்டோரியா இராணியாரின் புகழ் பெற்ற பிரகடனம் சமய நடுவு நிலைமைக்குக் கலங்கரை விளக்கம்போல் அமைந்து நின்றது. இந்திய வரலாற்றோடு இசைவு கொண்டதாக விளங்கியது.

இந்தத் தொன்மைப் பரம்பரையே இந்திய அரசியல் சட்டத்தை 1950-ல் வகுத்துத் தந்த தலைவர்களுக்கும் பின்னணியாக அமைந்துவிட்டது. இவருள் பெரும்பாலும் இந்துக்களாக இருந்தனர். ஆயினும் இந்தியரெல்லாம் இந்துக்களல்லர் என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட்டனர். 1947-ல் மத அடிப்படையில் பாகிஸ்தான் பிரிந்து, மத வழி அரசியல் அமைப்பைத்தனக்கு உருவாக்கிக் கொண்டபோது, இந்தியா என்ற பெயர் மறைந்து இந்துஸ்தான், இந்துக்கள் நாடு, என்ற பெயர் தோன்றுமென்று வெளிநாட்டினர் பலர் எண்ணினர். ஆனால் நமது தலைவர்களோ மத நடுவுநிலையைக் குறிக்கும் இந்தியா என்ற பெயரைக் கைவிட்டாரில்லை.

மதச் சார்பற்ற அரசு அல்லது செக்குலர் ஸ்டேட் என்ற தொடர் மொழி, இந்திய அரசியல் சட்டத்தில் எங்கும் குறிக்கப்படவில்லை யானாலும், இனம், சாதி, சமயம், பால், இடம் ஆகிய வேற்றுமைகளில்லாது எல்லோர்க்கும் சம உரிமை உண்டு என்ற வாசகத்தில், செக்குலரிசம் அல்லது சமய நடுவுநிலைமை உட்கிடக்கையாக அமைந்து கிடக்கின்றது. சமய வேற்றுமையை அடிப்படையாகக்கொண்ட எந்த அரசியல் நட

வடிக்கையும் சட்டப்படி செல்லாது என்று தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. அரசாங்க உத்தியோகங்களில் மதத்தின் காரணமாக எவ்வித உயர்வு தாழ்வும் கற்பிக்கலாகாது என்று கோடிடப்பட்டுள்ளது. அதே காலத்தில், சிறுபான்மைச் சமயத்தினருக்குக் கல்வி கலாச்சாரத் துறைகளில் பாதுகாப்பும் சலுகைகளும் அளிக்கப்பட்டுள்ளது. செக்குலரிசக் கொள்கை இதற்குத் தடையாக நிற்கவில்லை.

பண்டித நேருவின் பதினெட்டாண்டு ஆட்சியில் சமய நடுவுநிலைமைக் கொள்கை நாட்டில் மிக்க வலிவு பெற்றது. சமய வேற்றுமைகள் அரசியலில் மோதாவாறு அவர் கண்ணும் கருத்துமாக நாட்டை வழி நடத்திச் சென்றார். பற்பல சமயத்தினர் அரசியலிலும், பொதுவாழ்விலும் தனியிடம் பெற்றனர். அமைச்சரவையில், அப்துல்கலாம் அசாத், பிரதமர் நேருவின் நண்பராகவும், மிகுதிக்கண் மேற் சென்றிடிக்கவல்ல உரிமையாளராகவும் விளங்கினார். டாக்டர் ஜாக்கிர் ஹுசேன் உதவி ஜனாதிபதியானார். சாக்லா ஐ. நா. சபையில் காஷ்மீரப் பிரச்னையை வாதமிடும் தூதுவராகவும், கல்வி அமைச்சராகவும் பொலிந்தார். அயல்நாட்டுத் தூதுவராகவும் கவர்னராகவும், அமைச்சராகவும் பல முஸ்லீம்களும், கிறிஸ்தவரும், பொறுப்பான பணிகளை ஏற்க அழைக்கப்பட்டனர்

அதன் பயனாக, சமய நடுவுநிலைக் கொள்கை எவ்வளவு உறுதியாக இந்த நாட்டில் நிலைத்துவிட்டது என்பது, சில மாதங்களுக்குமுன் பாகிஸ்தானோடு நிகழ்ந்த போர்க் காலத்தில் புலனாகியது. நாமிருக்கும் நாடு நமது நாடே என்று இந்திய முஸ்லீம் மக்கள் சொந்தம் பாராட்டினர். பல முஸ்லீம் வீரர்கள் பாகிஸ்தான் படையை எதிர்த்து உயிர் நீத்தனர். இந்திய இராணுவத்தில் மிக உயர்ந்த பரிசான பரமவீர சக்கிரத்தையும், ஒரு முஸ்லீம் வீரன் பொன்றாப் புகழொடு பெற்றான். உள்நாட்டில் இந்து முஸ்லீம் கலவரம் ஏதும் நிகழாது, ஒற்றுமை நிலவியது. இம்மாதிரியான நெருக்கடி வரும்பொழுது, மதச் சார்பற்ற கொள்கை காற்றில் பறந்து விடாதோ என்று ஐயுற்ற பேர்களெல்லாம், அதிசயிக்கும் வகையில் நாடெங்கும் ஒற்றுமை நிலவியது. மதச் சார்பற்ற நிலை மார்பு தட்டி வென்றது.

ஆயினும், மதம் என்பது சில வேளைகளில் வெறியினை ஊட்டவல்லது. ஆகையினால்தானே, "மதம் என்னும் பேய் பிடியாதிருக்க வேண்டும்" என்றார் சமரச சன்மார்க்கச் செல்வர் வள்ளலார். தொடர்ந்து, விழிப்போடிருந்து, சமரச நெறியை நினைப்பாலும், செயலாலும் வளர்க்க வேண்டியது நமது இன்றைய கடனாகும். மத அடிப்படையில் அரசியல் கட்சிகள் இயங்காதவாறு சட்டம் செய்யினும், மாறுவேடத்தில் மதவெறியர்கள் அரசியல் அரங்கத்தில் புகுதல் கூடும். மதம் என்பது தனி மனிதனையும், அவனைப் படைத்த ஆண்டவனையும் பிணிக்கும் சங்கிலியே அல்லாது, அரசியலில், பொதுவாழ்வில் அது குறுக்கிடு செய்தலாகாது என்ற கருத்து, இளைஞர் உள்ளத்தில் வேரூன்ற வேண்டும். பொருளாதாரத்தை முன்னிறுத்திய அரசியல் கொள்கையும், அறநெறியை விதந்தோதும் கல்வி முறையும், சாதி ஒழிப்பு, சமயக் கலப்பு ஆகியவற்றை வலியுறுத்தும் சமுதாய சீர்திருத்தப் பணிகளும், ஏற்பட்டு, வேற்றுமை சுருங்கும் ஒரு முற்போக்குச் சமுதாயத்தை விரைந்து படைக்கும்போதே, செக்குலரிசம் எனப்படும் மதச் சார்பற்ற நிலை முற்றிலும் வெற்றி பெறுதலாகும்.

(*சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தினரின் இசைவு பெற்று, வெளியிடப்பட்டது.

—ஆசிரியர்)

The following particulars regarding the ownership of "THIRUKOIL" the monthly Newspaper are published, as called for, by rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956.

## FORM IV

(See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Nungambakkam, Madras - 34 |
| 2. Periodicity of Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | A. V. Rao, The Manorama Press, Madras-5. |
| Nationality | : | Indian |
| Address | : | 39, M.J.B. St., Triplicane, Madras-5 |
| 4. Publisher's Name | : | Sri M. S. Sarangapani Mudaliar, B.A., B.L., Commissioner, H.R. & C.E. (Adm.) Department (Ex-Officio.) |
| Nationality | : | Indian |
| Address | : | Nungambakkam, Madras - 34 |
| 5. Editor's Name | : | Sri M. S. Sarangapani Mudaliar, B.A., B.L. (Ex-Officio) |
| Nationality | : | Indian |
| Address | : | Commissioner, H.R. & C.E. (Admn.) Department, Madras - 34 |
| 6. Name & address of individuals/ who own the newspaper and partners or share holders holding more than one per cent of the total capital | : | Sri M.S. Sarangani Mudaliar, B.A., B.L. Commissioner, H.R. & C.E. (Admn.) Dept., Madras - 34, (Ex-Officio.) |

I, M. S. Sarangapani Mudaliar, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) M.S. Sarangapani Mudaliar,
*Publisher.*

Dated : 12—3—1966.